# மாயக் கள்ளன்

பெ. தூரன்

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001



# MAYAK KALLAN


| | | |
|---|---|---|
| Subject | : | Story for Children |
| Author | : | Periaswami Thooran |
| Publishers | : | Palaniappa Brothers<br>Madras - 14, Tiruchy - 2, Salem - 1<br>Coimbatore - 1, Madurai - 1,<br>Erode - 1. |
| Printers | : | Asian Printers, Madras-600 014 |
| Price | : | Rs. 5-60 |
| First Edition | : | 14th November, 1961<br>(Children's day) |
| Fifth Edition | : | 1980 |

# 1. பூவும் பாம்பும்

ஆத்மரங்கன் என்று ஒரு வேடிக்கையான ஆள் இருந்தான். "ஆத்மரங்கா, நீ எந்த ஊர்?" என்று கேட்டால், "எனக்கு ஊரே கிடையாது; எல்லாம் என்னுடைய ஊர்தான்" என்று சொல்லுவான். "நீ எந்த ஊரிலிருந்து வந்தாய்?" என்று கேட்டால், "தெரியாது, நான் எங்கெங்கோ, எப்படி எப்படியோ போய்விட்டுக் கடைசியிலே கருவூரிலிருந்து இங்கே வந்தேன். என் சொந்த ஊர் தெரியாது" என்று சொல்லுவான். "ஊர் தெரியாவிட்டால் போகிறது! உன் தாய் தகப்பன் யார்? அவர்களையாவது சொல்லு" என்று யாராவது கேட்பார்கள். "தாயாரும் தெரியாது, தகப்பனாரும் தெரியாது. அவர்களை நான் பார்த்ததாகக்கூட நினைப்பில்லை" என்று பதில் சொல்லுவான்.



இப்படி அவன் பேசுவதைக் கேட்டுத்தான் அவனை ஒரு வேடிக்கையான பிறவி என்று எல்லோரும் கூறுவார்கள். அவர்கள் கூறுவது உண்மைதான். ஆத்மரங்கனைப் போல விசித்திரமான பிறவியே கிடையாது.

ஆத்மரங்கனுக்கு அவனுடைய தாய் தந்தையரைப்பற்றித் தெரியாவிட்டாலும் அவர்களை எப்படியாவது பார்க்க வேண்டும்

என்ற ஆசை மட்டும் இருந்தது. நாளாக நாளாக இந்த ஆசை அதிகமாகிக்கொண்டே வந்தது. அவர்கள் எங்கோ ஒரு மலையுச்சியிலே இருக்கிறார்கள் என்று மட்டும் அவனுக்கு ஞாபகம். சில பேர் அவனுக்கு அந்த மலையைப்பற்றியும் சொன்னார்கள். அந்த மலையின் உச்சிக்குப் போனால் அவர்களைப் பார்க்கலாம் என்று அவனுக்குத் தெரியும். அதனால் மலையின்மீது ஏறுவதற்கு அவன் நினைத்தான்.

ஆத்மரங்கன் ஒரு விசித்திரமான பிறவி என்று சொன்னேனல்லவா? அவனுக்கு ஓர் அற்புதமான சக்தியும் இருந்தது. வெவ்வேறு வகையான உருவம் எடுக்க அவனால் முடியும். அப்படி உருவம் எடுக்க அவனுக்கு யாரும் உதவி செய்ய வேண்டியதில்லை. அவனுடைய செயலைக்கொண்டே அவன் அப்படி உருவமெடுப்பான். மரம், பறவை, விலங்கு - இப்படி எந்த உருவம் வேண்டுமானாலும் அவன் எடுப்பதுண்டு.

மலையுச்சிக்குப் போய்த் தாயையும் தகப்பனையும் பார்க்க வேண்டுமென்ற ஆசையிருந்தாலும் அதற்காக ஆத்மரங்கன் நன்றாக முயற்சி செய்யமாட்டான். அவன் சோம்பேறி. ஏதாவது கஷ்டம் வந்தால் அந்தச் சமயத்தில் பெற்றோர்களை நினைத்துக்கொள்ளுவான். அவர்களிடம் போய்விட்டால் தொல்லையெல்லாம் தீர்ந்துபோகும் என்று எண்ணுவான். கஷ்டம் கொஞ்சம் குறைந்தால் அவனுக்குத் தாய் தந்தையரைப்பற்றிய நினைப்பும் குறைந்துவிடும்; சந்தோஷம் வந்துவிட்டால் தாய் தந்தையரை ஒரேயடியாக மறந்துவிடுவான்.

ஆனால், அவனுக்கு வாழ்க்கையில் அடிக்கடி பலவிதமான தொல்லைகள் ஏற்பட்டன. அந்தத் தொல்லைகளைப் போக்கிக் கொள்ளுவதற்கு மலையுச்சிக்குப் போக வேண்டுமென்று பல தடவை நினைத்தான். சிரமம் அதிகமில்லாமல் சுலபமான வழியிலே அங்கே போய்ச் சேரமுடியுமா என்று பார்த்தான். மலையடிவாரத்திற்குப் போய் அங்கு நின்றுகொண்டு யோசனை செய்தான்.

மலை மேலே பல பேர் ஏறிக்கொண்டிருந்தார்கள். எல்லோரும் மலையுச்சிக்குப் போகத்தான் முயற்சி செய்கிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்தது. சில பேர் அறுகம் புல்லைக் கட்டாகக் கட்டி எடுத்துக் கொண்டு சென்றார்கள். எதற்காக அறுகம்புல்லைக் கொண்டு போகிறார்கள் என்று ஆத்மரங்கனுக்குத் தெரியவில்லை.



இருந்தாலும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அறுகம்புல்லாக உருவமெடுத்துப் பாதையிலே இருந்தால் யாராவது அந்தப் புல்லைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு மலையுச்சிக்குப் போவார்கள். ஒரு விதமான சிரமமுமில்லாமல் பெற்றோரிடம் போய்விடலாம். நடக்க வேண்டிய அவசியமே இல்லை. ஒய்யாரமாக ஒருவருடைய தோளில் உட்கார்ந்துகொண்டு போய்விடலாம். இது தான் சரியான வழி என்று அவன் தீர்மானித்தான். உடனே அவன் அறுகம்புல்லாக வடிவெடுத்துக்கொண்டு மலைமேலேறும் பாதைக்குப் பக்கத்தில் காட்சியளித்தான். எத்தனையோ பேர் மலைமேல் ஏறிக்கொண்டிருந்தார்கள். ஆனால், ஒருவர் கூட அந்த அறுகம்புல்லைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. பல பேர் அரை மனத்தோடு மேலே ஏறினார்கள். அவர்கள் ஆத்மரங்கனைவிடச் சோம்பேறிகள் போலிருக்கிறது. அவர்கள் படிக்கட்டிலே அங்கங்கே உட்கார்ந்துவிட்டார்கள். ஒருசிலர் மட்டும் விடாமுயற்சியோடு மேல்நோக்கி நடந்தார்கள். ஆனால், யாருமே அந்த அறுகம்புல்லைத் தொடவில்லை.

கடைசியிலே, அங்கே ஒரு பெரிய எருமைக்கடா வந்தது. கன்னங்கரேலென்று அது பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. அதன் கண்கள் இரண்டும் தீப்பந்தங்கள் போல்

தோன்றின. அந்த எருமைக்கடா அந்த அறுகம்புல்லை லபக்கென்று கடித்து வாயில் போட்டுக்கொண்டு போய்விட்டது.

எருமையாவது மலையுச்சிக்குப் போகுமென்று ஆத்மரங்கன் எதிர்பார்த்தான். ஆனால், அது அப்படிச் செய்யவில்லை. அங்கே ஓர் ஆழமான பள்ளத்திலே சேறும் சகதியுமாகக் கிடந்தது. எருமைக்கடா அந்தச் சேற்றிலே போய்ப் படுத்துக் கொண்டு சுகமாக அசைபோடஆரம்பித்தது. ஆத்மரங்கனுக்கு ஒரே கஷ்டமாகப் போய்விட்டது. எந்திரத்தில் அரைபடுவது போல அவன் அதன் வாயிலே அரைபட்டுக்கொண்டிருந்தான்.



பிறகு, நல்லவேளையாக அந்த எருமை 'பொஸ் பொஸ்' என்று மூச்சு விட்டுக்கொண்டு தூங்க ஆரம்பித்தது. அந்தச் சமயம் பார்த்து, ஆத்மரங்கன் அதன் வாயை விட்டுத் 'தப்பினேன் பிழைத்தேன்' என்று ஓடிவந்து சேர்ந்தான். புல்லாக இருந்தது போதும் போதும் என்று ஆகிவிட்டது அவனுக்கு. இனிமேல் அந்த உருவமே எடுப்பதில்லை என்று அவன முடிவு செய்து கொண்டான்.

ஆத்மரங்கன் மறுபடியும் மலையடிவாரத்துக்கு வந்தான். மேலே ஏறுவதற்குச் சுலபமான வழியென்ன என்று மறுபடியும் எண்ணிப் பார்க்கலானான்.

சில பேர் பூக்களை எடுத்துக்கொண்டு மலைமேல் ஏறிக் கொண்டிருந்தார்கள். மலையுச்சியிலே யாருக்கோ அவற்றைக் கொடுப்பதற்குத்தான் கொண்டுபோகிறார்கள் என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் பூவாக உருவெடுத்துக் கொள்ள அவன் நினைத்தான். தாமரை, மல்லிகை, முல்லை, ரோஜா முதலான மலர்களை அவர்கள் கொண்டுசென்றார்கள். அவர்கள் கையில் இல்லாத ஒரு பூவாக உருவமெடுக்க வேண்டுமென்று ஆத்மரங்கனுக்குத் தோன்றியது. உடனே, கனகாம்பரப் பூவாக அவன் வழியிலே குலுங்கிக் கொண்டு நின்றான்.



ஆனால், மலைமேல் ஏறிக் கொண்டிருந்தவர்களில் ஒருவராவது அந்தப் பூவைத் தொடவில்லை. பூவுக்கு ஏக்கம் பிடித்துக் கொண்டது. ஏக்கத்தால் அது வாடத் தொடங்கியது.

அந்தச் சமயத்திலே ஒரு குரங்கு அங்கே மரக் கிளைகளில் தாவித் தாவி வந்து சேர்ந்தது. அது கனகாம்பரப் பூவைப் பார்த்ததும் ஆவலோடு அதைப் பறித்தது. ஏதோ நீளமான ஒரு பச்சைக் கொடியைப் பிடுங்கி, அதைத் தன் தலையிலே சுற்றி அதிலே பூவைச் செருகிக் கொண்டது. பூவுக்கும் அதைக் கண்டு முதலில் மகிழ்ச்சியாக இருந்தது. "இந்த அழகான குரங்குக்குப் பொருத்தமான அழகான பூ நான்தான்" என்று பெருமைப் பட்டது.

ஆனால், சற்று நேரத்திலே, குரங்கு தனது குரங்குப் புத்தியைக் காண்பிக்க ஆரம்பித்தது. மலையின் ஒரு பக்கத்திலே ஒரு 'கிடுகிடு' பாதாளம் இருந்தது. அதற்குள் சாய்ந்துகொண்டு

நிற்கும் ஒரு கிழட்டு மரம் உண்டு. அதிலே அந்தக் குரங்கு ஏறி, ஒரு கிளையில் உட்கார்ந்துகொண்டு, தனது தலையில் செருகியிருந்த பூவை எடுத்தது. அதைப் பல்லிலே கடித்து, இதழ் இதழாகப் பிய்த்து அந்தப் பாதாளத்திலே போட்டது. ஆத்மரங்கன் தொப்பென்று பாதாளத்திலே விழுந்து வெகு நேரம் அப்படியே மயங்கிக் கிடந்தான்.



பிறகு, எப்படியோ அவனுக்கு மூச்சு வந்தது. மெல்ல எழுந்து மலையடிவாரத்திற்கு ஓடி வந்தான். இந்தப் பூ வாழ்க்கையே வேண்டாம் என்று உறுதியாக முடிவு செய்து கொண்டான்.

ஆத்மரங்கன் மறுபடியும் யோசனை செய்தான். பிறருடைய உதவியை எதிர்பார்த்தால் தனது ஆசை நிறைவேறாது என்று அவனுக்குத் தோன்றியது. தனது சொந்த முயற்சியால் தான் மலையுச்சிக்குப் போக முடியும் என்றும் தெரிந்தது. இருந்தாலும், அதிகமான முயற்சி செய்ய அவனுக்கு விருப்பமில்லை. "மெல்ல மெல்ல ஊர்ந்து போனால் போதும்; உடம்பை எதற்குக் கஷ்டப்படுத்த வேண்டும்? ஆனால், இந்தத் தடவை புல்லைப் போலவோ பூவைப் போலவோ சாதுவாக இருக்கக் கூடாது. என்னைக் கண்டால் எல்லோரும் பயப்பட வேண்டும்.

அப்படி ஓர் உருவம் எடுக்க வேண்டும்" என்று அவன் நினைத்தான். உடனே நாகப்பாம்பாக அவன் மாறினான்.

அந்தப் பாம்பைக் கண்டவர்கள் எல்லாம் பயந்து அலறிக் கொண்டு ஓட்டமெடுத்தார்கள். தவளை, எலி முதலான பிராணிகளையெல்லாம் அது பிடித்துத் தின்றுகொண்டிருந்தது. சாதுவான பசுவைக் கண்டாலும் அது சீறிக்கொண்டு வந்து கொத்திக் கடிக்கும். அதன் விஷத்தால் ஒரு நிமிஷத்திலே மயங்கிக் கீழே விழுந்து மடிகின்றவர்களைக் கண்டு அது சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தது. மலையுச்சிக்குப்



போவதற்காக ஏற்பட்ட படிக்கட்டிலே அது கொஞ்ச தூரம் செல்லும். பிறகு, அங்கேயே படுத்துவிடும். யாராவது வந்தால் படமெடுத்துக்கொண்டு ஆடும். எல்லோரும் தன்னைக் கண்டு பயப்படுகிறதைக் கண்டு அதற்குத் தலைகால் தெரிய வில்லை. அத்தனை கர்வம் உண்டாயிற்று அதற்கு. தாய்தந்தை யரைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தையே அது விட்டு விட்டது.

இப்படியிருக்கும்போது அங்கே ஒரு பாம்பாட்டி வந்தான். அவன் மகுடியை எடுத்து, வாயில் வைத்து ஊதினான். மகுடியிலிருந்து இனிமையான இசை பிறந்தது. அது அந்தப் பாம்பை மயக்கிவிட்டது. அது ஊர்ந்து சென்று பாம்பாட்டியின்

முன்னுல் கண்களை மூடிக்கொண்டு நின்றது. அவன் மகுடியில் வாசிக்கும் பாட்டுக்குத் தக்கவாறு படமெடுத்து ஆடியது. படு என்று அவன் சொன்னுல் அது படுத்தது; ஆடு என்ருல் ஆடியது.

பாம்பாட்டி அந்தப் பாம்பை மயக்கிப் பிடித்து, ஒரு வட்ட மான பெட்டியில் போட்டு எடுத்துக்கொண்டு போய்விட்டான். பிறகு, அவன் அதன் விஷப்பல்லைப் பிடுங்கினுன். பெட்டிக்குள் ளேயே அடைபட்டுக் கிடக்கும்படி செய்தான்.

அரை வயிற்றுக்கும் போதாதபடி கொஞ்சமாகத் தீனி போட்டான்.

நாகப்பாம்புக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பாம் பாட்டியின் இஷ்டப்படியெல்லாம் அது ஆடிக்கொண்டிருந்தது.



பாம்பாட்டி அதை வைத்துக்கொண்டு காசு சம்பாதிக்க ஆரம்பித்தான். அவனிடம் ஒரு கீரியும் இருந்தது. பாம் பென்ருல் கீரிக்கு ஆகாது; அதைக் கடிக்கப் போகும். பாம்பும் கீரியைக் கண்டால் அதை எதிர்த்து நிற்கும். பாம்பாட்டி அவை இரண்டையும் சண்டை போடவிட்டான். பல பேர் அந்தச் சண்டையைப் பார்க்க வருவார்கள். பாம்பாட்டிக்குக் காசு நிறையக் கிடைக்கும்.

பாம்பு பல தடவை கீரியோடு சண்டைபோட வேண்டி யிருந்தது. அதனுல் கீரியை ஒன்றும் செய்ய முடியவில்லை. கீரி

தான் அதை நன்ருகக் கடிக்கும். பாவம், நாகப்பாம்பு மூர்ச்சை போட்டு விழுந்து மயங்கிக் கிடக்கும்.



இவ்வாறு பல தடவை கீரியால் கடியுண்டதால் அந்தப் பாம்புக்கு முக்கால்வாசி உயிர் போய்விட்டது. அதன் பலமும் போய்விட்டது. அதனுல், அதற்குக் கீரியோடு கொஞ்ச நேரங் கூடச் சண்டையிட முடியவில்லை. பாம்பாட்டி மகுடியை எடுத்து ஊதும்போது படமெடுத்து ஆடவும் முடியவில்லை. அந்தப் பாம்பு இனி உதவாது என்று அந்தப் பாம்பாட்டிக்குத் தெரிந்துவிட்டது. அதை எங்காவது போட்டுவிட அவன் நினைத்தான். ஒரு பக்கத்திலே காட்டுத்தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அதற்குள்ளே அவன் அந்தப் பாம்பைத் தூக்கி எறிந்தான். ஆத்மரங்கன் தீயினுள் துடித்துக்கொண்டு கிடந்தான்.

# 2. வனராஜன்

பாம்பாக உருவமெடுத்த ஆத்மரங்கன் காட்டுத் தீக்குள்ளே கிடந்து வெந்துகொண்டிருந்தான். தீயிலே அவன் உடம்பெல்லாம் கரிந்தது. நெருப்பின் சூடு தாங்காமல் அவன் துடித்தான். துள்ளித் துள்ளி விழுந்தான். விழுந்த இடமெல்லாம் சுட்டது. ஐயோ ஐயோ என்று கத்தினான். அந்தச் சமயத்திலே அவனுக்குப் பெற்றோரின் நினைப்பு வந்தது. அவர்களிடம் போயிருந்தால் இந்தத் துன்பமே வந்திருக்காது என்று அவனுக்குப் புலப்பட்டது. வீணாகக் காலங் கழித்துவிட்டோமே என்று அவன் வருந்தினான். நெருப்பைத் தாங்கமுடியாமல் அம்மா, அப்பா என்று வாய்விட்டுக் கதறி அழுதான்.

நல்ல வேளையாகத் திடீரென்று எங்கிருந்தோ மேகம் வந்தது. கொட்டுகொட்டென்று மழை கொட்டிற்று. காட்டுத்தீ யெல்லாம் அணைந்து போய்விட்டது. தப்பினேன், பிழைத்தேன் என்று ஆத்மரங்கன் அந்த இடத்தைவிட்டு மலையடி வாரத்திற்கு ஓட்டம் பிடித்தான்.

பாம்பைப் போலக் கொடிய உருவம் எடுக்கக் கூடாதென்று அவனுக்குத் தோன்றிற்று. பிறருக்குத் துன்பம் தருகின்ற பிறவியே வேண்டாம். எல்லோருக்கும் இன்பம் தருகின்ற பிறவி எடுப்பதுதான் நல்லது. அப்படிப் பிறவி எடுத்து மலையுச்சிக்குப் போகவேண்டும். இவ்வாறு அவன் எண்ணிக் கொண்டிருக்கும்போது, வானத்திலே ஐந்தாறு வெள்ளைக் கொக்குகள் ஒய்யாரமாகப் பறந்து சென்றன. அவற்றைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. பறவையாக உருவமெடுத்தால் சுலபமாக ஆகாயத்திலே பறந்து போக முடியும். மலையுச்சியை வெகு சீக்கிரத்தில் அடைந்துவிடலாம். யாருக்கும் துன்பம் கொடுக்க வேண்டிய தில்லை. அதுதான் சரியான வழியென்று ஆத்மரங்கன் நினைத்துக் குயிலாக மாறினான்.

# 11

அந்தக் குயில் இனிமையாகப் பாடியது. அதன் குரலைக் கேட்டு எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். மாமரத்தின் கிளைகளிலும், ஆலமரத்தின் கிளைகளிலும் அமர்ந்து, அது பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது.



மலைச்சாரலிலே பல வகையான மரங்கள் இருந்தன. அவற்றிலே சுவையான பழங்கள் பழுத்துத் தொங்கின. அந்தக் குயில் அவற்றையெல்லாம் தின்றுகொண்டு உல்லாசமாகக் கூகூவென்று தனது அழகிய குரலையெடுத்துக் கூவிக்கொண்டிருந்தது.

குயில் எப்பொழுதுமே சோம்பேறிப் பறவை. அது கூடு கட்டாது. சும்மா பாடிக்கொண்டே பறந்து திரியும். பெண் குயில் முட்டையிடுகின்ற தருணத்திலே காக்கையின் கூட்டைத் தேடிக்கொண்டு போகும். திருட்டுத்தனமாக அதில் முட்டையிட்டுவிட்டு ஓடிவிடும். காக்கைதான் அதன் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். எங்கெங்கோ சென்று, இரை தேடிக் கொண்டு வந்து, குஞ்சுகளுக்குக் கொடுத்து, அவற்றைக் காப்பாற்றும். இந்த வேலைகளையெல்லாம் குயில் செய்யாது. அது அத்தனை சோம்பேறி. திருட்டுத்தனமாக முட்டையிடும் குயில்களைக் கண்டால் காக்கைக்குப் பிடிக்குமா ? குயிலை எங்கு கண்டாலும் அது துரத்திக் கொத்த வரும்.

ஆத்மரங்கன் இயற்கையாகவே சோம்பேறி. அவன் குயிலாக மாறியதும் அவனுக்கு மேலும் அதிகமாகச் சோம்பல் ஏற்பட்டது. மலையுச்சிக்குப் போவதை மறந்தேவிட்டான். பழங்களைத் தின்பதும், பாட்டுப் பாடுவதுமாகக் காலங் கழித்தான்.

இளவேனிற்காலம் வந்தது. பூக்கள் எல்லாம் மலர்ந்து எங்கும் அழகாக இருந்தது. அந்தச் சமயத்திலே அங்கே

ஒரு பெண் குயில் வந்தது. அதனோடு சேர்ந்துகொண்டு ஆத்மரங்கனாகிய குயில் விளையாடிக்கொண்டிருந்தது. பெண் குயிலுக்கு முட்டையிடுகின்ற காலம் வந்தது. அப்போது இரண்டு குயில்களும் சேர்ந்து காக்கைக் கூட்டைத் தேடிக் கொண்டு போயின. அவற்றைக் கண்டு சில காக்கைகள் கோபத்தோடு துரத்திக்கொண்டு வந்தன. குயில்கள் எங்குப் போனாலும் அவற்றை விடாமல் பின்தொடர்ந்தன. ஆத்மரங்கனாகிய குயில், பெண் குயிலை விட்டுவிட்டுத் தனியாக ஓடிப் பல இடங்களில் ஒளிந்து பார்த்தது. ஆனால், தப்ப முடியவில்லை. காக்கைகள் அதைக் கண்டுபிடித்துத் தாக்கின. கடைசியில்,



குயில் களைத்துப்போய் விட்டது. அதனால் பறக்க முடியவில்லை. காக்கைகள் அதைக் கொத்து கொத்தென்று கொத்திச் சித்திரவதை செய்தன. அதன் உடம்பெல்லாம் காயம். காயத்திலிருந்து ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது. குயில் வலி பொறுக்க முடியாமல் மூர்ச்சைபோட்டு விழுந்தது. கீழேயிருந்த மலைப்பாறையிலே ஒரு பெரிய பிளவு இருந்தது. அதற்குள்ளே எப்பொழுதும் ஒரே இருட்டாக இருக்கும். குயில் அதற்குள்ளே தொப்பென்று விழுந்து கிடந்தது. அதை எறும்புகளும் ஈக்களும் வண்டுகளும் கடித்தன. குயில் மயக்கமாகவே வெகு காலம் கிடந்தது.

பிறகு, ஒருநாள் அந்தப் பாறைப் பிளவுக்குள்ளே எப்படியோ சூரிய வெளிச்சம் பாய்ந்தது. அந்த வெளிச்சத்தைக் கண்டு ஈக்களும் வண்டுகளும் ஓடி மறைந்துவிட்டன. குயிலுக்குக் கொஞ்சங்கொஞ்சமாக மூச்சு நன்றாக வந்தது. அது கண்ணை விழித்துப் பார்த்தது. அதற்கு ஒரே பயம். உடனே அங்கிருந்து மலையடிவாரம் போய்ச் சேர்ந்தது. இனிமேல் பறவை உருவமும் கூடாது என்று அது தீர்மானித்தது.

சிறுசிறு பிராணிகளால் ஏற்பட்ட துன்பத்தை நினைக்கும்போது ஆத்மரங்கனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அதனால், எந்தப் பிராணியும் அருகில் வருவதற்குப் பயப்படும்படியாக ஓர் உருவம் எடுத்துக்கொண்டு மலையுச்சிக்குப் போக வேண்டும் என்று அவன் நினைத்தான். மலைக் காட்டிலே தானே ராஜாவாக இருந்து, எல்லோரையும் அடக்கி நடத்தவும் அவனுக்கு ஆசை எழுந்தது. அதனால், சிங்கமாக உருவம் கொண்டான்.

அந்த உருவத்தை எடுத்ததும் சிங்கத்தின் குணமெல்லாம் அவனுக்கு வந்துவிட்டன. சிங்கம் பயங்கரமாகக் கர்ஜனை செய்தது. அந்தக் கர்ஜனையைக் கேட்டுக் காடெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கிற்று; மலை அதிர்ந்தது. சிங்கத்திற்கு ரத்த வெறி பிடித்துக் கொண்டது. அது மலையுச்சிக்குப் போகிற எண்ணத்தையெல்லாம் அடியோடு மறந்துவிட்டுத் தனக்கு முன்னால் தோன்றுகிற விலங்குகளையெல்லாம் அடித்துக் கொன்றுகொண்டிருந்தது.



அந்தச் சிங்கம் ஒரு குகையிலே படுத்துத் தூங்கும். திடீரென்று அதிலிருந்து வெளிவரும். பிறகு, மலையே அதிரும்படி கர்ஜனை செய்யும். முயல், மான், யானை முதலான விலங்குகளின் மேலே பாய்ந்து அவற்றைக் கொல்லும். அதன் குகைக்கு

முன்னுல் எலும்பு மலையாகக் குவியலாயிற்று. தனக்கு நிகர் ஒன்றுமே இல்லையென்று அது கர்வம் கொண்டது. யாரையும் மதிக்காமல் அது ஏதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தது. உலகமே தனக்குத்தான் சொந்தம் என்றும் அது நினைத்தது.

சிங்கம் ஒவ்வொரு திசையிலும் சென்று வேட்டையாடி வந்தது. கிழக்கு, தெற்கு, மேற்குத் திசைகளில் போன பிறகு அந்தச் சிங்கம் வடக்குப் பக்கமாகப் போயிற்று; அந்தத் திசையில் ஓரிடத்தில் பசும்புல் உயரமாக வளர்ந்து அடர்த்தியாக இருந்தது. புல்லுக்குள்ளே ஒரு சிங்கம் போனலும் வெளியே தெரியாமல் மறைந்து போகும் அளவுக்கு



உயரமாகப் புல் வளர்ந்திருந்தது. அதற்குள்ளே ஒரு மான் இரண்டு குட்டி போட்டு, அவற்றிற்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தது. மானுக்குத் தன் குட்டிகளை விட்டுப் பிரிய மனமே இல்லை. அவற்றிற்கு ஆபத்து வராமல் காப்பாற்ற வேண்டுமென்று அது பக்கத்திலேயே இருந்தது. இப்படி ஒரு நாளாயிற்று, இரண்டு நாளாயிற்று. அதற்குப் பசி எடுத்தது. தாகமும் ஏற்பட்டது. அதனுல் கொஞ்சம் புல் மேய்ந்துவிட்டுத் தண்ணீர் குடிக்கலாமென்று ஓர் ஓடையை நோக்கிச் சென்றது. பாதிவழி செல்லுகின்றபோதே அதற்குக் குட்டிகளின் நினைப்பு

வந்தது. குட்டிகளுக்கு ஏதாவது தீங்கு வந்துவிடுமோ என்ற கவலையுண்டாயிற்று. உடனே, திரும்பி வேகமாக ஓடிப்போய்க் குட்டிகளைப் பார்த்தது. அவற்றிற்கு ஒரு தீங்கும் நேரவில்லை. அவை சுகமாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தன. மானுக்குக் கவலை நீங்கியது. அது மறுபடியும் ஓடையை நோக்கிப் புறப்பட்டது. பாதி வழியில் மறுபடியும் திரும்பி வந்தது. இப்படிக் குட்டிகளின் நினைப்பாகவே அது கடைசியில் ஓடைக்கு வந்து சேர்ந்தது. அவசரம் அவசரமாகத் தண்ணீர் குடித்துவிட்டுக் குட்டிகளிடம் ஓடிப் போக வேண்டுமென்று அதற்கு ஆசை. அந்த ஆசையால் அது வேகமாகத் தண்ணீருக்குள் முன்கால்கள் இரண்டையும் வைத்துக்கொண்டு, குனிந்து தண்ணீரைக் குடிக்கத் தொடங்கியது. அந்தச் சமயத்தில், சிங்கம் அதன்மீது சளாரென்று பாய்ந்தது. ஒரே அடியில் அடித்து, மானைக் கொன்று, இழுத்துக்கொண்டு போய் விட்டது. சாகும்போதுகூட அந்த மான் தன் குட்டிகளை நினைத்துக் கொண்டே கதறி அழுதது.

இப்படியாகச் சிங்கம் அந்த மலைக்காட்டிலே விலங்குகளை வதை செய்துகொண்டு திரிந்தது. ஒரு நாள் அந்தக் காட்டிற்கு ஒரு வேட்டைக்காரன் வந்தான். கையிலே துப்பாக்கி வைத்திருந்தான். அந்தச் சிங்கத்தை வேட்டையாட வேண்டுமென்று அவனுக்கு ஆசை. அவன் பலவகைகளிலே சிங்கத்தைச் சுடுவதற்கு முயற்சி செய்தான். ஆனால், சிங்கம் அவனுக்கு அகப்படவில்லை; தந்திரமாகத் தப்பித்துக்கொண்டே இருந்தது.

அதனால், அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். சரிவாக இருந்த மலையின் பக்கத்திலே, வசதியான ஓரிடத்திலே, அவன் ஒரு கொழுத்த பசுவைக் கட்டி வைத்தான். பக்கத்திலே ஓர் உயரமான மரம் இருந்தது. அதிலே அடர்த்தியான கிளைகளுக்கு நடுவிலே ஓர் ஒளிகூடு செய்தான். இருட்டானதும் அவன் மரத்தின் மீதேறி, அந்த ஒளியும் கூட்டிற்குள்ளே பதுங்கிக்கொண்டான். கையிலே துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொண்டான்.

பசு பாவம், மலைக்காட்டிலே இருப்பதற்குப் பயந்து மிரண்டு கிடந்தது. இருட்டிலே ஏதாவது ஆபத்து வருமோ என்று அது நான்கு பக்கங்களிலும் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தது. எத்தனையோ விதமான சத்தங்களெல்லாம் காட்டிலே எழுந்தன. அவற்றைக் கேட்டுப் பழக்கமில்லாததால், பசு பயந்து மிரண்டு துள்ளிக் குதித்தது. ஆனால், கயிறு பலமாக இருந்ததால், அது கயிற்றை அறுத்துக்கொண்டு ஓட முடியவில்லை.



இப்படி அது பயந்து கிடக்கும்போது, சிங்கம் அங்கே வந்தது; நன்ருகக் கொழுத்திருந்த பசுவைக் கண்டதும் அதற்கு நாக்கிலே நீர் ஊறிற்று. அது ஒரே பாய்ச்சலாகப் பசுவின்மேல் பாய்ந்து, தனது முன் கால்களால் அதை அடித்து, மண்டையைப் பிளந்துவிட்டது. பசு உயிரற்றுக் கீழே விழுந்தது.

பிறகு, நிதானமாகச் சிங்கம் அந்தப் பசுவைத் தின்ன ஆரம்பித்தது. மரத்தின்மீது ஒளிந்திருந்த வேட்டைக்காரன் இதுவரையில் அசையாமல் சும்மா இருந்தான். சிங்கம்

பசுவைத் தின்னத் தொடங்கியதும் அவன் துப்பாக்கியை நீட்டினன். குறி வைத்துச் சிங்கத்தைச் சுட்டான். 'படார்' என்று துப்பாக்கி வெடித்தது. சிங்கத்தின் மார்பில் குண்டு பாய்ந்தது. ஆனல், சிங்கம் சாகவில்லை. அது கோபத்தோடு அண்ணாந்து பார்த்தது. அதனுடைய கண்கள் இரண்டும் தீப் பந்தங்கள் போல ஜொலித்தன. அது மரத்தின்மீதிருந்த வேட்டைக்காரனைப் பார்த்துவிட்டது. உடனே பெரிய கர்ஜனை செய்துகொண்டு அவன்மேல் பாய்ந்தது.



வேட்டைக்காரன் மறுபடியும் குறி வைத்துச் சுட்டான். இந்தத் தடவை குண்டு சிங்கத்தின் நெற்றியிலே பாய்ந்து, மூளைக்குள் புகுந்தது. சிங்கத்திற்கு ஒரே அதிர்ச்சி ஏற்பட்டது. அதன் உடம்பெல்லாம் நடுங்கிற்று. ஆனல், சிங்கம் பயப்பட வில்லை. கோபத்தால் கண்களை இறுக மூடிக்கொண்டு வேகமாக முன்னல் பாய்ந்தது.

மரத்தின்மீது தாவ அதனல் முடியவில்லை. குண்டு தலையில் பாய்ந்ததால் சிங்கத்தின் வேகம் குறைந்து போயிற்று. இருந்தாலும், அதன் கோபம் மட்டும் தணியவில்லை. ஆதலால்,

அது எவ்வித யோசனையும் செய்யாமல் தாவித் தாவி முன்னால் பாய்ந்துகொண்டே இருந்தது.

வேட்டைக்காரன் பசுவைக் கட்டிய இடம் ஒரு மலைச்சரிவு என்று முன்னமேயே சொன்னேன். அந்தச் சரிவிலே சிங்கம் இவ்வாறு பாய்ந்ததால், அங்கிருந்து அது கீழே மிகவும் ஆழமான ஒரு புதருக்குள்ளே சுருண்டு தொப்பென்று விழுந்தது. அதன் உடம்பிலிருந்த எலும்புகளெல்லாம் சுக்கு நூறாக நொறுங்கிப்போய்விட்டன. சிங்கம் பிணம்போல் அசைவற்றுக் கிடந்தது.

# 3. சின்னப் பாப்பா

சிங்கமாக உருவமெடுத்த ஆத்மரங்கன் அந்த ஆழமான புதருக்குள்ளே எலும்பு நொறுங்கிக் கிடந்தான் சிங்கத்தின் பலமெல்லாம் போய்விட்டது; அதன் மூச்சே நின்றுவிட்டது போல அது அசையாமல் கிடந்தது. கரு வண்டுகளும் தேள்களும் அதைக் கடித்தன. தனக்கு யாருமே நிகரில்லையென்று காட்டிலே ராஜாவைப் போலத் திரிந்த அந்தச் சிங்கத்தால் இப்பொழுது ஒன்றுமே செய்ய முடியவில்லை; வண்டுகளைக்கூட விரட்ட முடியவில்லை. தன்னுடைய பலமெல்லாம் உபயோகமில்லை என்று சிங்கத்திற்குத் தெரிந்துவிட்டது.

இவ்வாறு துன்பப்பட்டுக்கொண்டு சிங்கம் வெகு காலம் அந்த இருட்டுப் புதருக்குள்ளே கிடந்தது. அதனால் துன்பம் தாங்க முடியவில்லை. எத்தனையோ கொடுமைகள் செய்ததற்கு அப்போது தண்டனை அனுபவிப்பதாக அதற்குப் புலப்பட்டது. 'ஆமாம், எனக்கு நன்றாக வேணும். நான் எத்தனை கொலை செய்திருக்கிறேன். மான், பசு முதலான சாதுவான விலங்குகளையெல்லாம் கொன்றிருக்கிறேன். அதனால்தான் இப்பொழுது எனக்குப் பெரிய துன்பம் ஏற்பட்டிருக்கிறது' என்று அது தனக்குத் தானே சொல்லிக்கொண்டது. தாய் தந்தையரிடம் போயிருந்தால் சுகமாக இருந்திருக்கலாம்; அவர்களையும் மறந்துவிட்டதால்தான் தனக்குத் துன்பம் ஏற்பட்டிருப்பதாக அது நினைத்தது. 'உலகத்திலே மனித வடிவம்தான் சிறந்தது. மனிதன் எல்லாவற்றையும் அடக்கிவிடுகிறான். சிங்கத்தின் பலம்கூட அவனுக்கு முன்னால் நிற்க முடியாது. அந்த மனித வடிவமே எல்லாவற்றிலும் உயர்வானது. அதை எடுத்தால்தான் மலையுச்சியை அடைய முடியும்' என்று சிங்கத்திற்கு ஒரு புதிய அறிவு வந்தது.

இப்படி அறிவு வந்ததும் சிங்கத்தின் துன்பம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையலாயிற்று. புதரை மூடியிருந்த இருட்டும் நீங்கிற்று. இனிமேல் சிங்க உருவமே கூடாது என்று உறுதியாகத் தீர்மானம் செய்துகொண்டு, ஆத்மரங்கன் மலையடிவாரத்திற்கு வந்து சேர்ந்தான்.

அங்கே வந்து, ஒரு மனிதக் குழந்தையாக உருவமெடுத்தான். அப்படி உருவம் எடுத்தவுடனே அவனிடம் மாயக்கள்ளன் வந்து சேர்ந்தான். அவனைப்பற்றிக் குழந்தைக்கு ஒன்றும் தெரியாது. இருந்தாலும், அவனோடு சேர்ந்திருப்பது குழந்தைக்குப் பிரியமாகத் தோன்றியது.

குழந்தைக்கு முதலிலே மலையுச்சிக்குப் போய்த் தாய் தந்தையரை அடைய வேண்டுமென்ற ஆசை அதிகமாக இருந்தது. அதனால், அது உலகத்தைக் கவனிக்கவில்லை. மலையுச்சியில் இருப்பதாகவே எண்ணிக்கொண்டு உலகத்தை மறந்து கிடந்தது. எதையோ பார்த்துச் சிரிக்கும். யாருடனோ பேசுவதுபோல ஆ, ஊ என்று சொல்லும். பிறகு, யாரையோ காணாதது போலத் திடீரென்று அழத் தொடங்கிவிடும்.

இப்படியிருந்த குழந்தைக்கு மாயக்கள்ளன் விதவிதமாக ஆசைகளையெல்லாம் காட்டினான். உலகத்திலே உள்ள பொருள்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் காட்டி, அதன் கவனத்தைத் தன்னிடம் இழுத்தான். அவனுடைய தந்திரமெல்லாம் குழந்தைக்குத் தெரியாது. அவன் காட்டுகின்ற மாயக்காட்சிகளையெல்லாம் கண்டு குழந்தை சொக்கிப்போய்விட்டது. அவனுடைய மாய வலையில் சிக்கிக்கொண்டது.

இருந்தாலும், குழந்தை மலையுச்சியை மறந்துவிடவில்லை. அதை நினைத்துக்கொண்டு ஒரு நாள் அது விடாமல் அழத் தொடங்கிற்று. அதைக் கண்டு மாயக்கள்ளன் அதற்கு ஓர் அழகான கதை சொல்ல ஆரம்பித்தான். கதையென்றால் குழந்தைக்குப் பிரியம். அதனால் அது அழுகையை நிறுத்திவிட்டுக் கதையைக் கேட்க ஆரம்பித்தது. மாயக்கள்ளன் கதை சொல்லுகிறான்:—

ஓர் அழகான நந்தவனம் இருந்தது. அதிலே அதிசய மான பூவெல்லாம் நிறைய இருக்கும். அங்கே எப்பொழுதும் வாசனை கம்மென்று வீசும். எப்பொழுதும் யாரோ இனிமை யாகப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அந்த நந்தவனத்திலே எத்தனையோ குழந்தைகள் சந்தோஷமாக விளையாடிக்கொண் டிருந்தன. எல்லாம் அழகான குழந்தைகள். அவைகள் எப்பொழுதும் சிரித்துக்கொண்டே இருக்கும். விளையாடு வதற்கு என்ன வேண்டுமானாலும் அவைகளுக்குக் கிடைத்தது. அதனால் அவைகள் அப்படிச் சிரித்துக்கொண்டே இருந்தன.

அந்தக் குழந்தைகளிலே ஒரு குழந்தைக்குச் சின்னப் பாப்பா என்று பெயர். ஒரு நாள் திடீரென்று ஒரு பெரிய கழுகு, எங்கிருந்தோ பறந்து வந்தது. அது சின்னப் பாப்பாவைத்



தூக்கிக் கொண்டு வானத்திலே பறந்து போய்விட்டது. அது போன இடத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அந்தக் கழுகு சின்னப் பாப்பாவைத் தூக்கிக்கொண்டு போய், ஓர் இருண்ட காட்டுக்குள்ளே போட்டுவிட்டது. உயரத்திலே இருந்து சின்னப் பாப்பா கீழே விழும்போது அதற்கு ஒரே பயமாக இருந்தது. ‘வீர் வீர்’ என்று கத்திவிட்டது. ஆனால், சின்னப் பாப்பா கீழே பொத்தென்று விழாதபடி யாரோ மெதுவாக மடியிலே தாங்கிக்கொண்டார்கள். அதனால் சின்னப் பாப்பா சுகமாகப் படுத்துத் தூங்கிவிட்டது. அப்படியே அது மாதக் கணக்காகப் படுத்திருந்தது.

பிறகு, அது கண்ணைத் திறந்து பார்க்கிற போது எங்கும் வெளிச்சமாக இருந்தது. அந்த இடத்தைச் சின்னப் பாப்பா முன்னால் பார்த்ததில்லை. எல்லாம் புதுமையாக இருந்தது. பாப்பாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அதற்கு மறுபடியும் பயம் உண்டாயிற்று. அது வாய்விட்டு அழத்தொடங்கிற்று. அந்தச் சமயத்திலே அங்கே ஒரு தேவதை வந்தது. பாப்பாவுக்கு வேடிக்கையெல்லாம் காட்ட ஆரம்பித்தது. ஒரு குளத்திலே செந்தாமரைப் பூக்கள் அழகாகப் பூத்திருந்தன. சின்னப் பாப்பாவை ஒரு தாமரைப்பூவின்மேல் கொண்டுபோய் அந்தத் தேவதை வைத்தது. தாமரைப்பூ தண்ணீரில் ஆடித் தாலாட்ட ஆரம்பித்தது. உடனே சின்னப் பாப்பா ஓர் அழகான பொன்வண்டாக மாறித் தாமரைப்பூவிலே தேன் குடித்துவிட்டுச் சுகமாகப் படுத்துக்கொண்டிருந்தது.



அந்தச் சமயம் பார்த்து அங்கே ஒரு மந்திரவாதி வந்தான்: அவன் சின்னப் பாப்பாவைத் தூக்கிக்கொண்டு போக ஒரு தந்திரம் செய்தான். அவன் மந்திரக்கோலை எடுத்துத் தட்டினான். உடனே அவன் ஒரு புதுவிதமான தாமரைப் பூவாக உருவமெடுத்தான். குளத்திலே இருந்த தாமரைப்பூக்களெல்லாம் சிவப்பாக இருந்தன. இந்தப் புதிய தாமரைப்பூ நீல



நிறமாக இருந்தது. அது மெதுவாகத் தண்ணீரில் மிதந்து கொண்டே, சின்னப் பாப்பா படுத்துக்கொண்டிருந்த செந்தா மரைப்பூவினிடம் சென்றது.

சின்னப் பாப்பாவுக்கு நீலத் தாமரையைக் கண்டதும் அதன்மேல் ஆசை உண்டாயிற்று. சின்னப் பாப்பா பொன் வண்டாக மாறியிருந்ததல்லவா? அந்தப் பொன்வண்டு இறக்கையை விரித்துப் பறந்து வந்து, நீலத்தாமரையின் மேல் உட்கார்ந்தது. உடனே நீலத்தாமரை அதன் இதழ்களையெல்லாம் மூடி, அந்தப் பொன்வண்டை இதழ்களுக்குள்ளேயே சிறைப்பிடித்துக்கொண்டு தண்ணீருக்குள் முழுகிவிட்டது.

நீலத்தாமரை தண்ணீருக்குள் முழுகியதும், ஒரு கெண்டை மீனாக மாறிக்கொண்டது. பொன் வண்டாக இருந்த சின்னப் பாப்பா அதன் வயிற்றிலே கிடந்து திண்டாடியது.



மந்திரவாதியின் தந்திரத்தை அறிந்த தேவதை, ஒரு பெரிய சுறுமீனாக வடிவவெடுத்துக் குளத் திலே பாய்ந்து, முழுகிக் கெண்டை மீனைத் துரத்திற்று. கெண்டை மீன் பயந்து நடுநடுங்கித் தண்ணீரை விட்டு வெளியே பாய்ந்தது. வெளியே பாய்ந்ததும் அது ஒரு சிட்டுக்குருவியாகமாறி, ஒரு பெரிய மாமரத்தைநோக்கிப் பறந்தது. இதைக் கண்டு தேவதை, பருந்தாக வடிவமெடுத்துப் பின்னாலேயே வந்தது.

மந்திரவாதி, சிட்டுக்குருவி வடிவத்தை விட்டுவிட்டு, மா மரத்தின் கிளையொன்றிலே ஒரு மாம்பழமாகத் தொங்கினான். சின்னப் பாப்பா அதன் உள்ளே வண்டாகக் கிடந்தது. அதற்கு மூச்சு விடக்கூட முடியவில்லை.

மந்திரவாதியின் தந்திரம் தேவதைக்குத் தெரியாமலிருக்குமா ? தேவதை உடனே ஒரு அணிலாக மாறி, மாம்பழத்தைக் கடிக்கத் துள்ளித்துள்ளி மரக்கிளைகளில் ஓடிற்று.



மந்திரவாதி உடனே ஒரு புருவாக உருவமெடுத்து வானத்திலே வேகமாகப் பறந்தான். தேவதை ராஜாளியாக மாறிப் பின்தொடர்ந்தது. ராஜாளியைக் கண்டால் புருவுக்கு ரொம்பப் பயம். புருவாக வடிவமெடுத்த மந்திரவாதி, தன் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டது என்று அறிந்து, நடுநடுங்கிக் கலங்கினன். தன் வயிற்றுக்குள்ளிருக்கும் சின்னப் பாப்பாவை விட்டால்தான் தப்ப முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. அதனால், புருவாக மாறிய அவன், தன் வயிற்றிலிருந்த வண்டை வாய்க்குக் கொண்டுவந்து, கீழே துப்பிவிட்டுப் பறந்தோடினன்.



வண்டு இதுவரையிலும் மூச்சு விடமுடியாமல் துன்பப் பட்டுக்கொண்டிருந்தது. அதனல் அது மயங்கிப்போய்விட்டது. புருவின் வாயிலிருந்து வெளிப்பட்ட பிறகும் அதன் மயக்கம் தெளியவில்லை. சிறகை விரித்துப் பறக்கவும் அதற்கு முடியவில்லை. ஆதலால், அது உயரத்திலிருந்து கீழே வேகமாக விழுந்துகொண்டிருந்தது. அதைக் கண்டு தேவதை புருவைத்

துரத்திப் பிடிப்பதை விட்டுவிட்டு, ஒரு வண்ணத்துப்பூச்சியாக (வண்ணாத்திப்பூச்சியாக) வடிவமெடுத்து வேகமாக வந்து, கீழே விழுந்துகொண்டிருந்த வண்டைத் தன் சிறகுகளுக்கு இடையிலே தாங்கிக்கொண்டது.

அந்த வண்ணத்துப்பூச்சியின் சிறகிலே எத்தனையோ அழகான வர்ணங்கள் எல்லாம் இருந்தன. அதன் உடம்பே பட்டுப்போல மெதுவாக இருந்தது. அதைக் கண்டு பொன் வண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

வண்ணத்துப்பூச்சி பொன்வண்டைத் தாங்கிக்கொண்டு, வானத்திலே மெதுவாகப் பறந்து சென்று, அதற்குப் பல விதமான காட்சிகளையெல்லாம் காட்டிற்று. பொன்வண்டுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அது தனது சிறகை விரித்துப் பறப்பது போல அசைத்துப் பலவிதமான ரீங்காரம் செய்து கொண்டிருந்தது.

கடைசியாகத் தேவதை சின்னப் பாப்பாவைப் பத்திரமாக அதன் அம்மாவிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. சின்னப் பாப்பா தாயின் மடியிலே படுத்துக்கொண்டு, குதூகலமாகக் கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு, விளையாடிக்கொண்டு சந்தோஷமாக இருந்தது.

மாயக்கள்ளன் சொன்ன இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டே, ஆத்மரங்கனாகிய குழந்தை நன்றாகத் தூங்கி விட்டது. அதைக் கண்ட மாயக்கள்ளன் மகிழ்ச்சியடைந்தான். "இந்தக் குழந்தை நான் சொன்ன கதையைக் கேட்டு மயங்கி, என் மாய வலையில் விழுந்துவிட்டது. இனிமேல் இது என் பிடியை விட்டுத் தப்பிப் போக முடியாது" என்று கூறிக் கொண்டு, உரக்கச் சிரித்தான். அவனுடைய முகத்திலே வஞ்சகமான பார்வை தோன்றிற்று. தனக்கு வெற்றி கிடைத்துவிட்டதாக அவன் துள்ளிக் குதித்தான். "இனி மேல் இந்தக் குழந்தை என்றைக்கும் எனக்கு அடிமையாக இருக்கும். இது என் மாய வலையில் மாட்டிக்கொண்டது" என்று மறுபடியும் சொல்லிக்கொண்டு சிரித்தான்.

# 4. தந்திரக் கதை

குழந்தையாக இருந்த ஆத்மரங்கனுக்கு மாயக்கள்ளன் பலவிதமான வேடிக்கைகளையெல்லாம் காட்டிக்கொண்டிருந்தான். அதனால் ஆத்மரங்கன் மலையுச்சியை மறந்துவிட்டு உலகப் பொருள்களிலே கவனத்தைச் செலுத்தலானான். மாயக்கள்ளன் அவனைத் தனது மாய வலைக்குள்ளே நன்றாக இறுக்கிக் கட்ட முயற்சி செய்துகொண்டிருந்தான். மாயக்கள்ளனுடைய வலை, சிலந்திக் கூடு போல், மெதுவாக ஒவ்வொரு நாளும் அந்தக் குழந்தையைச் சுற்றிப் படர்ந்தது. முதலில் லேசாக இருந்த வலை, நாளாக ஆகக் கெட்டியாக மாறலாயிற்று.

இருந்தாலும், அந்தக் குழந்தை மலையுச்சியை முற்றிலும் மறந்துவிடவில்லை. ஒவ்வொரு சமயத்தில் அதை நினைத்துக்கொண்டு அது ஓயாமல் அழத்தொடங்கும். குழந்தை ஏனப்படி அழுகிறதென்று யாருக்குமே தெரியாது. ஆனால், குழந்தைமட்டும் அழுதுகொண்டேயிருக்கும். அந்தச் சமயத்திலே மாயக்கள்ளன் அதற்கு ஏதாவது வேடிக்கை காட்டி, அதன் அழுகையை நிறுத்த முயல்வான். மலையுச்சியை மறக்கும்படி செய்வான். இப்படிச் செய்து ஒரு தடவை குழந்தையை நன்றாகத் தூங்கும்படி சூழ்ச்சி செய்துவிட்டான்.

குழந்தையாகவே இருந்தால் மலையுச்சிக்குப் போக முடியாது என்று ஆத்மரங்கனுக்குத் தெரிந்துவிட்டது. சிறு பையனாக இருந்தால் மலைப்படிகளிலே, யாருடைய உதவியுமில்லாமல் ஏற முடியும் என்று அவனுக்குத் தோன்றியது. குழந்தையாக இருந்தால் அப்படித் தானாகவே ஏற முடியாது என்றும் அவன் நினைத்தான். அதனால் அவன் பன்னிரண்டு வயதுள்ள சிறுவனாக மாறினான்.

சிறுவனாக மாறியதும் அவன் மலையடிவாரத்திற்கு ஓடினான். மலைப்படிகளிலே சுறுசுறுப்போடு காலெடுத்து வைத்தான். மலையேறுவது முதலில் அவனுக்கு விளையாட்டாகத் தோன்

றியது. நான்கு பக்கங்களிலும் உள்ள காட்சிகளைப் பார்த்துக் கொண்டே அவன் உல்லாசமாகப் படிக்கட்டுகளில் கால் வைத்து ஏறினன். ஆனல், விரைவிலே அவனுக்குக் களைப்பு ஏற்பட்டது. கால்கள் வலியெடுத்தன. அவன் சோர்ந்து



போனன். அவனேடு கூடவே மறைவாக இதுவரையிலும் வந்துகொண்டிருந்த மாயக்கள்ளன், அந்தச் சமயம் பார்த்து அவன் முன்னல் வந்து நின்றன். அவனைப்பற்றிச் சிறுவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவனுடைய மாயவலையைப்பற்றியும் அவனுக்கு நினைப்பில்லை.

“மலையேறுவதற்கு உனக்குக் கால் வலிக்கிறதா?” என்று மாயக்கள்ளன் கேட்டான். மிகவும் அன்புள்ளவன் போல அவன் பாசாங்கு செய்தான். “ஆமாம்” என்று சிறுவன் தலையை அசைத்தான்.

“நான் உனக்குத் துணையாகக் கூடவே வருகிறேன். நல்ல நல்ல கதைகளும் சொல்லுகிறேன்” என்று மாயக்கள்ளன் சொன்னன்.

சிறுவனுக்கு அவனுடைய பேச்சு மகிழ்ச்சி அளித்தது. பலவகையான கதைகளைக் கேட்கவும் அவனுக்கு ஆசை உண்டாயிற்று. “தயவு செய்து கதை சொல்லு, எனக்குத் துணையாகவும் வா” என்று சிறுவன் ஆவலோடு பதில் பேசினன்.

"நான் கதை சொல்லிக்கொண்டே உன் கூடவே வருகிறேன். ஆனால், நான் கதை சொல்லுவதற்கும், உன்கூட வருவதற்கும் ஒரு நிபந்தனை உண்டு. அதற்கு நீ சம்மதித்தால் தான் நான் கதை சொல்லுவேன்" என்றான் மாயக்கள்ளன். சிறுவன் தனது நிபந்தனையை ஏற்றுக்கொள்வான் என்று மாயக் கள்ளனுக்குத் தெரியும். இருந்தாலும், அவனிடம் வாக்குறுதி பெற வேண்டும் என்று அவன் அப்படிக் கேட்டான். ஆத்மரங்கனை மலையுச்சிக்குப் போகவிடாமல் தடுக்க வேண்டும் என்பது அவனுடைய எண்ணம். மலையுச்சிக்குப் போய்விட்டால் மாயக்கள்ளனுடைய மாயமெல்லாம் அவனுக்குத் தெரிந்து விடும். அதனால் மாயக்கள்ளன் இப்படிச் சூழ்ச்சி செய்தான். அது ஆத்மரங்கனாகிய சிறுவனுக்குத் தெரியவில்லை.

"என்ன நிபந்தனை? அதைச் சொல்" என்று கேட்டான் சிறுவன்.

"நான் கதை சொல்லிக்கொண்டே உன்கூட மலைமேல் ஏறுவேன். நீ விடாது மலையில் ஏறும் வரையில் நானும் ஏறுவேன். ஆனால், நீ சோர்வடைந்து வழியில் படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டால் உடனே நான் உன்னைக் கீழே மலையடிவாரத்திற்குக் கொண்டுபோய்விடுவேன். இந்த நிபந்தனையை நீ ஒப்புக்கொள்ள வேண்டும்" என்றான் மாயக் கள்ளன்.

சிறுவனுக்கு அந்த நிபந்தனைக் கஷ்டமானதாகத் தோன்றவில்லை. "நான் எதற்குத் தூங்கப்போகிறேன்? கதை கேட்டுக்கொண்டிருந்தால் எனக்குத் தூக்கமே வராது. களைப்பும் ஏற்படாது. விடாமல் மலைமேல் ஏறிக்கொண்டே இருக்கலாம்" என்று அவனுக்குத் தோன்றியது. அதனால் உடனே அவன் கொஞ்சமும் தயக்கமில்லாமல் மாயக்கள்ளனுடைய நிபந்தனையை ஏற்றுக்கொண்டான்.

மாயக்கள்ளன் தனது எண்ணம் பலித்ததென்று மகிழ்ச்சியோடு கதைச் சொல்லத் தொடங்கினான். கதையைக் கேட்டுக் கொண்டே சிறுவன் மலைமீது ஏறலானான். மாயக்கள்ளனும் அவன் கூடவே வந்துகொண்டே கதையைச் சொல்லிக்கொண்டிருந்தான்

"ஓர் ஊரிலே முத்து என்று ஒரு பையன் இருந்தான். அவனுக்குத் தகப்பனார் இல்லை, தாய் மட்டும் இருந்தாள். அவள் மிகவும் ஏழை. இருந்தாலும் அவள் கஷ்டப்பட்டுக் கூலி வேலை செய்து முத்துவைச் செல்லமாக வளர்த்து வந்தாள். அவன் நன்றாகப் படித்து வாழ்க்கையிலே உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டும் என்பது அவளுடைய ஆசை. அதற்காக அவள் எவ்வளவு பெரிய சிரமத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தாள். அவள் அரை வயிறு கஞ்சி தான் குடிப்பாள். ஆனால்,முத்துவுக்கு நல்ல நல்ல பண்டங்களை யெல்லாம் செய்து கொடுப்பாள். அவள் கிழிந்த சேலையைத் தைத்துக் கட்டிக்கொள்ளுவாள். முத்துவுக்கு நல்ல உடைகள் வாங்கித் தருவாள். இப்படியெல்லாம் அவள் முத்துவை அன்போடும் ஆசையோடும் வளர்த்து வந்தாள். பள்ளிக் கூடத்திற்குத் தவறாது தினமும் அனுப்புவாள்.

ஆனால், முத்து சரியாகப் பள்ளிக்கூடம் போகமாட்டான். ஒரு நாளைக்குப் பள்ளிக்குப் போனால் அடுத்த நாள் எங்காவது போய்விடுவான். பள்ளிக்கூடம் போவது போல் வீட்டிலிருந்து புறப்படுவான். பிறகு,காடுமேடெல்லாம் சுற்றிவிட்டுப் பள்ளிக் கூடம் விடுகின்ற நேரம் பார்த்து வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவான். அவன் எங்கே போகிறானென்று யாருக்கும் தெரியாது. 'ஏன் நேற்றுப் பள்ளிக்கு வரவில்லை?' என்று உபாத்தியார் கேட்டால், ஏதாவது காரணம் சொல்லித் தப்பித்துக்கொள்வான். "அம்மாவுக்குக்காய்ச்சல்; அதனால் நான் வீட்டிலேயே இருந்து அம்மாவைக் கவனித்தேன்" என்று பொய் சொல்லுவான்.



முத்துவிடம் ஒரு நாய் இருந்தது. பார்ப்பதற்கு அது அழகாக இருக்கும். அதன் உடம்பெல்லாம் பளபளப்பான

மயிர் அடர்த்தியாக வளர்ந்து அதன் அழகை அதிகப் படுத்திற்று. கறுப்பு நிறமும் வெள்ளை நிறமும் மாறி மாறி அதன் உடம்பிலே அழகாக இருந்தன. அந்த நாய்க்குச் சடையன் என்று முத்து பெயர் வைத்திருந்தான்.

சடையன் எப்பொழுதும் முத்துவிடமே இருக்கும். அவன் போகின்ற இடங்களுக்கெல்லாம் அது போகும். முத்து பள்ளிக்கூடம் போனால் அது வெளியிலே அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கும். இரவிலே படுத்து தூங்கும் போது கூட அது அவனை விட்டுப் பிரியாது.

முத்து மரமேறுவதிலே கெட்டிக்காரன். எவ்வளவு உயரமான மரமாக இருந்தாலும் அவன் அதன்மேலேறி உச்சாணிக்குச் சென்றுவிடுவான். அவன் மரத்திலேறும்போது சடையன் மரத்தடியில் நின்று கவலையோடு பார்த்துக்கொண் டிருக்கும். முத்து கீழே விழுந்துவிடக்கூடாது என்றுதான் அதற்குக் கவலை. சில வேளைகளில் அது கவலையால் குரைத்துக் கொண்டு மரத்தடியில் அங்குமிங்கும் ஓடும். கீழே இறங்கி வரும்படி முத்துவுக்குச் சொல்லுவது போலக் கத்தும். 'சடையா, கவலைப்படாதே. நான் விழமாட்டேன்' என்று முத்து கூறுவான். சடையன் தன்னிடம் மிக அன்போ டிருப்பதை அறிந்த முத்துவுக்கு ஒரே ஆனந்தம்.

முத்து பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் செல்லாததால் அவனுக்குப் படிப்பு நன்றாக வரவில்லை. அதனால் அவனோடு பள்ளியில் சேர்ந்து எழுதப் படிக்கத் தொடங்கியவர்கள் ஏழாம் வகுப்புக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால், முத்து மட்டும் மூன்றாம் வகுப்பில் இருந்தான். மூன்றாம் வகுப்பில் படிப்பவர்கள் எல்லாம் சிறு பிள்ளைகள். முத்து உயரமாக வளர்ந்து பெரியவனாக இருந்தான். சிறுபிள்ளைகளோடு ஒரே வகுப்பில் உட்கார்ந்து படிப்பது அவனுக்கு அவமானமாக இருந்தது. மேலும், வகுப்பிலே உபாத்தியார் கேட்கும் கேள்வி களுக்கு அந்தப் பிள்ளைகள் அநேகமாகச் சரியான விடை கூறி விடுவார்கள்; முத்துவால் ஒரு கேள்விக்கும் பதில் கூற முடியாது; அதனால், அவனை எல்லோரும் மக்குமுத்து என்று

கேலி செய்வார்கள். அப்படிச் சிறுபிள்ளைகள் கேலி செய்யும் போதும் அவனுக்கு மேலும் அவமானமாக இருக்கும்.

ஒரு நாள் மாலை நேரத்திலே, பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலிருந்த மைதானத்தில் பல பேர் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் சில சிறு பிள்ளைகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு முத்துவை வெகுநேரம் வரையில் கேலி செய்தார்கள். 'மக்கு முத்து, மக்கு முத்து' என்று கூவினார்கள். 'மக்கு முத்து, நாலும் நாலும் எத்தனை, சொல்லு' என்று கூவிக் கொண்டே ஒரு குண்டுப் பையன் முத்துவிடம் வந்தான். 'இது கூட மக்கு முத்துவுக்குத் தெரியவில்லை' என்று மற்ற பிள்ளைகள் சொல்லி உரக்கச் சிரித்தார்கள். முத்துவுக்குக் கோபம் வந்துவிட்டது. குண்டுப் பையனை அவன் ஓங்கி அடித்தான். குண்டுப் பையன் சிரிப்பதை நிறுத்திவிட்டுக் கண்ணைப் பிசைந்துகொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். உடனே,மற்ற பிள்ளைகள் எல்லோரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

அந்தப் பிள்ளைகள் நேராக முத்துவின் வீட்டுக்குப் போய், அதற்கு முன்னால் நின்றுகொண்டு, 'மக்கு முத்து வீடு, மக்கு முத்து வீடு' என்று சத்தம் போட்டார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டு முத்துவின் தாயார் வெளியே வந்து பார்த்தாள்.

'ஏன் என் மகனை மக்கு என்று சொல்லுகிறீர்கள்?' என்று அவள் கோபத்தோடு கேட்டாள்.

'உன் மகன் மக்குத்தான். நாலும் நாலும் எத்தனை என்று கூட அவனுக்குத் தெரியாது. அவன் சுத்த மக்கு' என்று சொல்லிவிட்டுச் சிறுவர்கள் ஓடிவிட்டார்கள்.

இதைக் கேட்டு அவள் மிகுந்த விசனமடைந்தாள். தன் மகன் மக்காக இருக்கிறானென்று நினைத்து,வீட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்து, கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தாள். முத்து வீட்டுக்குத் திரும்பி வந்ததையும் அவள் கவனிக்கவில்லை.

தன் தாய் கண்ணீர் விடுவதை முத்து பார்த்துவிட்டான். 'ஏனம்மா அழுகிறாய்?' என்று அவன் கவலையோடு கேட்டான்.

முதலில் அவள் பதில் பேசவில்லை. முத்து திருப்பித் திருப்பி அவளைக் கேட்டுக்கொண்டே இருந்தான்.



'முத்து, உன்னை மக்கென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அதைக் கேட்டுத்தான் எனக்கு அழுகை வந்துவிட்டது' என்று தாய் சொன்னாள்.

அதைக் கேட்டு முத்து மிகவும் வருத்தமடைந்தான். தான் மக்கல்லவென்று தாய்க்குக் காட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டான். தான் கெட்டிக்காரன் என்று பெயர் வாங்காமல் வீட்டுக்குள் நுழைவதில்லை என்று அவன் தீர்மானம் செய்துகொண்டு தாயிடம் சொல்லாமல் வெளியே கிளம்பினான்.

வெளியே இருட்டாக இருந்தது. அதைப்பற்றி அவன் கவலைப்படாமல் கால் போகின்ற திசையிலேயே போகலானான். சடையன் அவன் பின்னால் ஓடி வந்தது. 'சடையா, நீ வீட்டுக்குப் போ. நான் கெட்டிக்காரனாக ஆன பிறகு திரும்பி வருகிறேன்' என்று அவன் அதை விரட்டினான். ஆனால்,சடையன் திரும்பிப்போகாமல் பின்னாலேயே வந்துகொண்டிருந்தது. முத்து ஒரு கல்லை எடுத்து அதன்மீது வீசினான். அப்பொழுதும் அது போகவில்லை. கல்லடியை வாங்கிக்கொண்டு முனமுனுத்துக்கொண்டே அது பின்னால் வந்தது. சடையனுடைய ஆசையைக் கெடுக்க அவனுக்கு மனம் வரவில்லை.

'சரி, வா, சடையா, நீதான் எனக்குத் துணை' என்று அவன் அன்போடு சொன்னான்.

சடையன் வாலைக் குழைத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு அவனோடு சென்றது.

முத்து இரவில் வெகுநேரம் வரையில் நடந்தான். அவனுக்குக் கால் வலியெடுத்தது. தூக்கத்தால் கண்கள் சுழன்றன. அதனால் அவன் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்க லானான். சடையன் அவனுக்குக் காவலாகப் பக்கத்தில் இருந்தது.

அடுத்த நாள் பொழுது நன்றாக விடியுமளவும் முத்து தூங்கிவிட்டான். அவன் எழுந்திருக்கும்போது பல பேர் கழனி யில் வேலை செய்யச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் முத்துவிடம் வந்து 'தம்பி, இந்த மரத்தடியிலா படுத்துத் தூங்கினாய்?' என்று கேட்டான்.

'ஆமாம்' என்று கொட்டாவி விட்டுக்கொண்டே முத்து பதில் சொன்னான்.

'நீ நல்ல வேளையாக உயிர் தப்பினாய். இங்கே படுத்துத் தூங்கியிருக்கவே கூடாது' என்றான் அந்த மனிதன்.

'ஏன்?' என்று முத்து ஆச்சரியத்தோடு கேட்டான்.

'தம்பி, அதோ தெரிகிறதே அந்த ஊருக்குள்ளே தினந் தோறும் இரவு வேளையில் ஒரு புலி வருகிறது. யாருக்கும் தெரியாமல் அது வந்து, ஆடுமாடுகளையும் மனிதர்களையும் கொன்று தூக்கிக்கொண்டு போய்விடுகிறது. அதனால் இரவானால் நாங்கள் வீட்டை விட்டு வெளியிலே வருவதே இல்லை' என்று அவன் தெரிவித்தான்.

'அந்தப் புலியை வேட்டையாடிக் கொல்லக் கூடாதா?' என்று முத்து கேட்டான்.

'எத்தனையோ பேர் முயற்சி செய்து பார்த்துவிட்டார்கள். ஒருவராலும் அதைக் கொல்ல முடியவில்லை. அதை வேட்டை யாடப் போனவர்களில் பல பேர் திரும்பி வரவேயில்லை. அந்தப் புலி அவர்களையே கொன்றுவிட்டது' என்று அவன் விசனத் தோடு சொன்னான்.

'அந்தப் புலி எங்கிருந்து வருகிறது? பகலிலே ஊருக்குள் அது தங்காதோ?' என்று முத்து மறுபடியும் கேட்டான்.

'ஊருக்கு நாலைந்து மைல் தூரத்தில் ஒரு பெரிய காடு இருக்கிறது. அங்கே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. அங்கிருந்துதான் அந்தப் புலி வருகிறது' என்றான் அவன்.

'நான் அந்தப் புலியைக் கொல்லுகிறேன்' என்று உற்சாகமாகப் பேசினான் முத்து.

'தம்பி, நீ இந்தக் காரியத்தில் இறங்காதே. உன் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அந்தப் புலி மிகப் பொல்லாதது. பெரிய பெரிய வேட்டைக்காரர்கள் எல்லாம் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை' என்று அந்த மனிதன் எச்சரிக்கை செய்தான்.

ஆனால், முத்து மனம் தளரவில்லை. அந்தக் கொடிய புலியைக் கொன்று, கெட்டிக்காரன் என்று பெயரெடுக்க வேண்டும்என்று நினைத்தான். மக்கென்று எல்லோரும் நினைக்கும்படி உயிர் வாழ்வதைவிட, இறந்து போவதே நல்லதென்றும் அவனுக்குத் தோன்றியது. அவன் தன் நாயை அழைத்துக் கொண்டு உடனே அந்த அடர்ந்த காட்டுக்குப் புறப்பட்டான்.

காட்டுக்குள் நுழையும்போதே சடையனுக்கு முத்துவின் எண்ணம் விளங்கிவிட்டது. முத்துவுக்கு ஆபத்து வருமென்று நினைத்தது. அது அவன் சட்டையைப் பிடித்து இழுத்து, அவனைக் காட்டுக்குள் போகவிடாமல் தடுத்தது. காட்டுக்குள் புலி இருப்பதை அது எப்படியோ தெரிந்துகொண்டது.

'சடையா, ஏன் தடுக்கிறாய்? நான் புலியைக் கொன்று கெட்டிக்காரனாகப் போகிறேன். இல்லாவிட்டால் இந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்' என்று சொல்லிவிட்டு முத்து தன் நாயின் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

மறுபடியும் சடையன் அவனைத் தடுக்க முயன்றது. ஆனால், முத்து உறுதியோடு காட்டுக்குள் நுழைந்தான். 'சடையா, நீ ஊருக்குத் திரும்பிப் போ. நான் புலியைக் கொல்லாமல் இந்தக் காட்டை விட்டு வெளியே வரமாட்டேன்' என்று அவன் சொல்லிவிட்டு அடியெடுத்து வைத்தான்.

சடையன் அவன் பின்னுலேயே சென்றது. முத்துவின் உறுதியை அது நன்ருக அறிந்துகொண்டது. அதனுல் அது அவனுக்கு உதவி செய்ய உடனே ஆரம்பித்தது. சடையன் பல இடங்களுக்குச் சென்று மோப்பம் பிடித்தது. கடைசியில் புலி வருகின்ற வழியை அது கண்டுபிடித்துவிட்டது. அந்த வழியிலே அது பல தடவை முன்னும் பின்னும் ஓடிக் காண்பித்தது. அதன் செயலிலிருந்து புலி வருகின்ற பாதையை முத்து அறிந்துகொண்டான். அந்தப் பாதை மிகக் குறுகலாக இருந்தது. இரு பக்கங்களிலும் புதர்களும் மரங்களும் நெருங்கியிருந்தன.

அப்பாதைக்குப் பக்கமாக ஓரிடத்திலே மிக உயரமான ஓர் ஆலமரம் தென்பட்டது. அந்த மரத்தின் கிளேயொன்று புலியின் பாதைக்கு நேர் மேலே உயரத்தில் சென்றது. முத்து அந்தக் கிளேயின்மீது ஏறிப் பார்த்தான். பிறகு, கீழே இறங்கி வந்து, ஒரு பெரிய கல்லேத் தூக்கி முதுகில் வைத்துக் கட்டிக் கொண்டு மறுபடியும் மரத்திலேறி அந்தக் கிளேக்குப் போனுன்.

அவன் செய்வதையெல்லாம் சடையன் நன்ருகக் கவனித்துக்கொண்டிருந்தது. அதற்கு அவனுடைய எண்ணம் விளங்கி விட்டது. அதனுல் அது மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தது.

முத்து வெகு நேரம் யோசனே செய்தான். பிறகு, ஆல மரத்திலிருந்து இறங்கி வந்து, புலியால் துன்பப்படுகின்ற ஊருக்குப் போனுன். அங்கே சில பெரிய மனிதர்களேக் கண்டான். அவர்களிடம் தனக்கு ஒரு கோணிப்பை வேண்டுமென்று கேட்டான்.

'கோணிப்பை எதற்கு ?' என்று அவர்கள் கேட்டார்கள்.

'நான் அந்தப் புலியை வேட்டையாடப் போகிறேன்' என்று பதில் சொன்னுன் முத்து.

அதைக் கேட்டதும் எல்லோரும் அவனேக் கேலி செய்யத் தொடங்கினுர்கள். "புலியைப் பிடித்துக் கோணிப்பைக்குள் போட்டுக் கட்டிக்கொண்டு வரப்போகிருயா ?" என்று ஒருவன் கேட்டான்.

'நீ புலியைக் கோணிப்பையில் கட்டிவை. உன் தலையில் அந்தப் பையைத் தூக்கி வைக்க நான் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் மற்றொருவன்.

'புலியைக் கோணிப்பையில் கட்ட முடியுமா? நீ சுத்த மக்கு' என்றான் வேறொருவன். இப்படி அவர்கள் கேலி செய்வதை முத்துப் பொருட்படுத்தவில்லை. அவர்களிடம் பல தடவை வற்புறுத்திக் கேட்டு, கடைசியாக ஒரு கோணிப்பையை வாங்கிக்கொண்டான். உடனே காட்டுக்கு வேகமாகப் புறப்பட்டான். சடையனும் பின்தொடர்ந்தது.

முத்து ஆலமரத்திற்கு வந்து, மறுபடியும் ஒரு பெரிய கல்லைத் தூக்கிக்கொண்டு மரத்தின்மீது ஏறினான். புலி வருகின்ற பாதைக்கு மேலாக இருந்த கிளைக்குச் சென்று, அங்கே கோணிப்பையை இரண்டு சிறிய கிளைகளுக்கு மத்தியிலே கீழே விழாதபடி வைத்தான். அந்தப் பைக்குள் தான் கொண்டுவந்த கல்லைப் போட்டான். பிறகு, கீழே இறங்கி வந்து, வேறொரு கல்லை எடுத்துக்கொண்டு மறுபடியும் மரத்திலேறினான்.

இவ்வாறு அவன் பல தடவை செய்து, பல கற்களை மரத்தின்மீது கொண்டுபோய்க் கோணிப்பையில் போட்டு நிறைத்து, அதை நன்றாகக் கட்டினான். ஒரு சிறிய மரக் கொம்பை வெட்டி எடுத்துவந்து, தன் கையில் தடியாக வைத்துக் கொண்டான். பிறகு, மரத்தின்மீதேறிக் கோணிப்பைக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். சடையன் மரத்தடியில் எச்சரிக்கையோடு படுத்திருந்தது.

பொழுது விழுந்து நடுச்சாமம் ஆகும்வரையில் அங்கு புலி வரவில்லை. அதற்குப் பிறகு, அது மெதுவாகச் சுற்றிலும் உற்றுப் பார்த்துக்கொண்டு வந்தது. முத்து உட்கார்ந்திருக்கும் மரக்கிளைக்கு நேராக அது வந்ததும், சடையன் அதற்கு முன்பாகச் சற்று தூரத்திலே பாதையில் போய் நின்று, 'உர்ர்' என்று உறுமிற்று. ஒரு சிறிய நாய் தனக்கு முன்னால் பயமில்லாமல் நின்றுகொண்டு உறுமுவதைக் கண்டு புலிக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அது சடையன் மேல் பாய்ந்து

அதைக் கொல்வதற்காக வாலை முறுக்கிக்கொண்டு, குறி பார்த்துத் தயாராக நின்றது. அந்தச் சமயத்திலே, மரக்கிளை மேலிருந்த முத்து, தன் கையிலிருந்த தடியைக்கொண்டு நெம்பி,கல் மூட்டையைக் கீழே தள்ளினான். கல்மூட்டை 'சதக்' என்று புலியின் தலைமேல் விழுந்தது. புலியின் தலை சுக்கு நூறாக நொறுங்கிவிட்டது. அதனால் அது அந்த இடத்தி லேயே விழுந்து இறந்தது. தனது திட்டம் பலித்ததைக் கண்டு முத்து ஆனந்தக் கூத்தாடினான். சடையனும் துள்ளிக் குதித்தது.



அடுத்த நாள் காலையிலே ஊர்மக்களெல்லாம் புலி இறந்த செய்தியைக் கேட்டுக் காட்டுக்குள் தைரியமாக வந்து பார்த் தார்கள். அவர்கள் முத்துவைப் புகழ்ந்தார்கள். அவனைக் கெட்டிக்காரன் என்று கொண்டாடினார்கள். அவனுடைய தாயாரையும் அந்த ஊருக்கே வரவழைத்து அவளுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் கொடுத்து உதவினார்கள்.

முத்து கெட்டிக்காரனாக இருப்பதை அறிந்த அவன் தாய் மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். தாயும் மகனும் அந்த ஊரி லேயே சுகமாக வாழ்ந்து வந்தார்கள்."

மாயக்கள்ளன் சொன்ன இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டே ஆத்மரங்கன் படிக்கட்டிலே படுத்துத் தூங்கிவிட்டான். அவனை மாயக்கள்ளன் மலைப்படிகளிலிருந்து கீழே இறக்கி மலை யடிவாரத்திற்குக் கொண்டுபோனான். தனது தந்திரம் பலித்த தென்று அவன் குதூகலமடைந்தான்.

# 5. ஞானமூர்த்தி

ஆத்மரங்கன் தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தான். கதை கேட்டுக்கொண்டே தூங்கிவிட்டதால் மலையடிவாரத்திற்கு வந்து சேர்ந்ததை அறிந்துகொண்டான். அதனால் அவன் புதியதொரு வடிவம் எடுத்துக்கொண்டு மலையுச்சிக்குப் போக மறுபடியும் முயன்றான்.

இந்தத் தடவை அவன் கல்வியிலே சிறந்த மாணவனாக மாறினான். அப்படி மாறியதும் மலையுச்சியை நோக்கி வேகமாக அடியெடுத்து வைத்தான்.

பழையபடி மாயக்கள்ளன் கதை சொல்லிக்கொண்டு கூடவே துணையாக வரலானான். வழியிலே மாணவன் தூங்கிவிட்டால் மீண்டும் மலையடிவாரத்திற்குக் கொண்டுபோகப் படுவான். இந்த நிபந்தனையும் மாறாமல் இருந்தது.

மாயக்கள்ளன் கதையைத் தொடங்கினான். ஆத்மரங்கன் என்ன உருவம் எடுக்கிறானோ அதற்கு ஏற்றவாறு கதை சொல்லுவதில் அவன் திறமை வாய்ந்தவன். அப்படிக் கதை சொல்லி ஆத்மரங்கனை ஏமாற்ற வேண்டும் என்பது அவனுடைய சூழ்ச்சி. அது ஆத்மரங்கனுக்குத் தெரியாது. அவன் உற்சாகத்தோடு கதையைக் கேட்டுக்கொண்டே மலைப்படிகளில் காலெடுத்து வைக்கலானான்.

மாயக்கள்ளன் கதை சொல்லுகிறான்:—

"ஒரு வனத்திலே ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடத்திலே பல பேர் சிஷ்யர்களாகச் சேர்ந்து கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களிலே ஒருவன்

பெயர் ஞான மூர்த்தி. அவன் மிகவும் கெட்டிக்காரன். ஒரு



விஷயத்தை அவன் ஒரு தடவை கேட்டால், அல்லது படித்தால் போதும், அது அப்படியே அவன் மனத்தில் பதிந்து விடும். அதனுல் அவன் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவனுனன். அவனுக்குத் தெரியாத சாஸ்திரமே இல்லை என்று சொல்லும்படியாக அவன் எல்லாவற்றையும் படித்தான்.

ஒரு நாள் முனிவர் அவனிடத்திலே வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்டார். 'ஞானமூர்த்தி, உலகத்திலே உள்ள சமுத்திரங்களிலும், ஆறுகளிலும் மொத்தமாக உள்ள தண்ணீர்த் துளிகள் எத்தனை என்று, யாராவது உன்னைக் கேட்டால் நீ என்ன பதில் கூறுவாய் ?' என்று அவர் கேட்டார்.

'சமுத்திரங்கள், ஆறுகள் ஆகியவற்றின் அடியிலும், கரையிலும் உள்ள மணலின் எண்ணிக்கை எத்தனையோ அத்தனைதான் தண்ணீர்த் துளிகளும் என்று பதில் சொல்லுவேன்' என்ருன் ஞானமூர்த்தி.

அதைக் கேட்டு முனிவர் மகிழ்ச்சியடைந்தார். 'நீ இனி மேல் கல்வி கற்க வேண்டியதில்லை. நீ சிறந்த அறிவாளியாகி விட்டாய். உலகத்திலே பலருக்கும் பயன்படக்கூடிய வழியிலே உனது அறிவைக்கொண்டு சேவை செய். போய் வா' என்று கூறி, அவனுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்படி இறைவனைத் தொழுதார்.

ஞானமூர்த்தி குருநாதரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவனுடைய கல்வி அறிவைக் கண்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். அவனைப் போற்றிக் கொண்டாடினுர்கள். அதனுல், ஞானமூர்த்தி மிகுந்த கர்வம் அடைந்தான். தனக்கு யாரும் நிகரில்லை என்று எண்ணலானுன்.

இவ்வாறு எண்ணம் உண்டாகவே, அவன் மக்களுக்குச் சேவை செய்வதை மறந்துவிட்டான். தனது குருநாதர் இருக்கும் வனத்திற்குப் பக்கத்திலேயிருந்த மற்றொரு வனத்திலே ஓர் ஆச்ரமம் அமைத்தான். அதில் இருந்து கொண்டு அவன் எல்லோரையும் வாதுக்கு இழுத்தான். 'யார் வேண்டுமானாலும் என்னை எந்தவிதமான கேள்வியும் கேட்க லாம். அந்தக் கேள்விக்கெல்லாம் நான் சரியான பதில் சொல் லுவேன். எனது பதில் சரியானதாக இருந்தால் கேள்வி கேட்க வந்தவர் எனக்கு அடிமையாக வேண்டும். நான் சரியான பதில் கூறவில்லையென்றால் நான் அவர்களுக்கு அடிமையாவேன்' என்று அவன் எங்கும் தெரிவித்தான். தன்னுடைய ஆசிரமத் திலே கொடிகட்டித் தனது கல்விப் பெருமையை எல்லோருக்கும் தெரியும்படி செய்தான்.

பல பேர் அவனுடன் வாதாட வந்தார்கள். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அவன் சரியான விடை சொல்லி அவர்களை அடிமையாக்கிவிட்டான். யாராலும் அவனை வெல்ல முடியவில்லை.

ஞானமூர்த்திக்கு இப்படிப் பல வெற்றிகள் கிடைக்கவே, அவனுடைய கருவம் மேலும் அதிகமாயிற்று. அவன் தனக்குக் கலைக்கடல், கல்விக் களஞ்சியம் என்றிவ்வாறு பல பட்டங்களைச் சூட்டிக்கொண்டான்.

அவனுடைய செய்கைகளைப்பற்றியெல்லாம் அவனுடைய குருநாதரான முனிவர் கேள்விப்பட்டார். அவருக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. 'கல்வி கற்றவர்கள் அடக்கமாக இருக்க வேண்டும். அதுதான் அவர்களுடைய கல்விக்குச் சிறப்பாகும்' என்று அவர் தம்மைச் சூழ்ந்திருந்த சிஷ்யர் களிடம் கூறினர். ஞானமூர்த்திக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று அவர் நினைத்து, அதற்கேற்ற சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒரு நாள் யாரோ ஒரு பையன் அலங்கோலமாக முனிவ ருடைய ஆச்ரமத்தை நோக்கி ஓடி வந்தான். அவன்

இடுப்பிலே வேட்டியில்லே; ஒரு கௌபீனம் மட்டும் இருந்தது. அவன் அழுதுகொண்டே வந்தான்.

முனிவரைக் கண்டதும் அவன், 'ஐயா, ஆடெங்கே? மாடெங்கே? அவை போட்ட குட்டி எங்கே?' என்று நடுங்கிக் கொண்டே கேட்டான். முனிவர் அவனைப் பக்கத்திலே வரும்படி கூறி, அன்போடு, 'நீ யாரப்பா?' என்று விசாரித்தார்.

அந்தப் பையன் முனிவருடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல், 'வீடெங்கே? வேட்டி எங்கே?' என்று மேலும் கேட்டான்.

அவன் பயத்தால் நடுங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து முனிவர் அவனுக்குத் தைரியம் உண்டாகும்படி இனிமையாகப் பேசினர். 'பையா, பயப்படாதே! உனக்கு நான் எல்லா உதவியும் செய்கிறேன்' என்று அவர் சொன்னர். அதனுல் அந்தப் பையனுக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று.

அவன் தனது வீட்டிலிருந்து ஆடுகளையும் மாடுகளையும் அவற்றின் குட்டிகளையும் மேயவிடுவதற்காகக் காட்டிற்கு ஓட்டிக்கொண்டு வந்திருந்தானும். திடீரென்று ஒரு பெரிய புயல் ஏற்பட்டது. காற்று வேகமாக அடித்தது. காட்டிலிருந்த மரங்களெல்லாம் சடார் சடாரென்று ஒடிந்து விழுந்தன. அதைக் கண்டு ஆடுகளும் மாடுகளும் அவற்றின் குட்டிகளும் பயந்து நாலு திசைகளிலும் ஓடிவிட்டன. பையன் இடுப்பிலே கட்டியிருந்த வேட்டியும் காற்றிலே போய்விட்டது. ஆடுமாடுகளைத் தேடி அவன் காட்டிலே அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். கடைசியில் அவனுக்குத் தான் இருக்குமிடம் எதுவென்றே தெரியவில்லை. அவன் வீடு எங்கிருக்கிறதென்றும் தெரியவில்லை. அவன் மிகவும் பயந்து போனுன். அதனுல் அவ்வாறு கேள்வி கேட்டுக்கொண்டே முனிவரது ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தான். அவனை எல்லோரும் வேதாந்தம் என்று வேடிக்கையாகப் பெயர் வைத்து அழைப்பார்கள்.

முனிவர் அவனைக்கொண்டு ஞானமூர்த்தியின் கர்வத்தை அடக்க எண்ணினர்.

'தம்பி, பக்கத்து வனத்திலே ஒருவர் இருக்கிருர், அவரிடம் போனுல் நீ கேட்கிற கேள்விகளுக்குச் சரியான பதில்

சொல்லுவார். உன்னுடைய துன்பமெல்லாம் தீர்ந்து போகும்' என்றார் முனிவர்.

பையன் உடனே அங்கு போக ஆசைப்பட்டான்.

'தம்பி, அவசரப்படாதே. நீ அந்த வனத்திற்கு இப்படி அலங்கோலமாகப் போகக்கூடாது. நான் சொல்கிறபடி போனால்தான் அங்குள்ள ஞானமூர்த்தியைப் பார்க்க முடியும்' என்று முனிவர் கூறினார்.



அவர் உடனே வேதாந்தத்திற்கு நல்ல பட்டுச் சரிகை வேட்டிகளையெல்லாம் கொடுத்தார். அவன் தலையிலே ஒரு பெரிய தலைப்பாகையை வைத்தார். அவன் கேட்ட கேள்வி களையே ஒரு பாட்டாகச் செய்து அதை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

'இந்தப் பாட்டை ஞானமூர்த்தியிடம் சொல். அவர் உனக்குச் சரியான பதில் கொடுப்பார்' என்று அவனிடம் கூறி அனுப்பினார்.

வேதாந்தம் பெரிய புலவன்போல் ஆடை அணிந்து கொண்டு ஞானமூர்த்தியிடம் போனுன். போனதும் அவன் தான் மனப்பாடம் செய்து வந்த பாட்டைச் சொன்னுன்.

"ஆடெங்கே? மாடெங்கே?
அவை போட்ட குட்டியெங்கே?
வீடெங்கே? வேட்டியெங்கே?
வேதாந்தம் பேசுகிறேன் விளக்குவீரே."

இப்படிப் பாட்டைச் சொல்லிவிட்டு, அவன் ஞான மூர்த்தியின் முன்னுல் அமர்ந்தான்.

வேதாந்தம் தனது ஆடுகளையும், மாடுகளையும், அவற்றின் குட்டிகளையும் பற்றித்தான் இந்தப் பாட்டில் கேள்வி கேட்டான். தனது வீடு எங்கே இருக்கிறதென்றும் கேட்டான். இடுப்பி லிருந்து நழுவிப்போன வேட்டியைப்பற்றியும் கேட்டான். இந்தப் பாட்டைச் சொல்லியதும் அவன் முனிவர் கூறி யனுப்பியபடி மௌனமாக உட்கார்ந்திருந்தான். அவன் மறுபடியும் வாய் திறக்கவே இல்லை.

ஞானமூர்த்தி அவன் சொன்ன பாட்டைக் கேட்டதும் கலங்கிப்போனுன். வேதாந்தம் பேசுவதாக அவன் சொல்லுவதால், அந்தப் பாட்டில் ஏதோ மறைவான பொருள் இருப்பதாக அவன் நினைத்தான். எதிரில் உட்கார்ந்திருக்கும் வேதாந்தத்தின் ஆடைகளைக் கண்டும் அவன் ஏமாந்து போனுன். ஆட்டையும் மாட்டையும் பற்றித் தன்னிடம் யாரும் கேட்கமாட்டார்கள் என்றும் நினைத்தான். ஆடு, மாடு, வீடு, வேட்டி என்று சொல்வதிலே மறைவான வேருெரு பொருள் இருக்கிறதென்று அவன் சந்தேகப்பட்டான். எவ்வளவு நேரம் யோசனை செய்தும் அவனுல் அந்தப் பாட்டின் உண்மையான பொருளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனுல் பதில் சொல்லவும் முடியவில்லை.

ஞானமூர்த்தியின் கர்வமெல்லாம் அடங்கிப்போய்விட்டது. சிறு பையனுக்குத் தோற்றுப்போனுேமே என்று மனத்திலே

வருத்தமடைந்தான். அவனுக்கு அடிமையாக ஆவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் உணர்ந்து விசனப்பட்டான். கர்வத்தால் தனக்கு அவமானம் உண்டானதையும் தெரிந்து கொண்டான்.

அந்தச் சமயத்திலே ஞானமூர்த்தியின் குருநாதரான முனிவர் அங்கே வந்து சேர்ந்தார். உடனே ஞானமூர்த்தி அவர் பாதங்களில் விழுந்தான். தனது அறியாமைக்காக மன்னிக்கும்படியும் வேண்டினான்.



முனிவர் அவனுக்கு நல்ல அறிவுண்டாகுமாறு உபதேசம் செய்தார். ஞானமூர்த்தி மறுபடியும் முனிவருடைய ஆசிரமத்திற்குச் சென்று, அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு வாழ்ந்தான். கல்விக்கு முடிவே இல்லை என்று அறிந்துகொண்டு, மேலும் பல சாஸ்திரங்களைப் படிப்பதில் அவன் தனது காலத்தைக் கழித்தான்.''

இவ்வாறு மாயக்கள்ளன் கதையைச் சொல்லி முடிக்கும் போது, ஆத்மரங்கன் வழியிலே படுத்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். மாயக்கள்ளன் தனது தந்திரம் பலித்த தென்று மகிழ்ந்தான். ஆத்மரங்கனை மறுபடியும் மலையடிவாரத் திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

# 6. பாடுங் குயில்

உறங்கிக்கொண்டிருந்த ஆத்மரங்கன் வெகு நேரத்திற்குப் பிறகு எழுந்து பார்த்தான். பழையபடி மலையடிவாரத்தில் இருப்பதை அறிந்தான். மறுபடியும் மலையுச்சிக்குப் போக ஆசை கொண்டான்.

இந்தத் தடவை அவன் ஓர் இளம்பெண்ணாக உருவமெடுத்தான். அந்த உருவத்தோடு மலையுச்சியிலுள்ள தாய் தந்தையரை அடையலாம் என்று நினைத்து, மலைப்படிகளில் அடியெடுத்து வைத்தான்.



அவன் அப்படி அடியெடுத்து வைத்ததும் மாயக் கள்ளன் கூடவே புறப்பட்டான். வழக்கம் போல அவன் கதை சொல்ல ஆரம்பித்தான். இளம்பெண்ணாக மாறிய ஆத்மரங்கன், கதையைக் கேட்டுக்கொண்ட மலையேறலானான்.

"கமலாபுரி என்ற ஒரு நகரம் இருந்தது. அதைக் காசிநாதன் என்ற ஓர் அரசன் நீதி தவருமல் ஆண்டுவந்தான். அவனுடைய மனைவிக்கு வேதவல்லி என்று பெயர். அவர்களுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் பெயர் சுந்தரி. அவள் மிக அழகாக இருப்பாள். அவளை அரசனும் அரசியும் செல்வமாக வளர்த்து வந்தார்கள்.

சுந்தரிக்குப் பதினேழு வயது முடியும் சமயத்தில் கமலாபுரிக்கு ஒரு முனிவர் வந்தார். அரசனும் அரசியும் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரித்தார்கள். சுந்தரி அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய முன்வந்தாள். அவளைப் பார்த்த பிறகு முனிவர், "சுந்தரிக்குப் பதினெட்டாம் வயதிலே ஒரு தீங்கு நேரப்போகிறது. அதைத் தடுக்க வேண்டுமானால் பதினெட்டாம் வயது முடியும் வரை ஓராண்டு முழுவதும் அவள் ஆணாக உள்ள யாரையும் கண்ணால் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்தால் அந்த ஆணாலேயே அவளுக்கு மரணம் உண்டாகும்" என்று கூறினார். இவ்வாறு அரசனுக்கு எச்சரிக்கை செய்து விட்டு அவர் போய்விட்டார்.

முனிவர் சென்றதும் அரசன் அவர் கூறிய வார்த்தைகளைப் பற்றிக் கவலையோடு எண்ணமிடலானான். மகளுக்கு ஆபத்து வராமல் தடுப்பதற்கு என்ன வழியென்று முனிவரிடம் கேட்க அவன் மறந்துவிட்டான். அதற்காக அவன் மிகவும் வருந்தினான். கடைசியிலே அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. ஒரு வருஷம் முடியும் வரையில் சுந்தரியை ஆண்கள் பார்க்க முடியாதபடி ஒரு தனியிடத்தில் வைத்துவிடலாம் என்று அவன் நினைத்தான். உடனே அவ்வாறு வைப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்குமாறு உத்தரவிட்டான்.

அடுத்த நாள் முதல் சுந்தரிக்குப் பதினெட்டாம் வயது தொடங்குகிறது. அதனால், அன்றிரவே அவளைக் கமலாபுரிக் கோட்டையிலே, ஓர் உயரமான பகுதியிலே தனியாக இருந்த மாளிகைக்கு அனுப்பினான். சில தோழிப் பெண்களை அவளுக்குப் பணிவிடை செய்யவும், அவளைப் பாதுகாக்கவும் வைத்தான். அந்த இடத்திற்கு ஆண்கள் யாருமே போகக் கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டான். சுந்தரி அங்கேயே ஒரு வருஷத்தைக் கழிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தான்.

இந்த ஏற்பாட்டால் அரசனுடைய கவலை நீங்கிற்று. அவன் தன் மகளைப் பார்க்காமலேயே காலங்கழித்தான். அரசி மட்டும் அடிக்கடி சென்று, சுந்தரியைப் பார்த்து வருவாள். சுந்தரிக்கு விருப்பமானவற்றையும் கொடுத்தனுப்பினாள்.

இவ்வாறு பதினேரு மாதங்களுக்கு மேல் சென்றுவிட்டன. இன்னும் சில நாட்களில் சுந்தரி அந்தத் தனி மாளிகையை விட்டு வெளியே வந்து அனைவரையும் பார்க்கலாம். அந்த நாளை அவள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

கமலாபுரிக்கு அருகிலே மற்ெருரு நகரம் இருந்தது. அதற்கு மதியழகாபுரி என்று பெயர். அதை ஆண்டுவந்த அரசனுக்கு ஒரு மகனிருந்தான். அவன் பெயர் மணிவண்ணன். அவன் இசைக்கலையிலே மிகச்சிறந்தவன். அவனையே கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று சுந்தரி விருப்பங்கொண்டிருந்தாள். மணிவண்ணனுக்கு அவளைக் கலியாணம் செய்துகொள்ள ஆசை. அவர்களுடைய பெற்ருேர்களும் இந்தக் கலியாணத்திற்குச் சம்மதம் தெரிவித்திருந்தார்கள். ஆதலால், அவர்களுடைய விருப்பத்திற்கு யாதொரு தடையும் இருக்கவில்லை.

மணிவண்ணன் கமலாபுரிக்கு வரும்போதெல்லாம் சுந்தரியைச் சந்திப்பான். ஆனல், இந்த ஒரு வருஷமாக அவளைச் சந்திக்க முடியவில்லை. அவள் தனியாக ஒரு மாளிகையில் கோட்டையின் உச்சியிலே இருப்பதாக அறிந்தான். ஆண்கள் யாரும் அவளைப் பார்க்கக்கூடாதென்ற விஷயத்தையும் தெரிந்துகொண்டான். அவள் தனது பதினெட்டாம் வயதிலே எந்த ஆணைப் பார்க்கிருளோ அவனல் அவளுக்கு மரணம் நேரும் என்று முனிவர் கூறியதைப்பற்றியும் கேள்விப்பட்டான்.

இருந்தாலும், சுந்தரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு அதிகமாக இருந்தது. இன்னும் சில நாள்கள் பொறுத்திருந்தால் அவளுக்கும் பதினெட்டாவது வயது பூர்த்தியாகிவிடும். ஆனல், அதுவரையில் அவளைப் பார்க்காமல் பொறுத்திருக்க அவனல் முடியவில்லை, அவள் தன்னைப் பார்க்காமல் தான் மட்டும் அவளைப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும் என்று அவன் ஆசை கொண்டான். அதற்காக அவன் ஒரு தந்திரம் செய்தான்.

மரப்பலகைகளைக் கொண்டு மிகப்பெரிய மயில் போன்ற ஓர் உருவத்தைச் செய்யும்படி அவன் தச்சர்களுக்கு ஆணையிட்

டான். அவ்வாறே அவர்கள் செய்து அதற்குப் பொருத்தமான வர்ணங்களைப் பூசினார்கள். பார்ப்பதற்கு அது உயிருள்ள ஒ மயிலைப்போலவே இருந்தது. அதன் வயிற்றுப்பக்கத்திலே த சிறிய கதவு உண்டு. அது யாருக்கும் சுலபமாகத் தெள்ளே வாறு அமைக்கப்பட்டிருந்தது. அதன் மூலமாக ம கழுத்துப் சென்று உட்கார்ந்துகொள்ள முடியும். மயி. அவற்றின் பக்கத்திலே இரண்டு சிறிய துவாரங்கள் இ
மூலமாக வெளியே நன்றாகப் பார்க்கலா
வண்ணன் யாருக்கும்

அந்த மயில் தயாரானவுடன் காண்டான். மயிலை ஒரு தெரியாதபடி அதற்குள் புரோபுரிக்கு இழுத்துக்கொண்டு பீடத்தின் மேல் வைத்துச் செய்திருந்தான்.
போகும்படி அவன் ஏற்ப



அவனுடைய விருப்பப்படியே மயிலைக் கமலாபுரிக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கே அந்த மயில், கோட்டைக்குப் பக்கத்தில் போகும் சமயத்தில், மணிவண்ணன் அதற்குள்ளே மறைவாக இருந்துகொண்டு குழலை எடுத்து வாசித்தான். மிக அழகான பாடல்களையெல்லாம் குழலின் ஓசையிலே வெளிப் படுத்தினான்.

சுந்தரி அந்த இனிமையான இசையைக் கேட்டு மிகவும்
மகிழ்ச்சியடைந்தாள். மயிலுக்குள்ளே இருக்கும் ஓர்
ம்புதமான இயந்திரத்திலிருந்து அந்த இசை வருவதாகச்
தன்னார்கள். அவ்வாறு சொல்லும்படி மணிவண்ணன்
அவர்கள ஆள்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அதனால்,
'டிச் சொன்னார்கள்.

சுந்தரிக்கு
அதை விலைக்கு ்தே மயிலின்மேல் ஆசை உண்டாயிற்று.
கேட்டாள். தாயாரும் க் கொடுக்கும்படி தன் தாயாரிடம்
அதைச் சுந்தரியின் தனி றக்கிசைந்து மயிலை வாங்கினாள்.
ஏற்பாடு செய்தாள். `கைக்கு இழுத்துச் செல்லுமாறு

மணிவண்ணன் மயிலுக்குள்
சுந்தரியைப் பார்த்து மகிழ்ந்தான். ட்கார்ந்துகொண்டே
இனிய பாடல்களை வாசித்துக்கொண் ல அவன் பல
அவற்றைக்கேட்டுச் சுந்தரி அளவில்லாத இன்பட இருந்தான்.
'டைந்தாள்.

மயிலிடத்திலே அவளுக்கு மிகுந்த பிரியம் உ
அதனால், அவள் அந்த மயிலின் நீண்ட கழுத்தை 'பிற்று.
கையால் அணைத்துக்கொண்டு அதன்மீது சாய்ந்துகொ ன்
வாள். மயிலிலிருந்து வெளியாகும் இசையைக் கேட்டுப
பரவசமடைவாள். மணிவண்ணன் உள்ளே இருப்பது
அவளுக்குத் தெரியாது. மணிவண்ணன் மட்டும் அவளை
நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இன்னும் நான்கு நாள்களில் சுந்தரிக்குப் பதினெட்டாவது வயது முடிந்துவிடும். அதுவரையிலும் மணிவண்ணன் மயிலுக்குள்ளேயே மறைந்திருப்பதாகத் தீர்மானம் செய்து கொண்டான். அவன் பகலெல்லாம் குழல் வாசிப்பான். இரவு நேரத்தில் சுந்தரி உறங்கியவுடன் அவன் மெதுவாக வெளியே வந்து உலாவுவான். கோட்டையிலிருந்த பழத் தோட்டத்திற்குள் புகுந்து பழங்களைப் பறித்துச் சாப்பிடுவான். பிறகு, வேகமாகத் திரும்பி வந்து, மறுபடியும் மயிலுக்குள் ஒளிந்து கொண்டு தூங்குவான்.

இவ்வாறு மூன்று நாள்கள் சென்றன. நான்காவது நாள் பகலும் சென்றுவிட்டது. அன்றிரவு முடிந்தால் அடுத்த நாள் காலையிலேயே அவன் சுந்தரியை நேராகவே காணலாம். அதற்குமேல் மயிலுக்குள் மறைந்திருக்க வேண்டியதில்லை. அவளை நேராகப் பார்த்தவுடன், மயிலுக்குள்ளே தான் மறைந்துகொண்டு அங்கே வந்து சேர்ந்த தந்திரத்தை அவளுக்குச் சொல்ல வேண்டுமென்று அவன் துடித்துக்கொண்டிருந்தான். அதைக் கேட்டால் சுந்தரி மிகவும் மகிழ்ச்சியடைவாள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன் மிக ஆவலோடு, எப்பொழுது பொழுது விடியும், எப்பொழுது பொழுது விடியும் என்று நான்காம் நாளிரவு தவித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தூக்கம் வரவில்லை அதனால் அவன் மயிலை விட்டு வெளியே வந்தான்.

எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. ஒரு விளக்குக்கூட அறையிலே இல்லை. வானத்திலே கருமேகங்கள் சூழ்ந்திருந்தமையால் இருட்டு அதிகமாக இருந்தது. பக்கத்தில் இருக்கும் பொருள்கூடக் கண்ணுக்குத் தெரியவில்லை. அதனால் மணிவண்ணன் மயிலுக்குப் பக்கத்திலேயே வெளியில் உட்கார்ந்தான். அவனால் தூங்கவும் முடியவில்லை; சும்மா உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. பக்கத்து அறையில் சுந்தரி தூங்கிக்கொண்டிருப்பாளென்று அவனுக்குத் தெரியும். ஆகையால், அந்தச் சமயத்தில் அவள் எழுந்து வரமாட்டாள். இரவில் அவள் மயிலிருக்கும் அறைக்குள் வருவதே கிடையாது.

ஆதலால், மணிவண்ணன் குழலை எடுத்து வாசித்தான். அப்படி வாசித்தால் தவறொன்றுமில்லை என்று அவன் நினைத்தான். குழலை வாசித்தாவது இரவு நேரத்தைக் கழிக்கலாம் என்று அவன் கருதினான்.

ஆனால், அவனுடைய குழலின் ஓசை சுந்தரிக்குக் கேட்டது. அவளும் அன்று தூங்கவில்லை. அடுத்த நாளைக்கு அந்தத் தனி மாளிகையை விட்டுப் போய்விடலாம். எல்லோரையும் பார்க்கலாம் என்ற மகிழ்ச்சியால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

அவள் குழலின் ஓசையைக் கேட்டுக்கொண்டே, மெதுவாக அடிமேலடி வைத்து, மயிலிருக்கும் அறைக்குள் நுழைந்தாள். குழல் வாசிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்த மணிவண்ணன் அவள் வந்ததைக் கவனிக்கவில்லை. மேலும் ஒரே இருட்டாக இருந்ததால் சுந்தரியின் உருவமும் தெரியவில்லை.

குழல் ஓசை வருகின்ற இடத்திற்குச் சுந்தரி வந்து சேர்ந்தாள். அப்பொழுது மணிவண்ணன் ஒரு புதிய பாட்டை மிக நன்றாக வாசித்துக்கொண்டிருந்தான். அதன் இசையிலே மயங்கிய சுந்தரி வழக்கம் போல் மயிலைக் கட்டியணைக்க விரும்பினாள்.

அப்படி அவள் அணைக்கும் போது, அங்கே இருந்தது மயிலல்லவென்றும் மனித உருவமென்றும் அவளுக்குத் தெரிந்து திடுக்கிட்டாள். 'யார் நீ? இங்கே எப்படி வந்தாய்?' என்று கோபத்தோடு கேட்டுக்கொண்டே, அவள் தன் இடுப்பிலிருந்த உடைவாளை எடுத்து, மணிவண்ணன் மார்பிலே குத்திவிட்டாள். 'சுந்தரி, என்ன வேலை செய்தாய்?' என்று கூவிக்கொண்டே மணிவண்ணன் தரையிலே சாய்ந்தான்.

சுந்தரி அலறித் துடித்தாள். தன் அறைக்கு ஓடிப் போய், ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு வந்து பார்த்தாள். மணிவண்ணன் சாகும் நிலையிலே கிடந்தான். அவன் மார்பிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

'ஐயோ இளவரசே, நீங்களா இந்த மயிலுக்குள் ஒளிந்திருந்தீர்கள்?' என்று கேட்டுக்கொண்டே சுந்தரி விம்மி விம்மி அழுதாள். 'உன்னைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் தான் நான் இப்படி இரகசியமாக வந்தேன்' என்று சொல்லிவிட்டு மணிவண்ணன் இறந்து போனான்.

அவன் இறந்ததைக் கண்டு சுந்தரி பெருந்துக்கம் கொண்டாள். இனிமேல் உலகத்தில் உயிர் வாழ்வதில்லை என்று முடிவு செய்தாள்.

அதனுல் அவள் கோட்டைச் சுவரின்மீதேறி அங்கிருந்து கீழே குதித்துவிட்டாள். உயரமான அந்தக் கோட்டைச் சுவரிலிருந்து குதித்ததால் அவள் உடம்பு நொறுங்கிப் போய் விட்டது. உயிரும் போய்விட்டது."

இவ்வாறு மாயக்கள்ளன் உருக்கமாகக் கதையைச் சொல்லி முடிக்கும் போது, ஆத்மரங்கன் மலைப்படியில் உறங்கி விட்டான். மாயக்கள்ளனுக்கு மறுபடியும் வெற்றி கிடைத்தது. அவன் ஆத்மரங்கனை மலையடிவாரத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். தன் சூழ்ச்சி பலித்ததை எண்ணி மாயக் கள்ளன் குதூகலமடைந்தான்.

# 7. செங்காற்று

ஆத்மரங்கன் மறுபடியும் மலையடிவாரத்திலே வெகு நேரம் உறங்கிக்கொண்டிருந்தான். பிறகு, திடீரென விழித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அடிவாரத்திலே கிடப்பதை அறிந்தான். அதையறிந்து அவன் சோர்வடையவில்லை; மீண்டும் மலையேறத் தீர்மானித்தான். இந்தத் தடவை அவன் ஒரு போர் வீரனாக உருவம் தாங்கினான். அவனுடைய உடம்பிலே கவசமிருந்தது; கையிலே வாள் மின்னிற்று. ஆத்மரங்கன் மலையுச்சியை நோக்கிப் புறப்பட்டான். கதை சொல்வதற்கு மாயக்கள்ளன் வந்து சேர்ந்தான். அவன் கதையைத் தொடங்கினான்.

"வீரசிங்கப் பட்டணம் என்று ஒரு பட்டணம் இருந்தது. அங்கே விக்கிரமன் என்றொரு வீரன் இருந்தான். அவன் வில்வித்தையிலும், வாள்வீச்சிலும் மிகவும் தேர்ந்தவன். அவன் வாளெடுத்து வீசத் தொடங்கினால் அவனுக்கு முன்னால் எதிர்த்து யாரும் நிற்க முடியாது. அவ்வளவு திறமை வாய்ந்தவன் அவன்.

விக்கிரமன் பல சண்டைகளிலே வெற்றியடைந்திருக்கிறான். அதனால் அரசனுக்கு அவனிடத்திலே மிகுந்த அன்புண்டு. அரசன் தனது படையிலே விக்கிரமனுக்கு உயர்ந்த பதவிகளையெல்லாம் கொடுத்தான்.

ஆனால், விக்கிரமனுக்கு அந்தப் பதவிகளிலே விருப்பமில்லை. உலகத்திலே துன்பப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவன் நினைத்தான். பலம் இல்லாதவர்களைப் பலமுள்ளவர்கள் துன்பப்படுத்துவதைக் கண்டால்

அவனுக்குப் பொறுக்காது. பலமற்றவர்களுக்கு உதவி செய்ய அவன் தயாராக நிற்பான்.

இவ்வாறு துன்பப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய விரும்பி அவன் புறப்பட்டான். அவனிடம் ஒரு நல்ல குதிரை இருந்தது. இரத்தம் போலச் சிவப்பான நிறத்தோடு அது பசர்ப்பதற்கு மிக அழகாகக் காட்சியளித்தது. அது காற்றைப் போல வேகமாகப் பாய்ந்து ஓடும். அதனால் அதற்குச் செங்காற்று என்று விக்கிரமன் பெயர் வைத்திருந்தான்.



விக்கிரமன் செங்காற்றின் மேல் ஏறிக்கொண்டு பல தேசங்களுக்குப் போனான். பல பேருக்கு உதவி செய்தான். கடைசியிலே அவன் ஒரு வனத்திற்குள் நுழைந்தான். வெகு தூரம் அதற்குள்ளே சென்றான். அங்கே மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியிலே, ஒரு பெரிய வெள்ளை மாளிகை தனியாக இருந்தது. யாரும் அங்கே வசிப்பதாகத் தெரியவில்லை.

அடர்ந்த வனத்திற்குள்ளே இப்படி ஒரு பெரிய மாளிகையைப் பார்க்க விக்கிரமனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதற்குள்ளே யாராவது இருக்கிறார்களா என்று பார்க்க ஆசை உண்டாயிற்று.

மாளிகைக்கு முன்னுலிருந்த ஒரு மரத்தில் செங்காற்றைக் கட்டிவிட்டு, விக்கிரமன் மாளிகைக்குள்ளே புகுந்தான். உள்ளே விசாலமான மண்டபங்கள் பல இருந்தன. ஆனால், அங்கே யாரையுமே காணும். யாரும் அங்கு வசிப்பதாகவே தெரியவில்லை. விக்கிரமன் அந்த மாளிகையின் பின் பகுதிக்குச் சென்றான். அங்கேயும் யாருமில்லை. ஆனால், அந்தப் பகுதியிலே மனிதக் குரல் கேட்டது. துன்பந்தாங்க முடியாமல் 'ஐயோ அப்பா' என்று யாரோ மெதுவாக அனத்துவது போலிருந்தது. விக்கிரமன் காது கொடுத்து உற்றுக் கேட்டான். அந்தக் குரல் மறுபடியும் காதில் நன்றாக விழுந்தது. அவன் ஒவ்வோர் அறைக்குள்ளும் ஓடி ஓடிப் பார்த்தான். யாரையும் காண முடியவில்லை. ஆனால், அந்தக் குரல் மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது. ஒரு பெரிய சுவருக்குள்ளேயிருந்து அந்தக் குரல் வருவது போலத் தோன்றிற்று.

விக்கிரமன் சுவரின்மேல் காதை வைத்துக் கேட்டான். அந்தக் குரல் இன்னும் தெளிவாகக் காதில் விழுந்தது. உடனே, அவன் அந்தச் சுவரை நன்றாக ஆராய்ந்து பார்த்தான். கையால் தடவித் தடவிப் பார்த்தான். ஓரிடத்திலே ஓர் இரகசியக் கதவு இருப்பது தெரிந்தது. அவன் கதவைத் தட்டினான். யாரும் அதைத் திறக்கவில்லை. பிறகு, விக்கிரமன் தன் பலத்தையெல்லாம் உபயோகித்து அதை ஒரு புறமாகத் தள்ளிப் பார்த்தான். கதவு மெதுவாகத் திறந்தது.

விக்கிரமனுக்கு முதலில் ஒன்றுமே தெரியவில்லை. உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. பிறகு, கொஞ்சங்கொஞ்சமாக உள்ளே எப்படியோ வெளிச்சம் வந்தது. அந்த வெளிச்சத்தின் உதவியால் விக்கிரமன் நாலு பக்கமும் பார்த்தான்.

ஓரிடத்தில் ஒரு பெரிய பாறை இருந்தது. அதிலே இரும்பு முளைகளை அடித்திருந்தார்கள். அவற்றிலிருந்து பெரிய பெரிய இரும்புச் சங்கிலிகள் தொங்கின. வயதான கிழவன் ஒருவனை ஒரு சங்கிலியிலே கட்டியிருந்தார்கள். அவனால் கைகளை மட்டும் அசைக்க முடிந்தது. உடம்பெல்

லாம் சங்கிலியிலே மறைந்து கிடந்தது. கழுத்திலும் ஒரு சங்கிலி இறுக்கிக்கொண்டிருந்தது.



விக்கிரமன் அவனிடம் ஓடினான். சங்கிலிகளை அவிழ்த்துவிட முயன்றான். ஆனால், முடியவில்லை. எவ்வளவு முயற்சி செய்தாலும் சங்கிலிகளைக் கழற்ற முடியாது என்று அவனுக்குத் தோன்றிற்று. பாறையோடு சேர்த்திருந்த இரும்பு முளைகளை ஒடிப்பதற்காக அவன் பெரிய பெரிய கற்களைக் கொண்டு வந்து அவற்றின்மேல் வேகமாகப் போட்டான். முளைகள் கொஞ்சமும் அசையவில்லை.

அந்தச் சமயத்தில் அந்தக் கிழவன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

'தம்பி, நீ யார்?' என்று அவன் கேட்டான். விக்கிரமன் தனது வரலாற்றையெல்லாம் சொன்னான். அதைக் கேட்டுக் கிழவனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

'விக்கிரமா, இப்படி உன்னுடைய பலத்தால் இந்தச் சங்கிலிகளை அறுத்தெறிய முடியாது. இங்கிருந்து வடக்குப் பக்கமாகவே போனால் இன்னும் எட்டு வனங்கள் இருக்கும். இது முதல்



வனம். கடைசியில் உள்ளது ஒன்பதாவது வனம். ஒவ்வொரு வனத்திலும் இதைப் போலவே ஒரு வெள்ளை மாளிகை உண்டு. அவற்றை நீ கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது. அவ்வாறு எட்டாவது வனத்தை விட்டுவிட்டு மேலும் போனால் ஒன்பதாவது வனம் தென்படும். அதிலேயும் ஒரு வெள்ளை மாளிகை இருக்கிறது. அதை ஓர் ஐந்து தலை நாகப்பாம்புகாவல்புரிகிறது.



அது வஞ்சகம் நிறைந்தது. நினைத்த மாதிரி வடிவம் எடுத்துக் கொள்ளும். அதைக் கண்டு நீ ஏமாந்து போகக்கூடாது. அதைக் கொன்றுவிட்டு நீ மாளிகைக்குள்ளே நுழைந்தால் அங்கே மின்னல் போல ஜொலித்துக்கொண்டு ஒரு வேல் இருக்கும். அதற்கு ஞானச் சுடர் வேல் என்று பெயர். அதை எடுத்துக்கொண்டு வந்தால் இந்தச் சங்கிலிகளைச் சுலபமாக அறுத்தெறிந்துவிடலாம். என்னுடைய துன்பமெல்லாம் தீர்ந்து போகும்' என்று அவன் கூறினான்.

அவன் கூறியபடியே அந்த வேலைக் கொண்டுவந்து சங்கிலிகளை அறுத்தெறிவதாகக் கிழவனிடம் விக்கிரமன் வாக்குக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

விக்கிரமன் செங்காற்றின்மேல் ஏறிக்கொண்டு கிழவன் கூறியபடியே முதல் எட்டு வனங்களையும் கடந்து சென்றான். ஒவ்வொரு வனத்தின் மத்தியிலும் ஒரு வெள்ளை மாளிகை இருந்தது. ஆனால், விக்கிரமன் அந்த மாளிகையின் பக்கத்தில் கூடச் செல்லவில்லை. அவன் வேகமாக ஒன்பதாவது வனத்தில் நுழைந்து, அதன் மத்தியிலிருந்த வெள்ளை மாளிகைக்குள் சென்றான்.

மாளிகையின் தலைவாசலில் ஓர் அழகான மங்கை நின்று கொண்டிருந்தாள். அவள் விக்கிரமனைக் கண்டதும் புன்சிரிப் போடு வரவேற்றாள். 'வாருங்கள் வாருங்கள்' என்று அன்போடு பேசினாள்.

ஐந்துதலை நாகம்தான் இப்படி வடிவம் எடுத்திருக்கிறதோ என்று விக்கிரமனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அதனால் அவன் குதிரையை விட்டிறங்காமல் யோசனை செய்து கொண்டிருந்தான்.



அதைக் கண்டு அந்தப் பெண், 'அந்தப் பயித்தியத்தைப் பார்த்துவிட்டா வந்தீர்கள்?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'எந்தப் பயித்தியம்?' என்று விக்கிரமன் திருப்பிக் கேட்டான்.

'முதல் வனத்திலே உள்ள மாளிகையில் இருக்கிற கிழவன் ஒரு பயித்தியம். அவனை வெளியே விட்டால் கண்ணில் கண்டவரையெல்லாம் அடிப்பான். அவனால் எல்லோருக்கும் பெரிய தீங்கு நேரும். அதற்காகத்தான் அவனை இரும்புச்

சங்கிலிகளால் கட்டிவைத்திருக்கிறார்கள்' என்று அந்த மங்கை சொன்னாள்.

விக்கிரமன் அவளுடைய அழகில் மயங்கிப் போய் விட்டான். அவள் சொல்லுவதெல்லாம் உண்மையாகத்தான் இருக்கும் என்று நம்பினான்.

'இந்த மாளிகை உங்களுடையதா? நீங்கள் யாரென்று எனக்குச் சொல்லுவீர்களா?' என்று விக்கிரமன் கேட்டான்.

'இது என்னுடைய மாளிகைதான். என் பெயர் நாகவல்லி. என்னை அந்தப் பயித்தியம் ஐந்துதலை நாகம் என்று உங்களிடம் சொல்லியிருக்கும்' என்று கூறிக்கொண்டே அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பிலே விக்கிரமனுடைய சந்தேகமெல்லாம் நீங்கிவிட்டது. அவன் குதிரையை விட்டிறங்கி நாகவல்லியோடு மாளிகைக்குள் சென்றான்.

விக்கிரமனுக்கு எல்லாப் பணிவிடைகளும் நன்றாக நடந்தன. நல்ல நல்ல உண்டிகளும் கிடைத்தன. நாகவல்லி அவனிடம் மிகுந்த அன்பு காட்டினாள். அதனால் விக்கிரமன் அவளைக் கலியாணம் செய்துகொண்டு, அங்கேயே தங்கி விட்டான். கிழவனுக்குக் கொடுத்த வாக்கையும் மறந்தான்.

நாகவல்லி மாதத்திற்கொரு தடவை அமாவாசையன்று இரவிலே தனியாக எங்கேயோ போய்விட்டுப் பொழுது விடியும் சமயத்தில் திரும்பி வருவாள். அவள் எங்கு செல்கிறாளென அறிந்துகொள்ள விக்கிரமன் ஆசைப்பட்டான். ஆனால், அவள் போகுமிடத்தைப்பற்றி மட்டும் அவனிடம் கூறவில்லை. அதை ரகசியமாக வைத்திருந்தாள்.

விக்கிரமனுக்குப் பல வகையான எண்ணங்கள் தோன்றின. அவள் இப்படி ரகசியமாகப் போகும் இரவன்று தானும் ரகசியமாக வெளியே போகத் தீர்மானித்தான். எட்டாவது வனத்திலே உள்ள மாளிகையில் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாமல் பார்த்துவர ஆசை கொண்டான்

ஓர் அமாவாசை வந்தது. நாகவல்லி தனியாக எங்கோ போய்விட்டாள். அவள் போனதும் விக்கிரமன் தனது குதிரையின்மேல் ஏறிக்கொண்டு எட்டாவது வனத்திற்கு வேகமாகச் சென்றான். அங்கிருந்த மாளிகையில் மாணிக்கக் கற்கள் எங்குப் பார்த்தாலும் குவியல் குவியலாகக் கிடந்தன. ஆனால், அங்கே யாரும் வசிப்பதாகத் தெரியவில்லை.

விக்கிரமன் ஒவ்வொரு மண்டபமாக நுழைந்து பார்த்தான். கடைசியிலே இருந்த ஒரு சிறிய அறையில் கைதிகள் போல, பல பேர் அடைபட்டுக் கிடந்தார்கள். அவர்கள் கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. இரும்புச் சங்கிலிகளால் அவர்களைக் கட்டிவைத்திருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் விக்கிரமனைப் பார்த்ததும், 'தம்பி எதற்காக இங்கே வந்தாய்? உடனே இங்கிருந்து ஓடிப்போ' என்று கத்தினான்.

விக்கிரமன் அவன் வார்த்தையைக் கேட்டுப் பயப்படவில்லை. அவனருகே சென்று விசாரித்தான். அவர்கள் எல்லோரும் முதல் வனத்து மாளிகையிலிருக்கும் கிழவனைப் பார்த்துவிட்டு வந்தவர்கள். அவர்களை நேராக ஒன்பதாவது வனத்திற்குச் சென்று, ஐந்து தலை நாகத்தைக் கண்டு, அதன் வஞ்சனையில் மயங்காமல் அந்த வேலை எடுத்துவரும்படி கிழவன் அனுப்பியிருந்தான். அவனுடைய வார்த்தைப்படி நடக்காமல், அவர்கள் எட்டாவது வனத்திலுள்ள மாளிகையில் புகுந்து மாணிக்கக் கற்களை எடுத்திருக்கிறார்கள். அப்படி அந்தக் கற்களை எடுத்தவுடனே, அவர்கள் கையிலும் காலிலும் விலங்கு மாட்டிக்கொண்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். அந்த விலங்கை அறுத்தெறிய ஞானச் சுடர் வேலைக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

நல்ல வேளை. விக்கிரமன் மாணிக்கக் கற்களைத் தொடவில்லை. அவன் உடனே அங்கிருந்து புறப்பட்டான். செங்காற்று வேகமாகப் பாய்ந்து சென்றது. நாகவல்லி திரும்புவதற்கு முன்னாலேயே விக்கிரமன் ஒன்பதாவது வனத்து

மாளிகைக்கு வந்து, தனது படுக்கையில் படுத்துக்கொண்டான். அவன் வெளியே சென்று வந்தது யாருக்கும் தெரியவில்லை.



அடுத்த அமாவாசையன்று விக்கிரமன் முன்போலவே புறப்பட்டு ஏழாவது வனம் சென்றான். அங்குள்ள மாளிகையில் வைரக்கற்களாகக் குவிந்து கிடந்தன. அங்கும் பல பேர் கைதிகளாக விலங்கு பூட்டப்பட்டு ஓர் அறையிலே இருந்தார்கள். அவர்களும் எட்டாவது மாளிகையில் உள்ளவர்களைப் போலவே விவரம் சொன்னார்கள். வைரக் கற்களைத் தொட வேண்டாம் என்றும் சொன்னார்கள்.

விக்கிரமன் அங்கிருந்து யாருக்கும் தெரியாமல் திரும்பி வந்துவிட்டான். நாகவல்லி திரும்பி வருவதற்கு முன்பே அவன் வந்துவிடுவதால், அவன் இப்படி ரகசியமாகச் சென்று

வருவதை அவள் கண்டுகொள்ளவில்லை. செங்காற்று விக்கிரமனுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

ஒவ்வோர் அமாவாசை இரவிலும் விக்கிரமன் ஒவ்வொரு வனத்துக்குச் சென்று, அங்குள்ள மாளிகையைப் பார்வையிட்டு வந்தான். ஒரு மாளிகையிலே தங்கம் கட்டி கட்டியாகக் கிடந்தது. ஒரு மாளிகையிலே ஏராளமான தின்பண்டங்கள் இருந்தன. விக்கிரமன் அவை ஒன்றையும் தொடாமல், அங்கு அடைபட்டுக் கிடக்கும் கைதிகளிடம் பேசி விவரம் தெரிந்துகொண்டு வந்தான்.

அவர்கள் கூறுவனவற்றையெல்லாம் கேட்கக் கேட்க விக்கிரமனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நாகவல்லியிடம் சந்தேகம் வந்தது. ஆனால், அவன் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

கடைசியில், ஓர் அமாவாசையன்று விக்கிரமன் முதல் வனத்துக்கே சென்றான். கிழவனை மறுபடியும் கண்டான். நாகவல்லி பெண் அல்ல என்றும், பெண் வேஷம் எடுத்துக் கொண்டிருக்கும் ஐந்துதலை நாகம் என்றும் கிழவன் வற்புறுத்திச் சொன்னான்.

'உனக்குப் பைத்தியம் என்று அவள் சொல்கிறாளே?' என்று விக்கிரமன் கேட்டான்.

'அப்படிச் சொல்லித்தான் உன்னை ஏமாற்றி இருக்கிறாள். அவள்தான் ஐந்துதலை நாகம் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், அடுத்த அமாவாசையன்று அவள் ரகசியமாகப் போகிற இடத்துக்கு நீயும் போய்ப் பார். அவளுக்குத் தெரியாமல் அவள் பின்னாலேயே போ. ஆனால், குகைக்குள்ளே மட்டும் போகாதே. வெளியிலிருந்து எல்லாவற்றையும் கவனி' என்று கிழவன் சொல்லியனுப்பினான்.

அடுத்த அமாவாசை இரவு வந்தது. விக்கிரமன் படுத்துறங்குவது போலப் பாசாங்கு செய்தான். நாகவல்லி வெளியே புறப்பட்டாள். விக்கிரமன் சட்டென்று படுக்கையை

விட்டெழுந்து, அவளைப் பின்தொடர்ந்து இருட்டிலே பதுங்கிப் பதுங்கிச் சென்றான்.

வனத்தின் ஒரு பகுதியிலே ஒரு சிறிய மலை உண்டு அதிலே யாருக்கும் தெரியாமல் ஒரு குகை இருந்தது அதற்குள்ளே நாகவல்லி நுழைந்தாள். குகையின் வாயிலிலே ஒரே இருட்டு. அதைக் கடந்து நாகவல்லி வேகமாகச் சென்றதைப் பார்த்த விக்கிரமன் கொஞ்சங்கூடத் தயங்காமல் உள்ளே நுழைந்தான். கிழவன் சொன்ன வார்த்தையை அவன் பொருட்படுத்தவில்லை. ஏதாவது ஆபத்து வந்தால் தன் உடைவாளைக்கொண்டு அதைத் தடுத்துவிடலாம் என்று அவனுக்குத் தைரியம். மேலும் அவன், நாகவல்லி தனக்குத் தீங்கு உண்டாக்கமாட்டாளென்று நினைத்தான்.

கொஞ்ச தூரம் அவன் இருட்டிலே குகைக்குள் சென்றான். கையால் தடவிப் பார்த்துக்கொண்டே செல்லவேண்டியிருந்தது. பிறகு, திடீரென்று குகைக்குள்ளிருந்து ஒரு வெளிச்சம் கண்



கூசும்படி தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் பார்க்கிறபோது, ஏதோ சுரங்க வழியிலே போவது போலத் தெரிந்தது. அதே சமயத்தில் உள்ளேயிருந்து நாகப்பாம்பு சீறுவதுபோல புஸ் புஸ் என்று சத்தம் கேட்டது.

விக்கிரமன் பிரகாசமான அந்த வெளிச்சத்தை நோக்கி மேலும் உள்ளே போனுன். அந்தக் குகைக்குள் சென்றதும் நாகவல்லி தனது சுயரூபம் எடுத்துக்கொண்டாள். அங்கு தான் அவள் ஐந்துதலை நாகமாக இருப்பாள். ஐந்துதலை நாகம் தனது வாயைத் திறந்து, அந்தச் சுரங்க வழியவ்வளவு பெரிதாகச் செய்துகொண்டு மறைந்திருப்பதை அவன் கவனிக்கவில்லை. அந்த நாகத்தின் வாய்க்குள்ளிருந்த மாணிக்கக் கற்களிலிருந்துதான் அவ்வளவு பிரகாசமாக வெளிச்சம் வந்தது.

சுரங்க வழிதானென்று ஏமாந்துபோய் விக்கிரமன் ஐந்துதலை நாகத்தின் வாய்க்குள் நுழைந்துவிட்டான். அப்படி அவன் நுழைந்ததும் பாம்பு தனது வாயை லபக்கென்று மூடிக் கொண்டது. விக்கிரமன் உள்ளே அகப்பட்டு உயிர் துறந்தான்.”

இவ்வாறு மாயக்கள்ளன் கதையை முடிப்பதற்குள்ளாகவே ஆத்மரங்கன் மலைப்படியில் படுத்து உறங்கிவிட்டான். மாயக்கள்ளனுக்கு மீண்டும் வெற்றி கிடைத்துவிட்டது. அவன் ஆத்மரங்கனைத் தூக்கிக்கொண்டு மலையடிவாரத்திற்குப் பழையபடி வந்துவிட்டான்.

# 8. ஈயாரே! அணிலாரே!

போர் வீரனாக உருவமெடுத்த ஆத்மரங்கன் மலையடிவாரத்திலே படுத்துக் கிடந்தான். வெகுநேரம் வரையில் அவனுடைய தூக்கம் கலையவில்லை. பிறகு அவன் விழித்தெழுந்தான். சுற்றிலும் பார்த்தான். மலையுச்சிக்குப் போக வேண்டும் என்ற ஆசை அவனை விடவில்லை. பணமிருந்தால் எதையும் எளிதிலே சாதித்துவிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. உடனே அவன் ஒரு பெரிய பணக்காரனாக உருவமெடுத்தான். பட்டு வேட்டி, ஜரிகை உருமாலை, பட்டுச்சொக்காய் ஆகியவற்றையெல்லாம் அணிந்துகொண்டான். அவன் கைவிரல்களிலே வைர மோதிரங்கள் ஜொலித்தன. இவ்வாறு அவன் முதற்படியிலே காலை வைத்ததும், கதை சொல்லுவதற்கு மாயக்கள்ளன் வந்து சேர்ந்தான். அவனைப்பற்றி ஆத்மரங்கனுக்கு ஒரு சந்தேகமும் ஏற்படவில்லை. மாயக்கள்ளன் தன்னை ஏமாற்றிக்கொண்டிருக்கிறான் என்று அவனுக்குத் தெரியவில்லை. மாயக்கள்ளன் கதையை ஆரம்பித்தான்:

"ஓர் ஊரிலே ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனுக்கு வயல்கள் ஏராளமாக உண்டு. ஆடுமாடுகள் ஆயிரக்கணக்காக இருந்தன. உயர்ந்த ஜாதிக் குதிரைகள் பல அவனுடைய லாயத்திலே காட்சியளித்தன. அவன் ஏழடுக்கு மாளிகையிலே வாழ்ந்து வந்தான். அவன் பெயர் தங்கமுத்து மாணிக்கம். தங்கமுத்து மாணிக்கம் என்றால் பெரிய பணக்காரன் என்று அந்தப் பக்கமெல்லாம் தெரியும்.

இவ்வளவு பணக்காரனாக இருந்தாலும் அவனுக்குப் பண ஆசை அடங்கவில்லை. மேலும் மேலும் பணம் சம்பாதிக்க

வேண்டும் என்று அவன் விரும்பினான். தங்கம் நிறைய வேண்டும் என்று அவனுக்குப் பேராசை. அதனால், அவனைத் தங்கமுத்து மாணிக்கம் என்பதற்குப் பதிலாகத் தங்கப்பித்து மாணிக்கம் என்று கேலியாகச் சொல்வார்கள்.

அவன் நல்ல உணவுகூடச் சாப்பிடமாட்டான். உணவுக்குப் பணம் செலவழிக்கவும் அவனுக்கு மனம் வராது. பல நாள்களில் கஞ்சி மட்டும் குடிப்பான். யாருக்காவது ஒரு சல்லிக்காசு தருமம் செய்யவும் அவன் சம்மதிக்கமாட்டான். அதனால், அவனிடம் யாருமே தருமம் கேட்க வரமாட்டார்கள்.



ஒரு நாள், தூரதேசத்திலிருந்து ஒரு பரதேசி அந்த ஊருக்கு வந்தான். அவனுக்குத் தங்கமுத்து மாணிக்கத்தைப் பற்றித் தெரியாது. அவன் ஏழடுக்கு மாளிகையைப் பார்த்ததும், முதலில் பிச்சை கேட்க அங்குச் சென்றான். தங்கமுத்து மாணிக்கம் அவனை வாயில் வந்தபடி திட்டினான்.

வாயிற்படியை மிதிக்கவே கூடாது என்று துரத்தியடித்தான். வெளிக்கதவைச் சாத்தித் தாழ்போட்டுப் பூட்டினுன்.

அவன் செய்வதையெல்லாம் கவனித்த பரதேசிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவன் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே வீதியில் நடந்தான். அதைக் கண்டு சில பேர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள். அப்படி விடாமல் சிரிப் பதற்குக் காரணம் என்னவென்று அவனைக் கேட்டார்கள். ஏழடுக்கு மாளிகையில் பிச்சை கேட்ட விஷயத்தைப்பற்றி அவன் சொன்னுன். அதைக்கேட்டுவிட்டு அவர்களும் சிரிக்கத் தொடங்கினுர்கள்.

'அந்த வீட்டுக்குப் போய் நீ பிச்சை கேட்கலாமா? அவன்தான் தங்கப்பித்து மாணிக்கமாச்சே! அவன் ஒரு செல்லாக் காசுகூட யாருக்கும் கொடுக்கமாட்டான்' என்று அவர்கள் பரதேசியிடம் சொன்னுர்கள். பரதேசிக்குத் தங்கமுத்து மாணிக்கத்தைப்பற்றிய விவரம் எல்லாம் தெரிந்தது. அவன் ஒரு வேடிக்கை செய்ய நினைத்தான்.

மறுநாட்காலையில் அவன் ஒரு பெரிய சாமியார் போல வேஷம் போட்டுக்கொண்டான். தலையிலே ஜடை இருந்தது. தாடி நீளமாகக் காட்சியளித்தது. கழுத்திலே ருத்திராட்ச மாலைகள் தொங்கின. இடுப்பிலே காவி வேட்டி கட்டிக் கொண்டான். நெற்றியிலே நிறையத் திருநீற்றைப் பூசிக் கொண்டு, அவன் தங்கமுத்து மாணிக்கத்தின் மாளிகைக்கு முன்னுல் வந்து புலித்தோல் ஆசனம் விரித்து, அதன்மேல் உட்கார்ந்துகொண்டான். 'சம்போ மகாதேவா, கேட்டவர் களுக்கெல்லாம் தங்கம் கொடுப்பேன். வாருங்கள் வாருங்கள்' என்று கூவினுன்.

இதைக்கேட்ட தங்கமுத்து மாணிக்கம் மாளிகையை விட்டு ஓடோடியும் வந்தான். சாமியார் பாதங்களிலே பல முறை விழுந்து வணங்கினுன். 'சாமி, எனக்கு அருள் செய்ய வேண்டும்?' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். 'டேய், உனக்கு என்னடா வேண்டும்?' என்று பரதேசி அதிகாரத் தோரணையோடு கேட்டான்.

'சாமி, எனக்கு நிறையத் தங்கம் வேண்டும்' என்று தங்கமுத்து மாணிக்கம் தெரிவித்தான்.

'டேய்! மறுபடியும் கீழே விழுந்து என் காலைத் தொட்டுக் கும்பிடு' என்று பரதேசி கண்ணை மூடிக்கொண்டே சொன்னான். கையிலிருந்த ஜபமாலையை அவன் வேகமாக உருட்டினான். 'சம்போ மகாதேவா' என்று அடிக்கடி கூவினான்.

தங்கமுத்து மாணிக்கம் பல தடவை காலில் விழுந்து கும்பிட்டான். 'டேய், உனக்குத் தங்கமா வேண்டும்? அப்படியானல் இங்கிருந்து நேர் தெற்கே போ. நெடுந்தூரம் போனல் அங்கே ஒரு பெரிய வனம் இருக்கும். அதற்குள்ளே புகுந்து தெற்கு நோக்கியே போனல் அங்கே ஒரு கோயில் தென்படும். அந்தக் கோயிலில் உள்ளே இருக்கும் சாமிக்குத் தங்கவரப் பெருமாள் என்று பெயர். அவரிடம் போ. உடனே புறப்படு' என்று பரதேசி சொல்லி ஆசீர்வாதம் செய்தான்.



தங்கமுத்து மாணிக்கம் உடனே புறப்பட்டான். நடந்து போனல் பல நாள்கள் ஆகுமென்று நினைத்து, குதிரை ஒன்றன் மீது அமர்ந்து பிரயாணத்தைத் தொடங்கினன். அவனுடைய லாயத்திலே நல்ல நல்ல குதிரைகள் இருந்தன. ஆனல், அந்த நல்ல குதிரைகளில் ஒன்றை உபயோகப்படுத்த அவனுக்கு மனம் வரவில்லை. விலை உயர்ந்த குதிரைகள்

நெடுந்தூரம் போனால் இளைத்துப்போகுமென்று அவன் நினைத்தான். அதனால், ஒரு சிறிய மட்டக்குதிரைமீது ஏறிக் கொண்டான். அது கொஞ்சம் நொண்டி. இருந்தாலும் அதுவே போதுமென்று அவன் புறப்பட்டான். அந்த மட்டக் குதிரையை அடித்துவிரட்டி வேகமாக ஓடுமாறு அவன் செய்து கொண்டிருந்தான். பாவம், மட்டக் குதிரையும் அடி பொறுக்க மாட்டமல் நொண்டி ஓடிற்று.

அவன் இளைப்பாறுவதற்குக்கூட அதிக நேரம் ஓரிடத்தில் தங்கவில்லை. குதிரைக்குச் சரியான உணவும் கொடுக்கவில்லை. அதற்கு ஓய்வே கிடையாது. அடிதான் நிறையக் கிடைத்தது. அதனால், அது வனத்திற்குள்ளே கொஞ்ச தூரம் சென்றதும் கீழே விழுந்துவிட்டது. நெடுந்தூரம் ஓடிவந்த களைப்பாலும், பசி மயக்கத்தாலும் அது எழுந்திருக்க முடியாமல் கிடந்தது. தங்கமுத்து மாணிக்கம் சாட்டையால் அதை அடி அடியென்று அடித்தான். எப்படியாவது தங்கவரப்பொருமாள் கோயிலுக்குச் சீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டுமென்று அவனுக்கு ஆத்திரம்.

குதிரை அடி பொறுக்காமல் தரையில் விழுந்தபடியே இறந்துவிட்டது. அதைக் கண்டு தங்கமுத்து மாணிக்கத்திற்கு அழுகை வந்துவிட்டது. 'இருநூறு ரூபாய்க்கு வாங்கிய குதிரை போய்விட்டதே. இருநூறு ரூபாய் அநியாயமாகத் தொலைந்ததே' என்று அவன் குதிரையின் பக்கத்தில் உட்கார்ந்து, வாய்விட்டு அலறி அழுதுகொண்டிருந்தான்.

இதை ஒரு குள்ளநரி பார்த்தது. செத்துக் கிடக்கும் குதிரையைத் தின்னவேண்டும் என்று அதற்கு ஆசை. அதன் வாயில் நீர் ஊறிக்கொண்டிருந்தது. தங்கமுத்து மாணிக்கமோ குதிரையை விட்டுவிட்டுப் போவதாகத் தெரியவில்லை. அதனால் குள்ளநரி ஒரு தந்திரம் செய்தது.

அது தங்கமுத்து மாணிக்கத்திடம் சென்று, 'ஐயா, ஏன் இப்படி அழுது புலம்புகிறீர்?' என்று மெதுவாகக் கேட்டது. 'ஐயோ இருநூறு ரூபாய் போய்விட்டதே' என்று

அவன் உரக்கக் கூவி அழுதான். குள்ளநரி கொஞ்சங் கொஞ்சமாக அவனுடைய வரலாற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டது. தங்கம் நிறைய வேண்டுமென்ற ஆசையால் அவன் வந்திருக்கிறுனென்பதையும் அறிந்து கொண்டது.

'தங்கம்தானே உமக்கு வேண்டும்? தங்கம் நிறையக் கிடைப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படாதீர்' என்று நரி தந்திரமாகப் பேசிற்று.

அதைக் கேட்டவுடன் தங்கமுத்து மாணிக்கத்திற்கு அழுகை நின்றுவிட்டது. 'குள்ளநரியாரே, தங்கம் கிடைக்க வழி சொல்லுங்கள்' என்று பணிவோடுக் கேட்டுக்கொண்டான்.

குள்ளநரி அவனை அழைத்துக்கொண்டு வனத்திற்குள்ளே அரை மைல் தூரம் சென்றது. அங்கே ஓரிடத்தில் பல விதமான பூக்கள் நிறையப் பூத்திருந்தன. அவற்றில் தேனீக்கள் ஏராளமாக மொய்த்துக்கொண்டு ரீங்காரம் செய்தன. பூச்செடிகளின் மேல் பல அணில்கள் துள்ளிக் குதித்து விளையாடின. செடிகளிலுள்ள காய்களையும் பழங் களையும் பறித்துத் தின்றன. தேனீக்களையும் அணில்களையும் குள்ளநரி தங்கமுத்து மாணிக்கத்திற்குக் காட்டிற்று. அவை களால் அவனுடைய ஆசை நிறைவேறும் என்றது. அங்கேயே ஓரிடத்தில் உட்காரும்படியும் சொல்லிற்று.

'உங்கள் அங்கவஸ்திரத்தை முன்னால் விரித்துப் போட்டு விட்டு நான் சொல்கிறபடி விடாது சொல்லுங்கள்' என்று குள்ளநரி அவனிடம் தெரிவித்தது.

நீங்கள் சொல்லுகிறபடியே செய்கிறேன்' என்று அவன் வணக்கத்தோடு கூறினன்.

குள்ளநரி ஒரு சிறிய பாட்டுப் பாடியது:

"ஈயாரே ஈயாரே
எனக்கு நிறையத் தங்கம்தா
அணிலாரே அணிலாரே
ஆசை தீரத் தங்கம் தா!"

இந்தப் பாட்டை ஓயாமல் சொல்லும்படி குள்ளநரி தங்கமுத்து மாணிக்கத்திற்கு உத்தரவிட்டது. அவன் உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு எழுந்திருக்கவே கூடாதென்றும் கண்டிப்பான ஆணையிட்டது.



'நான் சொல்லுகிறபடி செய்தால் முன்னால் விரித்துப் போட்டிருக்கும் அங்கவஸ்திரத்தில் நிறையத் தங்கம் வந்து விழும்' என்று குள்ளநரி சொல்லிற்று. அதன் உத்தரவுப் படியே செய்வதாகத் தங்கமுத்து மாணிக்கம் தெரிவித்தான். குள்ளநரி கவலையில்லாமல் குதிரையைத் தின்னப் போய் விட்டது.

தங்கமுத்து மாணிக்கம் அந்தப் பாட்டையே திருப்பித் திருப்பிக் கூறிக்கொண்டிருந்தான். உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவே இல்லை.

இவ்வாறு இரண்டு நாள்கள் சென்றன. அவன் பட்டினியாகக் கிடந்து ஓயாமல் அந்தப் பாட்டைச் சொல்வதைக் கேட்ட தேனீக்களுக்கும் அணில்களுக்கும் அவன்மேல் இரக்கம் உண்டாயிற்று. 'ஐயோ பாவம், இந்த மனிதன் தங்கத்துக்காக இப்படிப் பித்துப் பிடித்து அலைகிறானே' என்று அவை வருத்தப்பட்டன.

தேனீக்கள் தாங்கள் பூக்களிலே எடுக்கும் மகரந்தத் தூள்களைத் தங்கமுத்து மாணிக்கத்தின் அங்கவஸ்திரத்தில் போட்டன. அந்தத் தூள்களின் நிறம் தங்கம் போல இருந்ததால் அவன் அவற்றை உண்மையான தங்கத் தூள்கள் என்றே நம்பிவிட்டான். தங்கத்தின் மேலிருந்த பைத்தியத்தால் அவனுக்கு அவை அப்படித் தோன்றின. அதனால்,

“ஈயாரே ஈயாரே
எனக்கு நிறையத் தங்கம்தா!”

என்று உற்சாகமாக உரத்துக் கூவலானான். தேனீக்கள் மகரந்தத் தூளைப் போட்டுக்கொண்டே இருந்தன.

அதைப் பார்த்த அணில்கள் பொன்னரளிப் பூக்களின் இதழ்களைப் பறித்துவந்து தங்கமுத்து மாணிக்கத்தின் முன்னால் போட்டன. அந்த இதழ்கள் தங்கக் காசுகள் போல மஞ்சளாக இருக்குமல்லவா? அவற்றையும் தங்கமென்றே தங்கமுத்து மாணிக்கம் எண்ணிவிட்டான்.
அதனால்,

“அணிலாரே அணிலாரே
ஆசை தீரத் தங்கம்தா!”

என்று மேலும் கூவிப் பாடத் தொடங்கினான்.

தங்கப்பித்துப் பிடித்த அவனுக்குப் பசிமயக்கத்திலே கண் இருண்டு போய் எல்லாம் தங்கமாகவே தோன்றின.

தேனீக்களும் அணில்களும் உற்சாகத்தோடு வேலை செய்தன. மகரந்தத் தூள்களும் பொன்னரளி இதழ்களும் தங்கமுத்து மாணிக்கத்தின் முன்னால் நூற்றுக்கணக்கில் விழுந்தன. குவியல் பெரிதாக வளர்ந்துகொண்டே இருந்தது. அதைக் கண்டு அவனுடைய பாட்டும் பெரிய குரலில் வெளி வந்தது.

சில நாள்களில் அங்கவஸ்திரமே நிறைந்துவிட்டது. தங்கமுத்து மாணிக்கம் மகரந்தத் தூள்களையும் பொன்னரளி இதழ்களையும் சேர்த்து, அப்படியே ஒரு பெரிய மூட்டையாகக்

கட்டினுன். அந்த மூட்டை மிகவும் கனமாக இருந்தது. இருந்தாலும், எப்படியோ அவன் அதைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டான். குதிரை இல்லாததால் நடந்தே ஊருக்குப் புறப்பட்டான்.

பசியைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. தங்கம் கிடைத்ததே அவனுக்குப் போதும். களைப்பாறவும் நிற்காமல் ஊருக்கு வந்து சேர்ந்தான். பல நாள்களாக அவன் பட்டினி. தூங்கவும் இல்லை. தூங்கினுல் யாராவது தங்க மூட்டையைத் திருடிக்கொண்டு போய்விடுவார்கள் என்று அவனுக்குப் பயம்.

பல நாள்கள் இவ்வாறு நடந்து, கடைசியில் ஊருக்கு வந்து சேர்ந்தான். தனது ஏழடுக்கு மாளிகையில் நுழைந்தான்.



மூட்டையை ஆவலோடு அவிழ்த்தான். மகரந்தத் தூள்களும், பொன்னரளி இதழ்களும் சேர்ந்து கட்டியாகி, ஒரு மஞ்சள் லிங்கம் போலக் காட்சியளித்தன.

தங்கமுத்து மாணிக்கம் அந்தக் கட்டியை ஓர் அறையில் வைத்து அதற்குப் பூசை செய்ய ஆரம்பித்தான். 'தங்கக் கட்டியே, நீதான் என் தெய்வம்' என்று அதன் முன்னுல் விழுந்து கும்பிட்டான்.

இந்தக் காட்சியை ஊரார் எல்லோரும் வந்து பார்த்தார்கள். பார்த்தவர்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். 'அட பயித்தியமே, இதுவா தங்கக்கட்டி?' என்று கேலி செய்தார்கள்.

எல்லோரும் இவ்வாறு கேலி செய்யவே தங்கமுத்து மாணிக்கத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சந்தேகம் உண்டாயிற்று. அவன் மெதுவாக அந்தக் கட்டியைத் தொட்டு அழுத்திப் பார்த்தான். அது மெழுகுபோல இருந்தது. அதைப் பிட்டுப் பார்த்தான். சுலபமாகப் பிரிந்து வந்தது. அதைக் கண்டதும் அவன் மூளை குழம்பிவிட்டது. 'ஐயோ! யாரோ என் தங்கக் கட்டியைத் திருடிக்கொண்டு இந்த மெழுகை வைத்துவிட்டார்களே' என்று அலறி ஓலமிட்டான். மாளிகையை விட்டு வெளியே கிளம்பினான்.

"ஈயாரே அணிலாரே
எனக்கு நிறையத் தங்கம் தா!
அணிலாரே ஈயாரே
ஆசைதீரத் தங்கம் தா!"

என்று பாடிக்கொண்டே அவன் மறுபடியும் வனத்தை நோக்கிப் புறப்பட்டான். எங்கும் நிற்காமல் வனத்தில் புகுந்தான். அங்கும் அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டே போனான்.

அவனுடைய குரலைக் கேட்டுக் குள்ளநரி மெதுவாக வந்து பார்த்தது. அது நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு அவன் பின்னாலேயே போயிற்று. அதன் நாக்கில் நீர் ஊறிற்று. தங்கமுத்து மாணிக்கத்திற்கு உண்மையாகவே பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் பாட்டுப் பாடிக்கொண்டே வனத்தில் அலைந்து திரிந்தான். குள்ளநரி அவனை விடாது தொடர்ந்து கொண்டிருந்தது."

இவ்வாறு மாயக்கள்ளன் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஆத்மரங்கனைப் பார்த்தான். ஆத்மரங்கன் படிக்கட்டில் நன்றாகத் தூங்க ஆரம்பித்துவிட்டான். தனது தந்திரம் பலித்ததென்று மாயக்கள்ளன் சந்தோஷமடைந்தான். ஆத்மரங்கனைத் தூக்கிக்கொண்டு மலையடிவாரத்திற்கு பழையபடி வந்து சேர்ந்தான்.

# 9. சாட்டை அடி

மாயக்கள்ளனுடைய சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்ட ஆத்ம ரங்கன், நெடுநேரம் வரையிலும் மலையடிவாரத்தில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். பிறகு, திடீரென்று அவனுக்கு விழிப்பு உண்டாயிற்று. அவன் எழுந்தான். மலைமேல் ஏறுவதற்கு மறுபடியும் முனைந்தான். இந்தத் தடவை அவன் நாற்பது வயதுள்ள ஒரு பெண்ணுக உருவமெடுத்துக்கொண்டான். அவன் மலைப்படிகளில் காலெடுத்து வைத்ததும் மாயக் கள்ளன் வந்து சேர்ந்தான். ஒன்றும் அறியாதவன் போல அவன் நடித்தான். மறுபடியும் கதை சொல்லத் தொடங்கினுன்.

'ஆதிலிங்கபுரம் என்று ஓர் அழகான பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்திலே ஒரு பெரிய கோவில் உண்டு. அந்தக் கோயிலிலுள்ள சுவாமிக்கு ஆதிலிங்கேசர் என்று பெயர். அதனுல்தான் அந்தப் பட்டணத்திற்கு ஆதிலிங்கபுரம் என்று பெயர் வந்தது.

ஆதிலிங்கபுரத்திலே வள்ளி நாயகி என்றெருரு பெண் தன் கணவனேடு வசித்து வந்தாள். அவர்களுக்கு வெகு காலமாகக் குழந்தை இல்லை. அதனுல் வள்ளிநாயகி ஆதிலிங்கேசர் கோயிலுக்குத் தினமும் சென்று கடவுளைத் தொழுது வருவாள். பல ஆண்டுகளுக்குப் பிறகு அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதைக் கண்டு அவளும் அவள் கணவனும் மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள். ஆனுல், அந்தச் சந்தோஷம் அதிக நாள் நிலைக்கவில்லை. ஏனென்ருல், அந்தக் குழந்தை ஊமையாக இருந்தது. ஒரு வார்த்தைகூட அது பேசவில்லை.

குழந்தை ஊமையென்று தெரிந்ததும் வள்ளிநாயகியை அவளுடைய கணவன் வெறுத்தான். ஊமைக் குழந்தையைப் பெற்ற அவளை வீட்டைவிட்டு ஓட்டிவிட்டான்.

வள்ளிநாயகி தன் குழந்தையை எடுத்துக்கொண்டு, அந்தப் பட்டணத்திலே ஏழைகள் வசிக்கும் பாகத்திற்குப் போய், அங்கே ஒரு குடிசையில் வசிக்கத் தொடங்கினாள். குழந்தைக்கு ஆதிநாதன் என்று பெயர் வைத்தாள்.

பூக்களைக்கொண்டு மாலை தொடுத்து விற்கும் தொழிலை அவள் நடத்தத் தொடங்கினாள். வள்ளிநாயகி மாலை தொடுப்பதே ஒரு தனி அழகு. புதிது புதிதாக அவள் மாலை செய்வாள். அதனால், அவள் தொடுக்கும் மாலைகளை எல்லோரும் ஆவலோடு வாங்குவார்கள்.

வள்ளிநாயகி ஒவ்வொரு நாளும் தொடுக்கின்ற மாலைகளிலே முதல் மாலை ஆதிலிங்கேசருக்குத்தான். அதை அதிகாலையில் அவருக்குப் போட்டுவிட்டுத்தான் வேறு காரியம் பார்ப்பாள். கடவுள் முன்னிலையில் அவள் நின்று, உலகத்தையே மறந்துவிட்டுத் தொழுவாள். தனது மகன் ஆதிநாதனுக்குப் பேசும் திறமை வர வேண்டும் என்றும், அவன் ஊமையாக இருக்கக்கூடாது என்றும் கடவுளை வேண்டுவாள். இவ்வாறு, பல வருஷங்கள் கழிந்தன. ஆதிநாதனுக்கு பதினெட்டு வயது ஆயிற்று. அதுவரையிலும் அவன் ஊமையாகவே இருந்தான்.

இத்தனை காலமாகக் கடவுளை வேண்டியும் அவன் ஊமையாகவே இருப்பதைக் கண்டு வள்ளிநாயகி சலிப்படையவில்லை. அவளுக்கு ஆதிலிங்கேசரிடத்திலிருந்த நம்பிக்கையும் போகவில்லை. கடவுள் பக்தி அவளுக்கு அதிகமாக வளர்ந்து கொண்டே இருந்தது. அவள் வயது முதிர்ந்த கிழவியாகிவிட்டாள். தலையெல்லாம் வெள்ளை வெளேரென்று நரைத்துவிட்டது; முதுகு கூனிவிட்டது; உடம்பு தளர்ந்துவிட்டது. இருந்தாலும், அவள் தான் தொடுக்கும் மாலைகளில் முதல் மாலையைக் கடவுளுக்குப் போடுவதில் ஒரு நாளும் தவறவில்லை. தன் மகனுக்குப் பேசும் திறமை வரவேண்டும் என்று வேண்டிக்கொள்வதிலும் தவறவில்லை.

இப்பொழுது அவள் கடவுளிடம் அதிக ஆவலோடு வரம் கேட்கத் தொடங்கினாள். தன் மகன் ஊமையாக இல்லாமல் பேசும் திறமையைப் பெற்றுவிட்டால் அவனுக்குப் பதிலாக அவள் ஊமையாக இருக்கத் தயார் என்று கடவுள் முன்னிலையில் கூறினாள். 'ஆதிலிங்கேசா, என் மகனுக்குப் பேசும் திறமை கொடு. அவனுக்குப் பதிலாக நான் என்றும் ஊமையைப் போல இருந்துவிடுகிறேன். நான் ஊமையாக இருக்கத் தயார். என் மகன் மட்டும் ஊமையாக இருக்கக் கூடாது. இந்த வரம் கொடு' என்று கேட்கத் தொடங்கினாள்.

இப்படி அவள் பல நாள்கள் மனமுருகிக் கேட்டாள். ஆதிலிங்கர் முன்னிலையில் நின்று அழுதாள். 'நான் ஊமையாக இருந்துவிடுகிறேன். என் மகனுக்குப் பேசக்கூடிய திறமை அருள்' என்று வாய்விட்டுக் கதறினாள்.

என்ன ஆச்சரியம்! திடீரென்று ஒரு நாள் ஆதிநாதன் நன்றாகப் பேசத் தொடங்கினான். யாரோ கனவில் வந்து அவனுக்குப் பேசச் சொல்லிக் கொடுத்தது போலிருந்ததாம். மறுநாள் அவன் பேச ஆரம்பித்துவிட்டான். பேசியதோடு மட்டுமல்லாமல் அவனுக்கு அழகாகப் பாடக்கூடிய சக்தியும் கிடைத்தது. அவனுடைய குரல் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தது. அவன் சிறந்த சங்கீத வித்வானாகிவிட்டான். எல்லோரும் அவனுடைய பாட்டுத் திறமையைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஆதிநாதனுக்குப் பேசும் திறமை வந்ததைக் கண்டவுடனே வள்ளிநாயகி மௌன விரதம் எடுத்தாள். கடவுளின் முன்னால் அவள் கூறியிருந்தபடி அவள் ஊமையைப்போலப் பேசாமல் வாழத் தொடங்கினாள். அதனுடைய காரணம் ஆதிநாதனுக்கோ மற்றவர்களுக்கோ தெரியாது.

ஆதிநாதன் பல இடங்களிலே பாட்டுக் கச்சேரி செய்தான். அவனைப் பல பேர் ஆவலோடு அழைத்தார்கள். மக்கள் ஆயிரக்கணக்காகக் கூடி, அவன் பாட்டைக் கேட்டு

இன்பமடைந்தார்கள். ஆதிநாதனுக்குப் புகழ் வந்ததோடு பணமும் நிறையக் கிடைத்தது. அவன் ஓர் அழகான மாளிகை கட்டிக்கொண்டு அதில் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பல பேர் இப்பொழுது பெண் கொடுக்க முன் வந்தார்கள். ஆதிநாதன் அழகுசுந்தரி என்ற ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான்.

அழகுசுந்தரி பெயருக்கேற்றவாறு மிகுந்த அழகோடிருந்தாள். அவள் ஆதிநாதனுடைய மாளிகைக்கு வந்ததும் அதிகாரமெல்லாம் அவள் கைக்கு மாறின. ஆதிநாதன் அவளுடைய அழகிலே மயங்கிக் கிடந்தான். அதனால், அவள் விருப்பப்படியே நடக்கத் தொடங்கினான். அவள் வைத்தது தான் சட்டம். அதற்கு விரோதமாக ஆதிநாதன் பேச மாட்டான்.

ஊமையாக இருக்கும் மாமியாராகிய வள்ளிநாயகியை அழகுசுந்தரிக்குப் பிடிக்கவில்லை. நாலு பேருக்கு முன்னால் வள்ளிநாயகி வந்தால் அழகுசுந்தரிக்கு அவமானமாக இருந்தது. மாமியார் ஊமையாக இருப்பதை மற்றவர்கள் தெரிந்துகொள்ளக்கூடாது என்று அவள் நினைத்தாள்.

'நமது வீட்டுக்குப் பெரிய பெரிய சீமான்கள், சீமாட்டிகள் எல்லாம் வருகிறார்கள். அவர்களுக்கு முன்னால் உங்கள் ஊமைத் தாயார் வரக்கூடாது' என்று அவள் ஆதிநாதனிடம் கூறினாள். ஆதிநாதன் பதில் ஒன்றும் கூறவில்லை. அவள் விருப்பப்படியே செய்யும்படி விட்டு விட்டான்.

மாளிகையின் பின்புறத்திலே தோட்டக்காரன் வசிப்பதற்காக ஒரு குடிசை இருந்தது. அதற்குப் பக்கத்தில் மற்றொரு குடிசை போடச் சொன்னாள் அழகுசுந்தரி. அந்தக் குடிசையிலே வள்ளிநாயகியை வசிக்கும்படி அவள் உத்தரவிட்டாள். 'இந்தக் குடிசையை விட்டு மாளிகைக்குள் வரக்கூடாது' என்று அவள் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். வள்ளிநாயகி பேசாமல் அவள் சொல்லியவாறே குடிசையில் வசித்து வந்தாள்.

மகன் சந்தோஷமாக இருந்தால் அதுவே போதும் என்று அவள் நினைத்துக்கொண்டு மாளிகையின் பின்புறத்திலே காலத்தைக் கழித்தாள்.

அங்கே குடிசைக்கு முன்னுல் இருந்த இடத்தில் அவள் ஒரு பூந்தோட்டம் உண்டாக்கினுள். அதில் பூக்கும் பூக்களைக் கொண்டு அழகான மாலைகள் கட்டினுள். அவளுடைய குடிசையிலே ஆதிலிங்கேசர் படம் ஒன்றை வைத்து, அதற்கு அந்த மாலைகளைப் போட்டாள். தன் மகன் சுகமாக இருக்க வேண்டும் என்று கடவுளைத் தினமும் வேண்டிக்கொண்டு வாழ்ந்து வந்தாள்.

இப்படி இருக்கும் போது அழகுசுந்தரிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை நாளடைவில் ஓடி விளையாடத் தொடங்கிற்று. கொஞ்சிக் கொஞ்சிப் பேசிற்று. அது மாளிகையின் பின்புறத்திற்கு வரும். 'பாட்டி, பாட்டி' என்று வள்ளிநாயகியை ஆசையோடு கூப்பிடும். வள்ளி நாயகிக்கு அந்தக் குழந்தையிடம் ரொம்பம் பிரியம். அவள் ஊமையைப்போல் பேசாமல் இருந்தாலும் குழந்தைக்குப் பிரியமானபடியெல்லாம் வேடிக்கை காட்டுவாள். அதன் தலையிலே அழகு அழகாகப் பூமாலைகள் சூட்டுவாள். குழந்தை அவளிடமே இருக்க விரும்பும்.

ஆனுல், அழகுசுந்தரிக்குத் தன் குழந்தை வள்ளி நாயகியிடம் போவது பிடிக்கவில்லை. அந்த ஊமையைப் பாட்டி என்று கூப்பிடக்கூடாது என்று குழந்தையிடம் சொன்னுள். 'அந்தக் குடிசைப்பக்கமே போகக்கூடாது' என்றும் குழந்தைக்கு உத்தரவு போட்டாள்.

குழந்தை எப்படியாவது அழகுசுந்தரியைஏமாற்றிவிட்டுத் தன் பாட்டியிடம் போய்விடும். அதனுல், அழகுசுந்தரிக்குக் கோபம் அதிகரித்தது. தன் மாமியாரைக் கொடுமையாக நடத்தத் தொடங்கினுள். அவளுக்குச் சரியானபடி உணவு கொடுக்காமல் கஞ்சி ஊற்றத் தொடங்கினுள். வாயில் வந்த படியெல்லாம் அவளைத் திட்டினுள்.

வள்ளிநாயகி இவற்றையெல்லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு வந்தாள். அவள் வாய் திறக்கவே இல்லை.

ஒரு நாள் அழகுசுந்தரியின் குழந்தை பாட்டியைக் கூப்பிட்டுக்கொண்டே ஓடி வந்தது. வள்ளிநாயகி அதற்குச் சடை பின்னிவிட்டாள். பூக்களைக்கொண்டு புது விதமாகத் தலையில் அழகு செய்தாள். அந்தச் சமயத்தில் அழகுசுந்தரி அங்கு வந்துவிட்டாள். அவளுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. வள்ளிநாயகியைத் திட்டியதோடல்லாமல் கையிலிருந்த சாட்டையால் அவளை ஓங்கி ஓங்கி அடித்தாள். வள்ளிநாயகி மௌனமாக வலியைப் பொறுத்துக்கொண்டு நின்றாள்.



'அம்மா, பாட்டியை அடிக்காதே' என்று குழந்தை கூறிக்கொண்டே குறுக்கே வந்தது.

'அவளைப் பாட்டி என்று கூப்பிடக்கூடாதென்று உனக்கு நான் சொல்லவில்லையா?' என்று அழகுசுந்தரி கோபத்தோடு கேட்டாள்.

குழந்தை அவளைக் கவனிக்கவில்லை. 'பாட்டி, உனக்கு வலிக்குதா?' என்று அது வள்ளிநாயகியைக் கேட்டது.

அழகுசுந்தரிக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. 'அவளா பாட்டி? அவள் தோட்டக்காரி' என்று உரக்கக் கத்திச் சொன்னாள்.

'அவள் பாட்டிதான். நீ அம்மா, அவள் பாட்டி' என்று குழந்தை மறுபடியும் சொல்லிற்று.

அழகுசுந்தரிக்குக் கோபம் பொங்கியெழுந்தது. குழந்தையைச் சாட்டையால் ஓங்கியடித்தாள். 'பாட்டியென்று சொன்னால் சாட்டையடிதான் கிடைக்கும்' என்று மேலும் உரக்கக் கூவினாள்.

சாட்டையடி பட்டதும் குழந்தை வீர் என்று கத்திவிட்டது. வள்ளிநாயகியால் அதைப் பொறுக்க முடியவில்லை. அவள் தன்னையே மறந்துவிட்டாள். 'ஐயோ, குழந்தையை அடிக்காதே, என்னை வேண்டுமானால் அடி' என்று வாய்விட்டுக் கூறிவிட்டாள்.

அவள் பேசுவதைக் கேட்டதும் அழகுசுந்தரி திடுக்கிட்டு நின்றாள். அந்தச் சமயத்தில் ஆதிநாதனும் அங்கு வந்து சேர்ந்தான். வெளியே போய்விட்டு அப்பொழுதுதான் அவன் மாளிகைக்குத் திரும்பினான். மாளிகையின் பின்புறத்திலே குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்கவே அவன் அங்கு ஓடிவந்தான். அவனும், தன் தாய் வாய் திறந்து பேசியதைக் கேட்டு அப்படியே மரம் போல அசையாமல் நின்றான். வள்ளி நாயகி பேசியதைக் கேட்டு அனைவரும் ஆச்சரியமடைந் தார்கள்.

அவள் அவ்வாறு பேசியது முதல் ஆதிநாதன் பழையபடி ஊமையாகிவிட்டான். அவனால் பேசவே முடியவில்லை.

'ஐயோ, என்னுடைய விரதத்தை மறந்துவிட்டுப் பேசி விட்டேனே; அதனால், என் மகன் மறுபடியும் ஊமையாகி விட்டானே' என்று வள்ளிநாயகி மிகவும் வருத்தமடைந்தாள். அவள் இதுவரையில் பேசாமல் ஊமையைப் போலிருந்த காரணத்தை அறிந்ததும் அழகுசுந்தரி அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். மறுபடியும் தன் புருஷனுக்குப் பேசும்

சக்தி வரும்படி கடவுளிடம் வரம் கேட்கும்படி வள்ளிநாயகியின் காலில் விழுந்து வேண்டிக்கொண்டாள்.

வள்ளிநாயகியும் அவ்வாறே கடவுளை வேண்டினாள். பல முறை ஆதிலிங்கேசர் கோயிலுக்குப் போனாள். பல தேசங்களுக்கு யாத்திரை சென்று, அங்குள்ள கோயில்களிலெல்லாம் வணங்கினாள். ஆனால், ஆதிநாதன் மறுபடியும் பேசவே இல்லை. அவன் ஊமையாகவே இருந்தான். வள்ளிநாயகி ஒவ்வொரு கோயிலாகப் போய்க்கொண்டே இருந்தாள்.''

இவ்வாறு சொல்லிவிட்டு மாயக்கள்ளன் திரும்பிப் பார்த்தான். ஆத்மரங்கன் மலையேறுவதை விட்டுவிட்டு மலைப்படியில் படுத்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். மாயக்கள்ளன் மகிழ்ச்சியடைந்தான். மறுபடியும் தனக்கு வெற்றி கிடைத்ததை அறிந்து சந்தோஷப்பட்டான். ஆத்மரங்கனைத் தூக்கிக்கொண்டு பழையபடி மலையடிவாரம் போய்ச் சேர்ந்தான்.



# 10. மின்சாரபுரி

மலையடிவாரத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஆத்மரங்கன் திடீரென்று விழித்து எழுந்தான். மலையுச்சிக்குப் போக வேண்டும் என்ற ஆசை விடவில்லை. அவன் ஒரு புதிய உருவம் எடுத்துக்கொண்டான். விஞ்ஞானத்தால் எத்தனையோ அற்புதங்கள் நடந்திருக்கின்றன. ஆகாய விமானம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதில் ஏறிக்கொண்டு மனிதன் பறவைகளைப் போல ஆகாயத்திலே பறக்கிறான். விஞ்ஞானத்தின் உதவியால் இன்னும் எத்தனையோ ஆச்சரியமான காரியங்களைச் செய்திருக்கிறான். இந்தத் தடவை ஆத்மரங்கன் ஒரு பெரிய விஞ்ஞானியாக உருவமெடுத்தான். அவன் மலைப்படியில் கால் வைக்கத் தொடங்கியதும் மாயக்கள்ளன் வந்து சேர்ந்தான். அவனுக்கு விஞ்ஞானியிடத்திலும் பயமில்லை. அவனையும் தனது வஞ்சகத்தால் ஏமாற்ற நினைத்தான். அவன் வழக்கம் போல் கதை சொல்லத் தொடங்கினான். விஞ்ஞானி அதைக் கேட்டுக் கொண்டே மலையேறலானான்.

"மின்சாரபுரி என்று ஒரு பட்டணம்இருந்தது. அந்தப் பட்டணத்திலே அணுவரக்கன் என்று ஒருவன் இருந்தான். அவன் விஞ்ஞானத்திலே கெட்டிக்காரன். அவனுக்கு ஈடாக விஞ்ஞானி யாரும் இல்லை. அவன் தன்னுடைய திறமையை உபயோகப்படுத்தி, உலகத்தையே அடக்கி ஆள விரும்பினான். உலகத்திலே இருக்கும் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு ஆகியவற்றையெல்லாம்விட அதிகமான சக்தியுள்ள ஓர் ஆயுதம் கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைத்தான். அந்த மாதிரி ஓர் ஆயுதம் இருந்தால் உலகத்தையே வென்றுவிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் ரகசியமாகப் பல நாள்கள் ஆராய்ச்சி செய்தான், இரவு பகல் தூக்கமில்லாமல் அவன் வேலை செய்தான். பழைய காலத்திலே ராட்சதர்கள் தவம் செய்ததுபோல, இவன் தனது விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடத்திலே தவம் கிடந்தான். பசியை



பற்றி அவன் கவலைப்படவில்லை. தூங்கி இளைப்பாறவும் அவன் நினைக்கவில்லை. ஓயாமல் ஆராய்ச்சி செய்தான்.

இப்படி அவன் மாதக்கணக்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். அவனுடைய ஆராய்ச்சிக்கூடத்திலே எத்தனையோ வகையான இயந்திரங்கள் இருந்தன. புதிய புதிய திராவகங்கள் புட்டிகளில் காட்சியளித்தன.

ஒரு நாள் அவன் வழக்கம் போல, அந்த எந்திரங்களுக்கும் புட்டிகளுக்கும் மத்தியில் இருந்துகொண்டு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான். பல நாள்கள் தூங்காததால் அவனுக்குத் தூக்கம் தள்ளிக்கொண்டு வந்தது. பசி காதை அடைத்தது. இருந்தாலும் அவன் தன் ஆராய்ச்சியை நிறுத்தவில்லை. புட்டிகளுக்கு முன்னால் உட்கார்ந்து ஒரு புதிய எந்திரத்தைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தான்.

என்ன நடக்கிறதென்று அவனுக்குத் தெரியவில்லை. அப்படி அவன் மனம் சிந்தனையில் மூழ்கி இருந்தது.



திடீரென்று ஒரு புதிய ஆயுதத்தை அவன் கண்டுபிடித்து விட்டான். அதனுடைய சக்தி இவ்வளவுதான் என்று யாராலும் சொல்ல முடியாது. அதை எதனாலும் வெல்ல முடியாது. அது ஒரு பெரிய பூதம் போல இருந்தது. அணுவரக்கன் அதற்கு விஞ்ஞான பூதம் என்று பெயர் கொடுத்தான். அந்தப் பூதத்தின் உதவியால் அவன் உலகத்திற்கே சக்கரவர்த்தியாக நினைத்தான்.

அந்த விஞ்ஞான பூதம் ஐந்து நிமிஷத்திலே உலகைத்தை ஒரு தடவை சுற்றிப் பறந்து வந்துவிடும். அது போக

முடியாத இடமே கிடையாது. சந்திரனுக்குப் போக வேண்டு மானாலும் அது இரண்டு மணியிலே போய்விடும்.

விஞ்ஞான பூதத்திற்குப் பசி அதிகம். அதனுடைய உணவு வேடிக்கையானது. அது தினமும் ஆயிரம் அணுகுண்டுகளைத் தின்னும். ஆயிரத்தில் ஒன்று குறைந்தாலும் அதன் பசி அடங்காது. அணுகுண்டுகளை இப்படித் தின்றுவிட்டதும் குடிப் பதற்கு ஹைட்ரஜன் குண்டுகளைக் கேட்கும். நூறு ஹைட்ரஜன் குண்டுகளைக் கொடுத்தால்தான் அதன் தாகம் அடங்கும். சோடாப் புட்டிகளை உடைத்துக் குடிப்பதுபோல, அது ஹைட் ரஜன் குண்டுகளைக் குடிக்கும். இந்த வகையான உணவிலே குறைவு ஏற்பட்டால் அதற்குக் கோபம் வரும்; மேலும் அது அணுவரக்கனையே கடிக்கப்போகும். அணுவரக்கன் ஜாக்கிரதை யாக அதற்கு உணவு கொடுத்து வந்தான்.

இந்த விஞ்ஞான பூதத்தை உண்டாக்கியவுடனே அணு வரக்கன் தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ள எண்ணினான்.



விஞ்ஞான பூதத்தின்மேல் ஏறிக்கொண்டு அவன் உலகத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். 'நான்தான் உலகத்திற்கே சக்கர வர்த்தி. என்னை யாராவது எதிர்த்தால் அவர்களை உடனே

கொன்றுவிடுவேன். எந்தத் தேசமாவது எனக்கு அடங்கி நடக்காவிட்டால் அந்தத் தேசத்தின்மீது விஞ்ஞான பூதத்தை விட்டு நெருப்பு மழை பெய்து பொசுக்கிவிடுவேன்' என்று உரக்கக் கூவினன்.

கடலுக்கு மத்தியிலே ஒரு பெரிய தீவு இருந்தது. அந்தத் தீவிலுள்ளவர்கள் அணுவரக்கன் சொல்வதைக் கேட்டுச் சிரித்தார்கள். அவனைப் பைத்தியக்காரன் என்று கேலி செய்தார்கள். அவனல் அப்படிப் பொசுக்க முடியாது என்று நினைத்தார்கள். அணுவரக்கனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் விஞ்ஞான பூதத்தை அந்தத் தீவின்மேல் ஏவினன். அது ஒரு நொடியிலே அந்தத் தீவில் நெருப்பு மழையைக் கக்கிற்று. விஞ்ஞான பூதத்தின் வாயிலிருந்தும் மூக்கி லிருந்தும் கண்களிலிருந்தும் நெருப்புக் குழம்பு வெளிப்பட்டது. அந்தத் தீவு முழுவதும் ஒரு நாழிகை அளவுக்குள் வெந்து சாம்பலாகிவிட்டது.

இதைப்பற்றி உலகத்திலுள்ள மற்ற தேசத்தவர் களெல்லாம் கேள்விப்பட்டார்கள். பயந்து நடுங்கினர்கள். அமெரிக்காவும் ரஷ்யாவும் மட்டும் கொஞ்சம் தைரியமாக இருந்தன. தங்களிடத்திலே அணுகுண்டும், ஹைட்ரஜன் குண்டும் இருப்பதால் அந்தத் தேசங்கள் அணுவரக்கனை எதிர்க் கலாம் என்று நினைத்தன. அணுவரக்கன் விஞ்ஞான பூதத்தின் மேல் ஏறிக்கொண்டு தங்களுக்கு முன்னல் வந்தபோது அந்தத் தேசங்கள் அணுகுண்டையும் ஹைட்ரஜன் குண்டையும் வீசின. விஞ்ஞான பூதம் அந்தக் குண்டுகளையெல்லாம் வாயைத் திறந்து விழுங்கிவிட்டு ஏப்பமிட்டது. அதைக் கண்டு அந்தத் தேசங்களும் பயந்துபோய்விட்டன. அவைகளும் நடுங்க ஆரம்பித்தன. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தன.

'நான்தான் உலகத்திற்குச் சக்கரவர்த்தி. எல்லாத் தேசத்து அரசர்களும் மந்திரிகளும், அரசியல் தலைவர்களும் உடனே என்னிடம் வரவேண்டும். வந்து என்னைப் பணிந்து நான் சொல்லுகிறபடி அடங்கி நடக்கவேண்டும். இல்லா விட்டால் உலகத்தையே அழித்துவிடுவேன்' என்று அணு வரக்கன் கர்ஜனை செய்தான். அந்தக் கர்ஜனை உலகம் முழு வதும் கேட்டது.

உலகத்திலுள்ள மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் அலறி அழுதார்கள். மக்களின் தலைவர்களுக்கும் ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் மக்களைப்பற்றிக் கவலைப்படாமல் தாங்கள் தப்பினால் போதுமென்று மலைக்குகைகளில் ஓடி ஒளியத் தொடங்கினார்கள்.

அந்தச் சமயத்திலே, இமயமலையிலே, ஒரு மகான் தவம் செய்துகொண்டிருந்தார். உலகத்திலுள்ள மக்களின் நிலையைக் கண்டு அவர் இரக்கம் கொண்டார். அவர் உலகத்திலுள்ள தலைவர்களையெல்லாம் கூப்பிட்டு, அவர்களுக்கு உபதேசம் செய்தார். தலைவர்களெல்லாம் அவரைப் பார்த்து, 'எங்களுக்கு விஞ்ஞான பூதத்தைவிடப் பெரிய பூதத்தை உண்டாக்கிக் கொடுங்கள். உங்களுடைய தவத்தால் அதைச் செய்யுங்கள்'



என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த மகான் சிரித்தார். 'தலைவர்களே, பூத்த்தை பூதத்தால் வெல்ல முடியாது. அன்பினால்தான் அதை வெல்லலாம். ஆதலால், அணுவரக்கன் விரும்புகிறதுபோல அவனையே உலகத்தின் சக்கரவர்த்தியாக ஆக்கிவிடுங்கள். அவனை எதிர்த்தால் உலகம் அழிந்துபோகும். எதிர்க்காமல் விட்டுவிட்டால் அவன் தானாகவே அழிந்து போவான்' என்று சொன்னார்.

அந்த மகானுடைய உபதேசத்தின்படி நடப்பதைத் தவிர வேறு வழியொன்றும் இல்லை. அதனால் எல்லாத் தலைவர்களும் அதன்படி நடந்தார்கள். அணுவரக்கன் உலகத்திற்கே சக்கரவர்த்தி ஆகிவிட்டான். ஒவ்வொரு தேசத்திலுள்ள படைகளையெல்லாம் அவன் கலைத்துவிட்டான். அங்கிருந்த பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் விஞ்ஞான பூதத்திற்குக் கொடுத்தான். அவற்றையெல்லாம் பலகாரமாக விஞ்ஞான பூதம் சாப்பிட்டுவிட்டது.

உலகத்தில் யாரும் இனிமேல் எந்திர ஆராய்ச்சி செய்யக் கூடாது என்று அவன் உத்தரவிட்டான். அப்படி ஆராய்ச்சி செய்தால் யாராவது விஞ்ஞான பூதத்தைவிடப் பெரிய பூதத்தை உண்டாக்கி,அவனைக் கொன்றுவிடுவார்கள் என்று அவனுக்குப் பயம். அவன் உலகத்திலுள்ள எல்லா ஆராய்ச்சிக் கூடங்களையும் இடித்தெறிந்துவிட்டான். ஆராய்ச்சி செய்வதற்கான எந்திரங்களையும் உடைத்தெறிந்துவிட்டான். சிறிய கைத்தொழிற்சாலையைக்கூட அவன் விட்டு வைக்கவில்லை.

இவ்வாறு செய்ததால் உலகத்திலே அனைவரும் எந்திரம் செய்யும் தொழிலை மறந்துவிட்டார்கள். எல்லோரும் நிலத்தை உழுதுகொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

அணுவரக்கன் தன்னிடம் பத்தாயிரம் பேரை வைத்திருந்தான். அவர்களுக்கு மட்டும் அணுகுண்டும் ஹைட்ரஜன் குண்டும் செய்யத் தெரியும். அணுவரக்கன் ஒரு பெரிய ஆராய்ச்சிக்கூடம் கட்டியிருந்தான். அதில் இருந்துகொண்டு அந்தப் பத்தாயிரம் பேரும் அணுகுண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் செய்து விஞ்ஞான பூதத்திற்கு உண்ண உணவும் குடிக்க நீரும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

உலகத்திற்கே சக்கரவர்த்தியாகிவிட்ட போதிலும் அணுவரக்கனுக்குச் சந்தோஷம் உண்டாகவில்லை. அவனுக்குச் சந்தேகமும் பயமும் அதிகமாயின. யாராவது ரகசியமாகப் புதிய ஆயுதம் செய்துகொண்டிருந்தால் என்ன செய்வது என்று அவனுக்குச் சந்தேகம். யாராவது தன்னைவிடப்

பலவானாக வந்துவிட்டால் என்ன செய்வது என்று பயம். அதனால் அவன் விஞ்ஞான பூதத்திலேறி உலகத்தைச் சுற்றிக் கொண்டே இருந்தான். துப்பறியும் போலீசார்களை ரகசியமாக உலகமெங்கும் ஏவினான். ஒவ்வொரு மனிதனையும் ரகசியமாகக் கவனித்து வரும்படி அவன் உத்தரவிட்டான். அப்படி யிருந்தும் அவனுக்குச் சந்தேகமும் பயமும் தீரவில்லை; அவை வளர்ந்துகொண்டே இருந்தன.

ஒரு நாள் அவனுடைய ஆராய்சிக்கூடத்திற்குள்ளே இரண்டு பூனைகள் யாருக்கும் தெரியாமல் புகுந்துவிட்டன. அவைகள் எந்திரங்களுக்கு மத்தியிலும் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளுக்கு மத்தியிலும் சுற்றிக்கொண்டிருந் தன. அந்தச் சமயத்தில் அங்கு வந்த அணுவரக்கன் அவற்றைப் பார்த்துவிட்டான். பூனைகளும் அவனைப் பார்த்தன. பார்த் ததும் அவைகள் ஜன்னல் வழியே எட்டிக் குதித்து ஓடிப்போய்விட்டன.



அணுவரக்கனுக்குச் சந் தேகம் உண்டாகிவிட்டது. அந்தப் பூனைகள் தன்னுடைய ஆராய்ச்சிக் கூடத்திலுள்ள ரகசியங்களைக் கண்டுபிடித்து யாரிடமோ சொல்லப்போயிருக் கின்றன என்று அவன் நினைத்தான். உடனே அவன் அந்தப் பூனைகளைத் தேடிப் பிடித்துக் கொல்லும்படி உத்தரவிட்டான்.

ஆனால், அந்தப் பூனைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவை எப்படியோ தப்பித்துக்கொண்டு எங்கேயோ போய் விட்டன. அணுவரக்கனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. உலகத்திலுள்ள எல்லாப் பூனைகளையும் உடனே கொன்றுவிட வேண்டும் என்று எல்லோருக்கும் அறிவித்தான். யார் வீட்டிலாவது பூனையிருந்தால் அந்த வீட்டிலுள்ள அத்தனை பேரையும் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான். விஞ்ஞான பூதத்தின்மேல் ஏறிக்கொண்டு உலகமெங்கும் இதைச் சொல்லி வந்தான். மக்களெல்லோரும் அவனுக்குப் பயந்துகொண்டு

ஒரு பூனையையும் விடாமல் எல்லாப் பூனைகளையும் கொன்று விட்டார்கள். உலகத்தில் பூனையே இல்லாமல் போய்விட்டது.

பூனையில்லாததால் உலகத்தில் எலிகள் ஏராளமாகப் பெருகின. அவைகள் மக்களுக்கு வேண்டிய உணவுப்பொருள் களையெல்லாம் தின்று தீர்த்துவிட்டன. அதனால் மக்கள் பட்டினியாகக் கிடக்கவேண்டியதாயிற்று. அவர்கள் அணுவரக்கனிடம் சென்று முறையிட்டார்கள். எலிகளால் தங்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைப்பற்றிச் சொன்னார்கள்.

'எலிகளையெல்லாம் ஒன்றுவிடாமல் கொல்லுங்கள்' என்று அணுவரக்கன் உத்தரவிட்டான். ஆனால், பூனைகளைக் கொன்றது போல் எலிகளைக் கொல்ல முடியவில்லை. அவைகள் தரையி



லுள்ள வளைக்குள் நுழைந்துகொண்டன. மனிதர் தூங்கும் சமயம் பார்த்து அவை வெளியே வந்து உணவையெல்லாம் தின்றுவிட்டு மறுபடியும் வளைக்குள் ஓடி ஒளிந்துகொண்டன.

மக்கள் அணுவரக்கனிடம் சென்று, எலிகளைக் கொல்ல முடியவில்லையென்று சொன்னார்கள். எலிகளைப் பிடிக்க எலிப் பொறிகள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

'எலிப்பொறி வேண்டுமானால் நீங்களே செய்துகொள்ளக் கூடாதா?' என்று அணுவரக்கன் கோபத்தோடு உறுமினான்.

'உலகத்திலே தொழிற்சாலை ஒன்றுகூட இல்லை. எல்லா வற்றையும் நீங்கள் அழித்துவிட்டீர்கள். அதனால் எலிப்பொறி செய்யவும் எங்களால் முடியவில்லை. எங்களுக்குச் சிறிய எந்திரம் செய்யவும் இப்பொழுது தெரியாது' என்று மக்கள் பணிவோடு தெரிவித்தார்கள். அணுவரக்கன் யோசித்துப் பார்த்தான். இந்த மக்கள் உயிரோடிருந்தால்தானே தான்

சக்கரவர்த்தியாக இருக்க முடியும்?' ஆதலால், அவர்களை எலிகளிடத்திலிருந்து காப்பாற்ற நினைத்தான்.

உடனே அணுவரக்கன் தனது ஆராய்ச்சிக் கூடத்திலுள்ள பத்தாயிரம் விஞ்ஞானிகளையும் கூப்பிட்டான்: 'நீங்கள் ஆயிரக் கணக்கான எலிப்பொறிகளைச் செய்து இந்த மக்களுக்குக் கொடுக்க வேண்டும்' என்று ஆணையிட்டான்.

'சக்கரவர்த்தியே, ஆயிரம் அணுகுண்டும், நூறு ஹைட்ரஜன் குண்டும் செய்வதற்கே நாளெல்லாம் சென்றுவிடுகிறது. அதனால் எலிப்பொறி செய்ய நேரமில்லையே' என்று அவர்கள் சொன்னார்கள்.

அணுவரக்கனுக்கு மேலும் கோபம் வந்தது. 'இரவெல்லாம் வேலை செய்து எலிப்பொறி செய்யுங்கள். இல்லாவிட்டால் சாட்டையடி கொடுப்பேன்' என்று அவன் இடிபோலக் கர்ஜித்தான்.

விஞ்ஞானிகள் பயந்துகொண்டு அவன் உத்தரவிட்டவாறே இரவெல்லாம் எலிப்பொறி செய்யத் தொடங்கினார்கள். பகலிலே அணுகுண்டும் ஹைட்ரஜன் குண்டும் செய்யவேண்டும்; இரவிலே எலிப்பொறி செய்ய வேண்டும்.

இவ்வாறு இரவு பகலாக ஓய்வில்லாமல் வேலை செய்ததால் விஞ்ஞானிகள் களைத்துப் போய்விட்டார்கள். அவர்களில் பல பேர் வேலை செய்யச் செய்ய ஒவ்வொருவராகக் கீழே விழுந்து இறந்தார்கள். விஞ்ஞானிகளின் கூட்டம் குறைந்துகொண்டே வந்தது. பத்தாயிரம் பேர்கள் ஐயாயிரம் பேர்களாகக் குறைந்து விட்டார்கள்.

விஞ்ஞானிகள் இப்படி இறக்கவே தினந்தோறும் ஆயிரம் அணுகுண்டுகளும், நூறு ஹைட்ரஜன் குண்டுகளும் செய்ய முடியவில்லை. குண்டுகளின் எண்ணிக்கை குறையலாயிற்று. அதைக் கண்டு விஞ்ஞான பூதத்திற்குக் கோபம் வந்தது. அது பசியால் ஊளையிட்டது. தனக்குக் கிடைக்க வேண்டிய உணவு சரியாகக் கிடைக்காததால் அந்த உணவுக்குச் சரி செய்ய அணு

வரக்கனைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடித்துத் தின்னத் தொடங்கிற்று. ஒரு நாள் அது அணுவரக்கனுடைய கைவிரல் களில் ஒன்றைக் கடித்துத் தின்றது. அடுத்த நாள் மற்றொரு விரலைக் கடித்தது. மூன்றும் நாளில் அவனுடைய காதுகளைக் கடித்து விழுங்கிவிட்டது. நான்காம் நாளில் அணுவரக் கனுடைய மூக்குப் போய்விட்டது.

இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உறுப்புப் போவதைக் கண்டதும் அணுவரக்கனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. உயிரோடிருந்த மீதி விஞ்ஞானிகளை அவன் கூப்பிட்டான். 'இந்த விஞ்ஞான பூதத்தைக் கொல்வதற்கு வழியில்லையா ? அந்த வழியை ரகசியமாக உடனே கண்டுபிடியுங்கள்' என்று அவர்களிடம் சொன்னான். உயிர் தப்பினால் போதும் என்று அவன் நினைக்க ஆரம்பித்தான்.

'நீங்கள் கண்டுபிடித்த பூதத்தை எங்களால் கொல்ல முடியாது' என்று அவர்கள் சொன்னார்கள்.

அணுவரக்கன் பூதத்தைக் கொல்லத் தானே வழி கண்டு பிடிக்கத் தொடங்கினான். அவன் ஆராய்ச்சிக்கூடத்தில் அமர்ந்து வேலை செய்வதை விஞ்ஞான பூதம் கண்டது. அது உடனே விஷயத்தைப் புரிந்துகொண்டுவிட்டது.

விஞ்ஞான பூதத்திற்குக் கோபம் பொங்கியெழுந்தது. அது அணுவரக்கனையும் ஆராய்ச்சிக் கூடத்தையும் அப்படியே தூக்கி வாயில் போட்டு விழுங்கிவிட்டது.

விஞ்ஞான பூதத்தின் வயிற்றுக்குள் ஆராய்ச்சிக்கூடம் தலைகீழாகப் போய் விழுந்தது; அணுவரக்கனும் குப்புற விழுந்தான். அப்படித் தலைகீழாக விழுந்ததால் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்த புட்டிகளெல்லாம் வயிற்றுக்குள் கவிழ்ந்து கீழே விழுந்து புரண்டன. புட்டிகளிலிருந்த திராவகங்களும் மருந்து களும் பூதத்தின் வயிற்றுக்குள் கொட்டிக் கலந்தன. அவற்றி லிருந்து திடீரென்று ஒரு பெரிய புகை கிளம்பிற்று. புயல் போல அது பெரிதாயிற்று.

விஞ்ஞான பூதத்தின் வயிற்றிலே புகை நிறைந்ததால் அதன் வயிறு பலூனைப் போல உப்பத் தொடங்கிற்று. புகை மேலும் மேலும் அதிகமாக உண்டாயிற்று. பூதத்தின் வயிறும் மேலும் மேலும் உப்பி மலைபோல ஆகிவிட்டது.

அப்படி வயிறு மலைபோல உப்பியதும் விஞ்ஞான பூதம் ஜிவ்வென்று ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியது. அது மிக வேகமாக மேலே மேலே போயிற்று. உலகத்தை விட்டுப் பத்தாயிரம் மைல் தூரம் உயர்ந்து சென்றுவிட்டது. அங்கே போனதும் விஞ்ஞான பூதத்தின் வயிறு டபார் என்று வெடித்து விட்டது. பூதமும் சுக்கு நூருக உடைந்து சிதறியது. வயிறு வெடித்ததும் அதில் அகப்பட்டுக்கொண்டிருந்த அணு வரக்கன் பூமியை நோக்கி விழத் தொடங்கினுன். 'ஐயோ, பூமியின் மேல் விழுந்தால் தலை சுக்குச் சுக்காகப் போய் விடுமே' என்று அவன் அலறிக் கூவினுன். அப்படிக் கூவிக் கொண்டு அவன் கையையும் காலையும் உதறினுன். அவன் கைகள் ஏதோ ஒரு புட்டியின் மேல் வேகமாக மோதிற்று. அவன் திடுக்கிட்டு எழுந்தான். அப்பொழுதுதான் இவையெல்லாம் கனவு என்று அணுவரக்கனுக்குத் தெரிந்தது.

அணுவரக்கன் தனது ஆராய்ச்சிக்கூடத்தில் ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தானல்லவா? அப்படி ஆலோசனை பண்ணும்போது அவன் தூங்கிவிட்டான். பல நாள்கள் அவன் தூங்காமையால் அவனையும் அறியாமல் தூக்கம் வந்துவிட்டது. தூக்கத்தில்தான் அவன் விஞ்ஞான பூதம் செய்தது போலக் கனவு கண்டான்.

அணுவரக்கன் கனவிலிருந்து அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். அப்படி எழுந்தபோது ஆராய்ச்சிக் கூடத்திலிருந்த சில புட்டிகள் அவனுடைய கைகளில் மோதி உடைந்துவிட்டன. அவற்றிலிருந்த விஷத் திராவகங்கள் சிதறி அவன் கண்களில் விழுந்தன. அதனுல் அவனுடைய கண்கள் குருடாகிவிட்டன.

'ஐயோ! விஞ்ஞானத்தைக்கொண்டு உலகுக்கு நன்மை செய்ய நினைக்காமல் நான் உலகத்தை அடக்கி ஆள நினைத்ததால் எனக்கு இந்தக் கதி வந்ததே' என்று அவன் அழுது புலம்பிக்கொண்டே இருந்தான். அவனுடைய அழுகை நிற்கவே இல்லை.''

இவ்வாறு சொல்லிவிட்டு மாயக்கள்ளன் திரும்பிப் பார்த்தான். மலையில் பாதி உயரம் வரை ஏறி வந்திருந்த ஆத்மரங்கன் அந்தச் சமயத்தில் கீழே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். மாயக்கள்ளனுக்கு மேலும் ஒரு வெற்றி கிடைத்தது. அவன் சந்தோஷமாக ஆத்மரங்கனைத் தூக்கிக்கொண்டு பழையபடி மலையடிவாரம் போய்ச் சேர்ந்தான்.



# 11. உளுந்து வடை

தூங்கிக்கொண்டிருந்த ஆத்மரங்களை மாயக்கள்ளன் மலையடிவாரத்திற்குக் கொண்டுவந்தானல்லவா? ஆத்மரங்கன் அங்கேயே கிடந்து நீண்ட நேரம் தூங்கினான். பிறகு, அவனுக்கு விழிப்பு ஏற்பட்டது. மலையடிவாரத்தில் இருக்கிற விஷயம் அவனுக்குத் தெரிந்தது. மறுபடியும் மலையேறத் தொடங்கினான். இந்தத் தடவை அவன் ஒரு கிழவனைப் போல உருவமெடுத்துக் கொண்டான். அவன் மலைப்படியில் கால் வைத்ததும் மாயக் கள்ளன் வந்து சேர்ந்தான். வழக்கம் போலக் கதையை ஆரம்பித்தான்:

"பழங்காட்டூர் என்று ஒரு சிறிய ஊர் இருந்தது. அங்கே வசிப்பவர்களெல்லாம் உழவர்கள். நிலத்தை உழுது சிரமப்பட்டு வேலை செய்கின்றவர்கள். அந்த ஊரிலே ஒரு கிழவன் வசித்து வந்தான். அவன் மிகவும் தந்திரசாலி. சிரமப்பட்டு வேலை செய்யமாட்டான். தந்திரத்தாலேயே அவன் வாழ்க்கை நடத்தி வந்தான். ஊராரைத் தந்திரமாக ஏமாற்றி எப்படியாவது வயிற்றுக்குச் சோறு தேடிக்கொள்வான்.

வீதியில் ஏதாவது ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும். அந்தக் கிழவன் யாருக்கும் தெரியாமல் அதை மெல்லக் கிள்ளிவிடுவான். குழந்தை அழத்தொடங்கும். உடனே அதைத் தூக்கிக்கொண்டு அதன் தாயிடம் ஓடுவான்.

'அம்மா, குழந்தை ஏனோ அழுதுகொண்டே நின்றது. நான் தூக்கிக்கொண்டு ஓடிவந்தேன். தங்க நகையெல்லாம் போட்டிருக்கிறது. யாராவது திருடன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?' என்று தாயிடம்

சொல்லுவான். 'அழாதே கண்ணு, அழாதே பாப்பா' என்று குழந்தையிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவான்.



அதைக் கண்டதும் குழந்தையின் தாய்க்கு அந்தக் கிழவன் மீது அன்பு உண்டாகிவிடும். அவள் அவனுக்குச் சோறு போடுவாள்.

வீதியோரத்தில் உள்ள மரத்தில் யாராவது மாட்டைக் கட்டி வைத்திருப்பார்கள். அந்தக் கிழவன் ஒருவருக்கும் தெரியாமல் மாட்டை அவிழ்த்துவிட்டு ஓட்டிவிடுவான். மாடு கொஞ்ச தூரம் போன பிறகு அதன் சொந்தக்காரரிடம் ஓடுவான். 'ஐயா, உங்கள் மாடு கட்டை அவிழ்த்துக்கொண்டு ஓடுகிறது. நான் போய்ப் பிடித்துக்கொண்டு வரட்டுமா?' என்று கேட்பான். அவர்கள் பதில் சொல்லுவதற்கு முன்னாலே அவன் ஓடிப் போய் மாட்டைப் பிடித்துக்கொண்டு வருவான். மாட்டின் சொந்தக் காரருக்குக் கிழவன்மேல் பிரியம் உண்டாகிவிடும். அன்று அவர் வீட்டிலே கிழவனுக்குச் சோறு கிடைக்கும்.

அந்த ஊரிலே ஒரு கிழவி இட்டிலி சுட்டு விற்று வந்தாள். அவள் இட்டிலி விற்கத் தன் வீட்டை விட்டு வெளியே போய் விடுவாள். அந்தச் சமயம் பார்த்துக் கிழவன் அவளிடம் போய், 'பாட்டி, உன் வீட்டுக்கு முன்னாலிருக்கும் கீரைப் பாத்தியில் யாருடைய வெள்ளாடோ புகுந்துவிட்டது. அதை நான் துரத்தி விட்டேன்' என்பான். கிழவி சந்தோஷத்தோடு அவனுக்கு ஓர் இட்டிலியும் அரையணாக் காசும் கொடுப்பாள்.

இப்படியாக அவன் தந்திரத்தாலேயே காலந் தள்ளி வந்தான். அவனுடைய தந்திரத்தை அறிந்த சிலபேர் அவனைக் கிழக் குள்ளநரி என்று கூப்பிட்டார்கள். கிழக் குள்ளநரி என்ற பெயர் மெதுவாக வெளியில் பரவிற்று. எல்லோருக்கும் அந்தப் பெயர் தெரிந்துவிட்டது. அப்படித்தெரிந்ததும் கிழவனை யாரும் நம்பவில்லை. அவனைப் பக்கத்தில் சேர்ப்பதும் இல்லை. கிழவனுக்கு அந்த ஊரில் சோறு கிடைப்பது சிரமமாயிற்று.

கிழவன் அந்த ஊரை விட்டு வேறு எங்காவது போகத் தீர்மானித்தான். புதிய ஊரில் அவனுடைய தந்திரம் பலிக்கு மென்று நினைத்தான். அதனால் அவன்,ஒரு நாள் அதிகாலையில் எழுந்து,யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டான். நெடுந்தூரம் சென்ற பிறகு, வழியிலே ஓர் ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றைக் கடக்க ஓடத்தில் ஏறிச் செல்ல வேண்டும்' ஓடக்காரனுக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

ஓடக்காரனுக்குப் பணம் கொடுக்கக் கிழவனுக்கு மனம் வரவில்லை. அவன் ஓடக்காரனை ஏமாற்றிவிட்டுத் தந்திரமாக அக்கரை போக நினைத்தான். அதற்காக ஓடக்காரன் தன் வீட்டிற்கு உணவருந்தப் போகும் வரையில் காத்திருந்தான். ஓடக்காரன் வீட்டுக்குச் சென்றதும் கிழவன் மெதுவாக வந்து, ஆற்றோரத்தில் இருந்த ஓடத்தில் ஏறிக்கொண்டான்.

அந்த ஓடத்தின் மத்தியில் ஒரு சிறிய குடிசை போல் மூங்கிலிலே கட்டியிருந்தது. அதற்குள் கிழவன் புகுந்து யாருக்கும் தெரியாமல் உட்கார்ந்துகொண்டான்.

ஆற்றின் கரையில் ஓடத்திற்குப் பக்கமாக ஒரு குரங்கு வந்து நின்றது; பிறகு ஆற்றில் தண்ணீர் குடிக்கத் தொடங்கிற்று.

கிழவன் அந்தக் குரங்கைக் கூப்பிட்டான்.

'குரங்காரே, குரங்காரே, இந்த ஓடத்தைக் கொஞ்சம் தள்ளிவிடு' என்று அவன் சொன்னான்.

'நீ யார்? நீ எங்கே போகிறாய்?' என்று குரங்கு கேட்டது.

'நான்தான் கிழக் குள்ளநரி. மாமியார் வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகிறேன்' என்றான் கிழவன்.

'திரும்பி வரும்போது எனக்கென்ன கொண்டுவருவாய்?' என்று மறுபடியும் கேட்டது குரங்கு.

'உளுந்து வடை ஒரு கூடை, ஓமப்பொடி ஒரு கூடை; தயிர் வடையும் ஒரு கூடை, சர்க்கரைப் பொங்கலும் ஒரு கூடை' என்று ஆசைகாட்டிச் சொன்னான் கிழவன்.

'சரி, போய் வா' என்று சொல்லிவிட்டுக் குரங்கு, ஓடத்தைத் தன் கைகளால் தள்ளிவிட்டது. பலகாரமெல்லாம் கிடைக்குமென்று அதற்கு ஆசை உண்டாயிற்று.

ஓடம் ஆற்றிலே கொஞ்ச தூரம் சென்றது. அங்கே ஒரு பாறை இருந்தது. அந்தப் பாறையின்மேல் உட்கார்ந்து ஒரு கொக்கு மீன் பிடித்துத் தின்றுகொண்டிருந்தது. கிழவன் கொக்கை உதவிக்கு அழைத்தான்.

'கொக்காரே, கொக்காரே, இந்த ஓடத்தைக் கொஞ்சம் தள்ளிவிடு.'

'நீ யார்? நீ எங்கே போகிறாய்?'

'நான்தான் கிழக் குள்ளநரி; மாமியார் வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகிறேன்.'

'எனக்கென்ன கொண்டுவருவாய்?'

'உளுந்து வடை ஒரு கூடை, ஓமப்பொடி ஒரு கூடை; தயிர் வடையும் ஒரு கூடை, சர்க்கரைப் பொங்கலும் ஒரு கூடை.'

கொக்குக்கு நாக்கில் நீர் ஊறிற்று.

'சரி, போய் வா' என்று சொல்லிவிட்டு, ஓடத்தைத் தன் மூக்கால் தள்ளிவிட்டது.

ஓடம் நகர்ந்து நடு ஆற்றிற்கு வந்துவிட்டது. அங்கே மற்றொரு பாறை இருந்தது. அதன்மேல் ஒரு முதலை படுத்து வெயில் காய்ந்துகொண்டிருந்தது.

'முதலையாரே, முதலையாரே, இந்த ஓடத்தைக் கொஞ்சம் தள்ளிவிடு.'

'நீ யார்? நீ எங்கே போகிறாய்?'

'நான்தான் கிழக் குள்ளநரி; மாமியார் வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகிறேன்.'

'எனக்கென்ன கொண்டுவருவாய்?'

'உளுந்து வடை ஒரு கூடை, ஓமப்பொடி ஒரு கூடை; தயிர் வடையும் ஒரு கூடை; சர்க்கரைப் பொங்கலும் ஒரு கூடை.'



முதலை வாயைச் சப்பிக்கொண்டது. 'சரி, போய் வா' என்று சொல்லித் தன் நீண்ட வாலால் தள்ளிவிட்டது.

ஓடம் வேகமாகச் சென்று அக்கரைக்குப் பக்கமாகவே போய்விட்டது. ஆனால், இன்னும் கரை சேரவில்லை. அங்கே ஒரு பாறைமேல் ஒரு குள்ளநரி உட்கார்ந்து, நண்டு பிடித்துக் கொண்டிருந்தது.

'நரியாரே, நரியாரே, ஓடத்தைக் கொஞ்சம் தள்ளிவிடு.'

'நீ யார்? நீ எங்கே போகிறாய்?'

'நான்தான் கிழக் குள்ளநரி; மாமியார் வீட்டுக்கு விருந்து சாப்பிடப் போகிறேன்.'

'நீ கிழக் குள்ளநரியானால் என்னைப்போல ஊளையிடு பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டுக் குள்ளநரி நெடுநேரம் ஊளையிட்டுக் கத்திற்று.

கிழவனால் குள்ளநரியைப் போல ஊளையிட முடியவில்லை. அவனுடைய் தந்திரம் குள்ளநரியிடம் பலிக்கவில்லை. ஓடத்தில் இருப்பவன் ஒரு மனிதன் என்று குள்ளநரி கண்டுகொண்டது.

உடனே குள்ளநரி ஓடத்தைப் பிடித்து முதலையிருக்கிற பக்கமாக நடு ஆற்றிற்குத் தள்ளிவிட்டது. தள்ளிவிட்டதோடு அது சும்மா இருக்கவில்லை.

'முதலையாரே, முதலையாரே, ஓடத்திலே கிழவன் வருகிறான். பிடித்துக்கொள்; ஈரல் மட்டும் என் பங்கு' என்று சத்தம் போட்டுக் கூவிற்று.

அதற்குள் ஓடமும் முதலையிருக்கிற பாறைக்குப் பக்கத்தில் வந்துவிட்டது. முதலை வாலால் தூக்கியடித்தது. ஓடம் குப்புறக் கவிழ்ந்து உடைந்தது. குடிசைக்குள் இருந்த கிழவன் வெளியே வந்து தண்ணீரில் விழுந்தான். முதலை அவனைப் பிடித்துக் கொண்டது.

இவ்வாறு மாயக்கள்ளன் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஆத்மரங்கன் தூங்கி விழலானான். தன்னை மறந்து அவன் மலைப்படியில் படுத்துக்கொண்டான். உடனே அவன் நன்றாகத் தூங்க ஆரம்பித்தான். மாயக்கள்ளனுக்கு மறுபடியும் வெற்றி கிடைத்துவிட்டது. அவன் குதூகலமடைந்தான். புன் சிரிப்போடு அவன் ஆத்மரங்கனைத் தூக்கிக்கொண்டு பழையபடி மலையடிவாரம் போய்ச் சேர்ந்தான்.



# 12. சித்துப் பெருமான்

மறுபடியும் மலையடிவாரத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஆத்மரங்கன் வெகுநேரம் கழித்து விழித்துப் பார்த்தான். எப்படியாவது மலையுச்சிக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற ஆவல் அவனுக்கு அதிகமாயிற்று. கடவுளிடத்திலே மிகுந்த பக்தியுடைய ஒரு பக்தனுச ருஉவமெடுத்துக்கொண்டு அவன் புறப்பட்டான். மலைப்படிகளின்மீது காலெடுத்து வைக்கத் தொடங்கினான். மாயக்கள்ளன் கதை சொல்லு வதற்கு உடனே வந்து சேர்ந்தான். கடவுள் அடியாரிடத்தில் அவனுக்குக் கொஞ்சம் பயம் உண்டு. இருந்தாலும் அவன் தளர்ந்துவிடவில்லை. தன்னுடைய கதையை வழக்கம் போல ஆரம்பித்தான்:

"பெருமாள் திருநகரம் என்று ஒரு சிறிய பட்டணம் இருந்தது. அங்கே ஒரு பக்தர் வசித்து வந்தார். அவர் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் பெருமாள் கோயிலுக் குச் சென்று பிரார்த்தனை செய்வார். பெருமாள் பேரில் பாடல்கள் பாடுவார். பெருமாளுடைய தரிசனம் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்வார்.

இப்படிப் பல ஆண்டுகளாகப் பெருமாளைத் தொழுது கொண்டு அவர் அந்தப் பட்டணத்திலேயே வாழ்ந்து வந்தார். பிறகு, அவர் யாத்திரை புறப்பட்டார். பெருமாளுடைய கோயில்களையெல்லாம் காணவேண்டுமென்று அவருக்கு ஆசை உண்டாயிற்று. கால் நடையாகவே அவர் பிரயாணம் செய்தார். ஒவ்வொரு கோயிலிலும் மூன்று நாள்கள் தங்கியிருந்து பெருமாளைப் பாடினார். தம் கையிலுள்ள தாளத்தைத் தட்டிக்கொண்டு அவர் பக்தியோடு பாடுவார்.

பல பேர் அவருடைய பாடலைக் கேட்டு ஆனந்தமடைந் தார்கள்.

அவர் ஒரு சமயம் வெகுதூரம் நடக்கவேண்டியிருந்தது. ஒரு பெருமாள் கோயிலை விட்டு மற்றொன்றிற்குப் போவதற்குப் பல நாட்கள் ஆயின. வழியிலே ஒரு பெரிய கானகம் இருந்தது. அதற்குள் புகுந்து அவர் நடந்துகொண்டே இருந்தார். இரண்டு மூன்று நாள்கள் ஆகியும் அவரால் அந்தக் கானகத்தைக் கடக்க முடியவில்லை. அந்த மூன்று நாள்களும் அவர் பட்டினி. அவருக்கு உணவு



கிடைக்கவில்லை. நான்காம் நாள் அவர் ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ்ப் படுத்தார். உச்சிவேளையாகிவிட்டபடியால் அவரால் நடக்க முடியவில்லை. பசியும் வெயிலும் அவரை வாட்டின. அதனால், அவர் ஆலமரத்தடியில் படுத்து இளைப்பாற விரும்பினார்.

அந்தச் சமயத்தில் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'யாராவது இப்பொழுது உணவு கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று அவர் எண்ணினார். அப்படி எண்ணிக்கொண்டிருக்கும்போதே அங்கே ஒருவர் வந்தார்.

தலையிலே இருந்த மூட்டையை எடுத்து அவிழ்த்தார். புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், தயிர்ச்சாதம் எல்லாம் எடுத்துப் பெருமாள் பக்தரின் முன்னால் வைத்தார். பக்தரும் அவற்றை ஆவலோடு சாப்பிடத் தொடங்கினார். அந்த உணவு அமுதம் போல் இருந்தது. அவர் நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தார். உணவு கொடுத்த வருக்கு நன்றி தெரிவிக்க விரும்பினார். ஆனால், அவரைக் காணவேயில்லை. அவர் கானகத்தில் மறைந்து போய் விட்டார்.



பெருமாள் பக்தர் தம்முடைய எண்ணம் பலித்ததை அறிந்து சந்தோஷப்பட்டுக்கொண்டே அங்கிருந்து கிளம் பினார். அந்தக் கானகத்தைக் கடந்து வெளியில் வரும் போது அங்கோர் இடத்தில் ஒரு பெரிய மாமரம் இருந் தது. அதில் நல்ல மாம்பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. பெருமாள் பக்தருக்கு மாம்பழத்தின்மேல் ஆசை ஏற் பட்டது. அதனால், ‘இந்த மாம்பழங்களிலே மூன்று பழங்கள் எனக்கும் கிடைக்க வேண்டும்’ என்று வாய் விட்டுச் சொன்னார். அப்படிச் சொல்லும்போதே மூன்று மாம்பழங்கள் கீழே விழுந்தன. பக்தர் அவற்றை எடுத்து

ஆவலோடு சாப்பிடத் தொடங்கினார். 'நான் நினைத்தாலும் சொன்னாலும் அதன்படியே ஆகிறது' என்று அவர் எண்ணி மகிழ்ச்சியடைந்தார்.

பிறகு, அவர் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு, ஒரு சிறிய கிராமத்தின் வழியாக நடந்தார். அவர் தெருவிலே தாளத்தைத் தட்டிக்கொண்டே பாட்டுப் பாடிக்கொண்டு வருவதைக் கண்ட குறும்புச் சிறுவர்கள் சில பேர் சேர்ந்து கொண்டு, ஒரு வேடிக்கை செய்ய விரும்பினார்கள். ஒருவன் காக்கை வலிப்பு வந்தவனைப் போலத் தெருவிலே படுத்துக் கொண்டான். கைகளையும் கால்களையும் விலுக்கு விலுக்கென்று குறுக்கியும் நீட்டியும் உதறிக்கொண்டு, காக்கை வலிப்பு வந்தவனைப் போலப் பாசாங்கு செய்தான். மற்றவர்கள் அவனைச் சுற்றி நின்றார்கள். அவன் கைகளையும் கால் களையும் அழுத்திப் பிடிக்க முயன்றார்கள்.

தெருவழியாக வந்த பெருமாள் பக்தர் இந்தக்காட்சியைக் கண்டார். கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டிருந்த பையனைப் பார்த்ததும் அவனைப்பற்றி மற்ற சிறுவர்களிடம் விசாரித்தார். 'இவனுக்குக் காக்கை வலிப்பு வந்திருக்கிறது. அதனால்தான் கைகளும் கால்களும் இப்படி இருக்கின்றன' என்று அவர்கள் சொன்னார்கள். பெருமாள் பக்தருக்கு இரக்கம் உண்டாயிற்று.

'பெருமாளே, இவனுக்கு நோயெல்லாம் தீர வேண்டும். இவன் உடனே சுகம் பெற்று எழுந்தோடவேண்டும்' என்று சொல்லிவிட்டு, அந்தப் பையன்மேல் தம் கையை வைத்துத் தடவினார். உடனே அந்தப் பையன் சிரித்துக்கொண்டே எழுந்து ஓட்டம் பிடித்தான். மற்ற சிறுவர்களும் சிரித்துக் கொண்டே அவனைத் தொடர்ந்து ஓட்டம் பிடித்தார்கள். 'பெருமாள் பக்தருக்குக் கோவிந்தா' என்று கூவிக்கொண்டே அவர்கள் ஓடினார்கள்.

சிறுவர்கள் கேலி செய்து சிரித்துக்கொண்டு ஓடுவதைப் பெருமாள் பக்தர் அறிந்துகொள்ளவில்லை. தமது வாக்குப்

பலித்ததை எண்ணி எண்ணி அவர் குதூகலமடைந்தார். வழியிலே நடந்த அந்த மூன்று சம்பவங்களைப்பற்றியும் திருப்பித் திருப்பி நினைத்துப் பார்த்தார். கானகத்தின் மத்தியிலே பசியால் வாடும்போது அவர் நல்ல உணவு வேண்டும் என்று நினைத்தவுடன் யாரோ ஒருவர் அவருக்குச் சுவையான உணவு கொண்டுவந்து கொடுத்தார். பிறகு, மாமரத்தில் தொங்கிய மூன்று பழங்கள் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று சொன்னவுடனே அந்தப் பழங்கள் மரத்தி லிருந்து கீழே அவருக்கு முன்னால் விழுந்தன. இப்பொழுது அந்தப் பையன் சுகப்பட்டு எழுந்து ஓடவேண்டுமென்று சொன்னவுடனே, கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டு தரையில் கிடந்த பையன் சிரித்துக்கொண்டே எழுந்து ஓடிவிட்டான்.

இவற்றையெல்லாம் நினைக்க நினைக்கப் பெருமாள் பக்தருக்குக் கர்வம் ஓங்கி வளர்ந்தது. தமது சக்தியைப்பற்றி எண்ணி எண்ணிப் பெருமை கொண்டார். பழைய காலத்தி லிருந்த பெரிய சித்தர்கள் சொன்னவையெல்லாம் உடனே பலித்தனவல்லவா? அவர்களைப்போலவே தாமும் ஒரு சித்தராக மாறிவிட்டதாக அவர் எண்ணிக்கொண்டார். அந்த எண்ணம் வரவர அவருக்குப் பெருமாளைப்பற்றிய நினைப்புக் குறைய லாயிற்று. தம்மால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று எண்ணிக்கொண்டு மகிழ்ச்சியடைந்தார். தம்முடைய பெயரை மாம்பழச் சித்தர் என்று வைத்துக்கொண்டார். மாம்பழம் விழ வேண்டுமென்று அவர் சொன்னதும் மூன்று மாம்பழங்கள் தமக்கு முன்னால் விழுந்த அற்புதத்தைப்பற்றி அவர் அந்த ஊரிலே எல்லோரிடமும் சொல்லத் தொடங்கினார்.

அந்த ஊரிலே குப்பன் என்று ஒருவன் இருந்தான். அவன் முழுச் சோம்பேறி. ஒரு வேலையும் செய்யமாட்டான். அவனுடைய தாயார் கூலிவேலை செய்து பணம் சம்பாதிப்பாள். அதனால் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அவன் வயிற்றை நிறைத்து வந்தான். அவன் சோம்பேறி மட்டுமல்ல; குறும் புக்காரன். மற்றவர்களுக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்துக்

கொண்டே இருப்பான். தேள்கொடுக்கு மாதிரி அவன் மற்றவர்களுக்குத் துன்பம் கொடுத்ததால் அவனை எல்லோரும் கொடுக்குக் குப்பன் என்று கூப்பிடுவார்கள். அவன் மாம் பழச் சித்தரைக் கண்டதும் அவருடைய முக்கியமான சீடன் ஆகிவிட்டான். அவரைப் பிடித்துக்கொண்டால் சுகமாகச் சாப்பிட்டுக்கொண்டு சந்தோஷமாக இருக்காலமென்று அவனுக்குத் தோன்றியது.

அவன் மாம்பழச்சித்தரை அழைத்துக்கொண்டு வேறோர் ஊருக்குப் போனான். அங்கே போய் மாம்பழச்சித்தரின் சக்தியைப்பற்றி எல்லோரிடமும் விமரிசையாகப் பேசினான். அவர் சொன்னால் சொன்னபடி நடக்கும் என்றும் கூறினான். அவன் பேச்சைக் கேட்டதும் பல பேர் மாம்பழச் சித்தரிடம் வந்து, அவர் பாதங்களில் விழுந்து வணங்கினார்கள். தங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

அப்படி வருகின்றவர்களுக்கெல்லாம் ஏதாவது ஓர் அற்புதம் செய்து காண்பிக்கவேண்டும் என்று கொடுக்குக் குப்பன் ஆசைப்பட்டான். 'சுவாமி, தாங்கள் மாம்பழம் விழ வேண்டும் என்று சொன்னீர்கள்; உடனே மூன்று மாம்பழங்கள் விழுந்தன. அதைப் போல, இங்கு வருகின்ற மக்களுக்கு முன்னாலும் ஏதாவது ஓர் அற்புதம் செய்து காண்பித்தால்தான் அவர்கள் உங்களை மதிப்பார்கள்' என்று அவன் மாம்பழச் சித்தரிடம் கூறினான். என்ன அற்புதம் செய்யலாமென்று மாம்பழச் சித்தருக்குத் தோன்றவில்லை. 'சுவாமி, நீங்கள் சொன்னவுடன் ஒரு தட்டிலே தேங்காய் பழம் வரவேண்டும். இந்த அற்புதத்தைச் செய்யுங்கள்' என்று யோசனை கூறினான் சீடன்.

மாம்பழச்சித்தர் இந்த அற்புதத்தை முதலில் தமது சீடனுக்கு முன்னால் மட்டும் செய்துபார்க்க முயன்றார். 'தேங்காய் பழமே வா' என்று கூறிக்கொண்டே அவர் கைகளை நீட்டினார். ஆனால், தேங்காய் பழம் வரவில்லை. இதைக் கண்டு மாம்பழச் சித்தர் ஏமாற்றமடைந்தார்; மனம் தளர்ந்தார். ஆனால், கொடுக்குக் குப்பன் மனம் தளரவில்லை. 'சுவாமி,

தேங்காய் பழம் வருவதற்கு நான் ஒரு தந்திரம் செய்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்' என்று உற்சாகத்தோடு அவன் சொன்னான்.

'நீ என்ன தந்திரம் செய்ய நினைக்கிறாய்?' என்று கேட்டார் குருநாதர்.

'நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய திரையைப் போட்டுவிடுகிறேன். அந்தத் திரைக்குப் பின்னால் மறைந்து நான் உட்கார்ந்துகொள்கிறேன். பக்கத்தில் பல தட்டுகளில் தேங்காய் பழமும் வைத்துக்கொள்கிறேன். நீங்கள் 'தேங்காய் பழமே வா' என்று சொல்லும் போதெல்லாம் ஒரு தட்டை வெளியில் தள்ளுகிறேன்' என்றான் கொடுக்குக் குப்பன்.



'வருகின்றவர்களை இப்படி ஏமாற்றலாமா?' என்று தயக்கத்தோடு கேட்டார் மாம்பழச்சித்தர்.

'எல்லோரும் உங்களைப்பற்றிப் பெருமையாக நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்பொழுது நீங்கள் நான் சொல்லுகிற

படி செய்யாவிட்டால் உங்களை யாரும் மதிக்கமாட்டார்கள்' என்று எடுத்துக் காட்டினான் கொடுக்குக் குப்பன்.

அதனால் மாம்பழச் சித்தரும் அவனுடைய யோசனையை ஏற்றுக்கொண்டார். கொடுக்குக் குப்பன் தந்திரம் நன்றாகப் பலித்தது. 'தேங்காய் பழமே வா' என்று மாம்பழச் சித்தர் கூறிக் கையை நீட்டும்பொழுதெல்லாம் திரைக்குப் பின்னால் இருந்து தேங்காய் பழத்தட்டமொன்று வெளியே வந்தது. அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். மாம்பழச் சித்தரின் கால்களில் பய பக்தியோடு விழுந்து வணங்கினார்கள். ஏராளமாகப் பொன்னும் பொருளும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். தூரத்திலுள்ள ஊர்களிலிருந்தும் மக்கள் ஆயிரக்கணக்காக வர ஆரம்பித்தார்கள்.

பணம் நிறையக் குவிகின்றதைக் கண்டு கொடுக்குக் குப்பன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். பெரிய ஆசிரமம் ஒன்றைக் கட்டினான். அதில் இருந்துகொண்டு மிகவும் ஆடம்பரமாக வாழத்தொடங்கினான். மாம்பழச் சித்தரும் பெருமானை மறந்துவிட்டு ஆடம்பரத்திலே மூழ்கினார்.

இவ்வாறு கொஞ்ச காலம் கழிந்தது. கொடுக்குக் குப்பனுக்குக் குருநாதரின் பீடத்தில் தானே அமரவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதனால் அவன் மாம்பழச் சித்தரை நோக்கி, 'சுவாமி, இந்தத் தேங்காய் பழம் வரவழைக்கிற அற்புதத்தை நான் சில நாள்களுக்குச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். வருகின்ற மக்களுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு, 'தேய்காய் பழமே வா' என்று நான் சொல்லுகிறேன். நீங்கள் திரை மறைவிலே இருந்துகொண்டு தட்டத்தை அனுப்புங்கள்' என்று கேட்டுக்கொண்டான்.

மாம்பழச் சித்தர் முதலில் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், கொடுக்குக் குப்பன் அவரை விடவில்லை. 'நீங்கள் சம்மதிக்காவிட்டால் நான் இந்த அற்புதத்தின் ரகசியத்தை வெளியில் சொல்லிவிடுவேன்' என்று பயமுறுத்தினான். வேறு

வழியில்லாததால் மாம்பழச் சித்தர் அவன் கூறியபடியே செய்ய ஒப்புக்கொண்டார். அத்துடன் அன்று மாலையில் வந்து கூடிய மக்களுக்கு முன்னால் அவர் தமது சீடனைப்பற்றிப் பெருமையாகவும் புகழ்ந்து பேசினார். 'நமது சீடன் இப்பொழுது ஒரு சித்தனாக மாறிவிட்டான். நான் செய்கின்ற அற்புதமெல்லாம் அவனும் செய்வான். அவனை நீங்கள் இனிமேல் கொடுக்குச் சித்தர் என்று அழைக்க வேண்டும்' என்று அவர் சொன்னார்.

அடுத்த நாள் முதல் கொடுக்குச் சித்தன் தனது குரு நாதருடைய ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டான். 'தேங்காய்ப் பழமே வா' என்று சொல்லுவான். மாம்பழச் சித்தர் திரை மறைவில் இருந்துகொண்டு தட்டத்தைத் தள்ளுவார். இதைக் கண்டு எல்லோரும் கொடுக்குச் சித்தனை வணங்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறு சில நாள்கள் நடந்தன. கொடுக்குச் சித்தனின் பெருமை எங்கும் பரவிற்று. அவன் இனிமேல் குருநாதருடைய தயவை எதிர்பார்க்க வேண்டியதில்லை என்று தெரிந்து கொண்டான். அவரை எப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான்.

ஒரு நாள் இரவு மாம்பழச் சித்தர் தமது அறையிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். கொடுக்குச் சித்தன் அந்த அறைக்குள்ளே மெதுவாக நுழைந்து, மாம்பழச் சித்தருடைய வாயில் துணியை வைத்து அடைத்துவிட்டான். அத்துடன் அவரை ஒரு கயிற்றால் நன்றாகக் கட்டினான். யாரும் அறியாதபடி அவரைத் தூக்கிக்கொண்டு போய்ப் பக்கத்தில் இருந்த ஆற்றில் போட்டுவிட்டான்.

அடுத்த நாள் காலையில் ஆசிரமத்திற்கு வந்தவர்களிடமெல்லாம் கொடுக்குச் சித்தன், 'குருநாதர் தமது உடம்போடு தெய்வலோகம் போய்விட்டார்' என்று சொன்னான். மாம்பழச் சித்தர் ஆற்றில் மூழ்கி இறந்து போயிருப்பார் என்றும், அவருடைய உடம்பை முதலைகள் தின்றிருக்கு

மென்றும் அவன் நினைத்தான். ஆனல், அவன் நினைத்த மாதிரி மாம்பழச் சித்தர் சாகவில்லை. அவர் எப்படியோ ஒரு பாறையைப் பிடித்துக்கொண்டு காலை நேரம் வரை ஆற்றுக்குள்ளயே மிதந்துகொண்டிருந்தார். அதிகாலையில் அந்தப் பக்கம் வந்த சிலர், அவர் ஆற்று வெள்ளத்திற்குள் தத்தளிப்பதைக் கண்டு ஓடிவந்து அவரைக் காப்பாற்றினர்கள்.

மாம்பழச் சித்தர் உயிர் தப்பிப் பிழைத்து வருகிருர் என்ற சேதியைக் கேட்டவுடனே கொடுக்குச் சித்தன் ஓட்டம் பிடித்தான். அப்படிப் போகும் போதே, தேங்காய் பழத்தட்டு வருகின்ற ரகசியத்தையும் வெளியே சொல்லி விட்டுப் போய்விட்டான். அவன் எங்கு போனன் என்று யாருக்கும் தெரியவில்லை.

தேங்காய் பழம் வரவழைக்கும் தந்திரத்தைத் தெரிந்த வுடனே எல்லோரும் மாம்பழச் சித்தரை இகழ்ந்து பேச ஆரம்பித்தார்கள். அதைக் கேட்டு மாம்பழச் சித்தர் பெரிதும் அவமானம் அடைந்தார். பெருமாளை மறந்துவிட்டதற்காகவும் மனம் வருந்தினர். தாம் செய்தது பெரிய குற்றம் என்றும் தெரிந்து வருந்தினர். பக்தி செய்வதை விட்டுவிட்டுச் சித்து விளையாட்டில் இறங்கினல் கடவுளுடைய அருள் கிடைக்காது என்பதையும் தெரிந்துகொண்டார். அதனல் அவர் அப் பொழுதே அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு ஒரு பெரிய கானகத்திற்குச் சென்றுர். அங்கே பெருமாளை நினைத்துக் கொண்டு தவம் செய்துகொண்டே காலத்தைக் கழித்தார்."

இவ்வறு கதை சொல்லிக்கொண்டே மாயக்கள்ளன் திரும்பிப் பார்த்தான். ஆத்மரங்கன் இன்னும் தூங்கவில்லை. மலையிலே முக்கால் பாகம் ஏறியாகிவிட்டது. மலையுச்சியில் இருந்த கோபுரத்தின் மேல்பாகங்கூடக் கண்ணுக்குத் தெரிந்துவிட்டது. அதனல் மாயக்கள்ளன் கொஞ்சம் தளர்ச்சி யடைந்தான். இருந்தாலும் தன்னுடைய தந்திரத்தை விடவில்லை. "மாம்பழச் சித்தர் பெருமாளை நினைத்து மறு படியும் பாட்டுப் பாட ஆரம்பித்தார். அவருடைய பாட்டு

கானகத்திலே எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருந்தது" என்று இப்படிக் கதையைக் கொஞ்சம் வளர்த்தினன். அதற்குள் ஆத்மரங்கனுக்குக் கண் சுழல ஆரம்பித்துவிட்டது. அவன் மெதுவாகக் கீழே படுத்து உறங்கிவிட்டான். மாயக்கள்ளனுக்கு இந்தத் தடவையும் வெற்றி கிடைத்து விட்டது. அவன் குதூகலத்தோடு ஆத்மரங்கனை மலையடிவாரத் திற்குத் தூக்கிச் சென்றுன்.



# 13. மாயக்குரங்கு

மலையடிவாரத்தில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த ஆத்மரங்கன் திடீரென்று விழித்தெழுந்தான். மலையுச்சியை அடைய வேண்டுமென்ற ஆசை முன்னைவிட அதிகமாக உண்டாயிற்று. மலையுச்சிக்குச் சென்று, தாய்தந்தையரை எப்படியும் காணவேண்டும் என்று அவன் உறுதி கொண்டான். இத்தடவை அவன் ஒரு சந்நியாசியாக உருவமெடுத்தான். காவி உடை அவன் உடம்பை அலங்கரித்தது. அவன்



உறுதியோடு மலைப்படியில் காலெடுத்து வைத்தான். வழக்கம் போலக் கதை சொல்லுவதற்கு மாயக்கள்ளன் வந்து சேர்ந்தான்.

சந்நியாசி என்றாலே மாயக்கள்ளனுக்கு மிகுந்த பயம். உண்மையான சந்நியாசியிடத்திலே தன் விருப்பம்போல் நடக்க முடியாது என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அவன் சந்நியாசிகளையும் சுலபமாக விட்டுவிடமாட்டான். தந்திரமாக அவர்களையும் ஆட்டி வைப்பான். அவர்களையும்

தன்னுடைய மாயவலைக்குள் விழும்படி செய்ய முயல்வான். அவனுக்கு எத்தனையோ தந்திரங்கள் தெரியும். அந்தத் தந்திரங்களிலே அவனுக்கு உதவி செய்வதற்கு ஐந்து வேடர்கள் இருந்தார்கள். அவர்கள் பொல்லாதவர்கள்; இரக்கமே இல்லாதவர்கள். தங்கள் இஷ்டப்படியே நடப்பவர்கள். மாயக்கள்ளன் யாரிடத்தில் வேண்டுமானாலும் இந்த ஐந்து பேர்களையும் ஏவிவிடுவான். சந்நியாசியிடத்திலும் தன்னுடைய



முழுபலத்தையும் செலுத்துவான். இவ்வாறு செய்து ஆத்மரங்கனை ஏமாற்றித் தனது வலைக்குள் போட முயற்சி செய்தான்.

சந்நியாசியாக உருவமெடுத்த ஆத்மரங்கன் முதல் படியிலே காலெடுத்து வைத்தான். மாயக்கள்ளன் கதையை ஆரம்பித்தான். அந்தக் கதையை ஆத்மரங்கன் நன்றாகக் கேட்டுக்கொண்டே வந்தாலும் அவன் அதிலேயே மூழ்கி விடவில்லை. கதைக்கு மத்தியிலேயே அவன் அடிக்கடி தனது பெற்றோர்களை நினைத்துக்கொண்டான். அவர்களை எப்படியும்

அடைந்தே தீரவேண்டும் என்று மறுபடியும், மறுபடியும் உறுதி செய்துகொண்டான்.

இவ்வாறு அவன் உறுதி செய்துகொள்வதைக் கண்டு மாயக்கள்ளன் திகைத்துப் போனன். அவன் தன்னுடைய கதையின் போக்கை அடிக்கடி மாற்றினன். ஆனல், ஆத்ம ரங்கன் கொஞ்சங்கூடச் சோர்வடையாமல் இருந்தான். நன்ருக விழித்துக்கொண்டே யிருந்தான். அதனல் மாயக்கள்ளன் தன்னுடைய தந்திரங்களையே மாற்ற வேண்டியதாயிற்று. அவனுடைய மாயவலைகள் எல்லாவற்றையும் ஆத்மரங்கனுக்கு முன்னல் விரித்து வைக்கத் தொடங்கினன்.

முதலில் கொஞ்ச நேரம் கதை சொல்லிவிட்டு, அவன் ஆத்மரங்கனைக் கடைக்கண்ணல் பார்த்தான். மலையில் பாதி உயரம் ஏறியாகிவிட்டது. ஆனல், ஆத்மரங்கன் களைப்பில்லாமல் சுறுசுறுப்போடு மலையின் மேலே ஏறிக்கொண்டிருந்தான். அவன் கண்களிலே தூக்கத்திற்கான அறிகுறிகளே தென் படவில்லை. அதனல் மாயக்கள்ளன் புதிய சூழ்ச்சி ஒன்றைச் செய்ய ஆரம்பித்தான்.

உடனே ஆத்மரங்கனுக்கு முன்னல் மலைப்படிகளில் பல தங்கத் தட்டுகள் தோன்றின. ஒவ்வொரு தட்டும் மிக அழகாக இருந்தது. ஒரு தட்டிலே நிறைய ஜிலேபி இருந்தது. மற்ருெரு தட்டிலே ஹல்வா இருந்தது. இவ்வாறு ஒவ்வொரு தங்கத்தட்டிலும் ஒரு வகையான பட்சணம் இருந்தது. சில தட்டுகளிலே மாம்பழம், பலாப்பழம், ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை முதலிய பழவகைகள் இருந்தன. குடிப்பதற்கு வேண்டிய இனிய பானங்களை ஏந்திக்கொண்டு சில பெண்கள் வந்தார்கள். நாக்குக்கு ருசியான பொருள்கள் ஏராளமாக இருந்தன.

மாயக்கள்ளன் அவற்றை ஆத்மரங்கனுக்குச் சுட்டிக் காண்பித்தான், "ஆத்ரமங்கா, மலைப்படிகளில் ஏறி ஏறி நீ களைத்துப் போயிருப்பாய்; உனக்குப் பசியாக இருக்கும். இதோ பார், சுவையான பட்சணங்களும் பழங்களும் இருக்கின்றன.

இவற்றைச் சாப்பிடு. வெள்ளிக் கோப்பைகளிலே தேன் இருக்கின்றது; இனிய சர்பத்துகளெல்லாம் இருக்கின்றன. இவற்றைக் குடித்தால் தாகம் தீர்ந்துபோகும். வா சற்று உட்கார்" என்று நயமாகச் சொன்னான்.

"நான் உட்காரவே மாட்டேன். எனது தாய் தந்தையரைப் பார்க்கும் வரையில் நான் எங்கும் தங்க முடியாது. எனக்குப் பசி ஒரு பொருட்டல்ல. பசியைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன்" என்று ஆத்மரங்கன் சொல்லிக்கொண்டே மலை யேறினான். அவன் நிற்கவே இல்லை.



'சுவையான பட்சணங்கள் இருக்கின்றன. அவற்றை விடலாமா?' என்று மறுபடியும் மாயக்கள்ளன் சொன்னான்.

"நாக்கு ருசியைப் பார்க்க எனக்கு நேரமில்லை. அந்த ருசிக்கு ஆசைப்பட்டால் என்னுடைய நோக்கம் நிறைவேறாது. நான் மலையுச்சியை அடையமுடியாது" என்று உறுதியாகச் சொல்லிவிட்டு ஆத்மரங்கன் அடியெடுத்து வைத்தான்.

மாயக்கள்ளனுடைய தந்திரம் பலிக்காமல் போய்விட்டது. அவன் சொன்னபடி ஆத்மரங்கன் பட்சணங்களைச் சாப்பிட் டிருந்தால் அவன் உடனே தூங்கியிருப்பான். ஏனென்றால்,

அவற்றிலெல்லாம் மாயக்கள்ளன் மயக்க மருந்தைப் போட்டிருந்தான். ஆத்மரங்கன் தனது உறுதியால் தப்பித்துக் கொண்டான்.

ஆத்மரங்கன் மேலே தொடர்ந்து நடந்தான். மாயக்கள்ளன் கதையைச் சொல்லியாவது அவனைத் தூங்க வைக்க முயற்சி செய்யலாம் என்று கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான். ஆத்ரமங்கனுக்குத் தூக்கத்தைக் கொடுக்கும்படி கதையை வளைத்து வளைத்துச் சொல்லி அவன் சூழ்ச்சி செய்து பார்த்தான். ஆனால், அந்தச் சூழ்ச்சியாலெல்லாம் ஆத்மரங்கன் ஏமாந்துவிடவில்லை. மலையுச்சியை யடையவேண்டும் என்ற உறுதி அவன் கண்களிலே ஜொலித்தது. அந்தக் கண்கள் அவனுடைய சந்நியாசிக் கோலத்திற்கு ஒரு தனிப்பட்ட அழகையும் உயர்வையும் கொடுத்தன.

மலையின் முக்கால்வாசி தூரம் ஏறியாகிவிட்டது. மாயக் கள்ளன் வேறு தந்திரங்களைக் கைக்கொள்ளலானான்; அவனுடைய மாயையால் திடீரென்று பெரிய புயல் வீசிற்று. பயங்கரமாக இடியிடித்தது. உலகமே நடுங்கும்படியாக இடியின் ஓசை நாலாபக்கமும் எழுந்தது. மழை தாரைதாரையாகப் பெய்தது.

"ஆத்மரங்கா, பயங்கரமாகப் புயல் வீசுகிறது; இடி இடிக்கிறது. ஆதலால், இதோ பக்கத்திலுள்ள குகைக்குள்ளே கொஞ்சநேரம் தங்குவோம் வா" என்று மாயக்கள்ளன் நயமாக அழைத்தான்.

"மலையுச்சியை அடையும் வரையில் நான் எங்கும் தங்க மாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னான் ஆத்மரங்கன்.

"புயற்காற்றிலே மரங்கள் சடசடவென்று முறிந்து விழுகின்றன. குகைக்குள்ளே போய்த் தங்காவிட்டால் ஒடிந்து விழுகின்ற மரங்கள் நம்மை நொறுக்கிவிடும்" என்று மாயக் கள்ளன் சொல்லிப் பார்த்தான்.

"மரம் விழுந்தாலும் சரி, இந்த மலையே புரண்டு விழுந்தாலும் சரி, நான் நிற்கமாட்டேன்."

"இடி பயங்கரமாக இடிக்கிறதே. தலைமேல் இடி விழுந்தால் என்ன செய்வாய்?"

"தாயையும் தந்தையையும் நினைத்துக்கொண்டு இருக்கும் என்னை இடி ஒன்றும் செய்யாது."

இப்படிச் சொல்லிவிட்டு ஆத்மரங்கன் இடிக்கும், மழைக்கும் கவலைப்படாமல் மலைப்படிகளிலே காலெடுத்து வைத்தான். தனது தந்திரப் பலிக்கவில்லை என்றுணர்ந்த மாயக்



கள்ளன் மறுபடியும் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான்.

ஆத்மரங்கன் மலை உச்சியின் அருகிலேயே வந்துவிட்டான். உச்சியிலிருந்த கோபுரத்தின் மேலிருந்த கலசங்களும் கண்ணுக்குத் தெரியலாயின. அந்தச் சமயத்தில் மாயக்கள்ளன் வேறொரு சூழ்ச்சி செய்தான். உடனே எதிரிலே பல அழகான பெண்கள் தோன்றினார்கள். அவர்களைப் போன்ற அழகான

பெண்களைப் பார்க்க முடியாது. சிலர் இனிமையாகப் பாடினார்கள். சிலர் நாட்டியம் ஆடினார்கள். சிலர் ஆத்மரங்கனுக்குப் பக்கத்திலே வந்து கண்களைச் சிமிட்டினார்கள்.

"ஆத்மரங்கா, இந்தப் பெண்களுடைய நடனத்தைக் கொஞ்ச நேரம் பார்க்கலாம் வா" என்று மாயக்கள்ளன் அழைத்தான்.

"நடனமும் வேண்டாம், பாட்டும் வேண்டாம். நான் என் பெற்றோர்களைப் பார்க்கவேண்டும். நான் இங்கே நிற்க முடியாது" என்றான் ஆத்மரங்கன்.

"அதோ பார். அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! அவளை நீ கல்யாணம் செய்துகொள்" என்று தேனொழுகப் பேசினான் மாயக்கள்ளன்.

"நான் சந்நியாசி. உலக ஆசைகளைத் துறந்தவன். எனக்குக் கலியாணம் எதற்கு?" என்று சொல்லிவிட்டு மேலும் நடந்தான் ஆத்மரங்கன். மாயக்கள்ளனுடைய தந்திரங்கள் பலிக்கவில்லை.

ஆனால், அவன் ஆத்மரங்கனை விட்டுவிடவில்லை. கதை சொல்லிக்கொண்டே அவனுடன் போனான். மலையுச்சியில் இருந்த கோபுர வாயிலுக்குப் பக்கத்தில் சென்றுவிட்டான் ஆத்மரங்கன். அப்பொழுது அவனுக்கு மாயக்கள்ளனுடைய தந்திரங்களெல்லாம் தெரியலாயின. மாயக்கள்ளன் யார் என்பதையும் அவன் அறிந்துகொண்டான்.

"மாயக்கள்ளா, நீதானா எனக்குள்ளே இருந்துகொண்டிருக்கும் மனக்குரங்கு. உன்னைத்தான் மனக்குரங்கு என்றும் மனப்பேய் என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இப்பொழுது தெரிகிறது. நீதான் மாயை. என்னை ஏமாற்றியிருக்கிறாய். உன்னை இப்பொழுதே கொன்றுவிடுகின்றேன் பார்" என்று ஆத்மரங்கன் கூவினான். தனது கைகளை ஓங்கினான்.

மாயக்கள்ளன் பயந்து நடுங்கினன். "ஆத்மரங்கா, நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னை ஒன்றும் செய்யாதே" என்று மாயக்கள்ளன் வேண்டிக்கொண்டான்.

"கதை சொல்வதாக நீ என்னை எத்தனையோ முறை ஏமாற்றியிருக்கிருய். உன்னை நான் உயிரோடு விடமாட்டேன்."



"உனக்கு எத்தனையோ கதைகளை அழகழகாகச் சொன்னேனே! என் மீது உனக்கு இரக்கம் இல்லையா? இனிமேல் நான் உன்னை ஏமாற்ற மாட்டேன். நீ என்னை நன்ருகத் தெரிந்து கொண்டாய். என்னை அடக்கியும் விட்டாய். ஆதலால், நீ சொல்லுகிறபடியெல்லாம் கேட்கிறேன். இந்தக் கோபுர வாயிலைத் தாண்டிப்போக உனக்கு உதவியும் செய்கிறேன். என்னைக் கொல்ல வேண்டாம்" என்று மாயக்கள்ளன் மேலும் கெஞ்சினன்.

"என் பெற்றேரைக் காண்பதற்கு மலையுச்சிக்கு வராமல் இதுவரை நீதான் தடுத்திருக்கிருய். அதற்காக உனக்குத் தண்டனை கொடுக்க வேண்டாமா?"

"இதுவரையிலும் நான் தடுத்தது உண்மைதான். இனி நான் அப்படிச் செய்யமாட்டேன். கோபுரவாயிலைத் தாண்டி உள்ளே போக நான் உதவி செய்கிறேன். என்னை ஒன்றும் செய்யாதே" என்று வேண்டிக்கொண்டான் மாயக்கள்ளன்.

ஆத்மரங்கனுக்கு இரக்கம் உண்டாயிற்று. மாயக்கள்ளனை அடக்கிக் கட்டுக்குள் வைத்திருந்தால் அவன் உதவி செய்வான் என்றும் அவன் தெரிந்துகொண்டான்.

அதனல் அவன் மாயக்கள்ளனைத் தண்டிக்கவில்லை. "நான் உன்மேல் ஏறிக்கொள்வேன். நீ எனக்கு வாகனமாக

ஆகவேண்டும்" என்றான் ஆத்மரங்கன். அப்படியே செய்வதாக மாயக்கள்ளன் ஒப்புக்கொண்டான்.

ஆத்மரங்கன் மாயக்கள்ளன்மேல் ஏறிக்கொண்டான். மாயக்கள்ளனுடைய வாயினில் கடிவாளத்தைப் போட்டுப் பிடித்துக்கொண்டான். இவ்வாறு கோபுரவாயிலைக் கடந்து ஆத்மரங்கன் உள்ளே சென்றான்.

அங்கே எங்கும் பிரகாசமாக இருந்தது. நவரத்தினங்களெல்லாம் பதித்த ஆசனத்தில் அவனுடைய தாயும் தந்தையும்



அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் சென்று ஆத்மரங்கன் அவர்கள் பாதத்தில் வீழ்ந்து வணங்கினான். அந்த இடத்திற்கு வந்ததும் மாயக்கள்ளன் சாம்பலாகிப் போய்விட்டான்.

ஆத்மரங்கனை அவனுடைய பெற்றோர்கள் அன்போடு வரவேற்றார்கள். ஆத்மரங்கன் அவர்களோடு சந்தோஷமாக வாழத் தொடங்கினான். அது முதல் அவனுக்குத் துன்பமே கிடையாது. என்றும் அவனுக்கு இன்பமே. அவனுடைய வாழ்வு ஆனந்த வாழ்வாக மாறிற்று.